
தின பூமி
thinaboomi.com
பூமி: 31 சுற்று: 156 வைகாசி 15
RNI Regn. No.61494/94 MA / 36 / 2015-2017
மதுரை, வியாழன், மே 29, 2025
▸ சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



**அமெரிக்காவுடன் இணைந்தால் கனடாவுக்கு அதிநவீன பாதுகாப்பு: மீண்டும் சீண்டிய அதிபர் டிரம்ப்**
...2-ம் பக்கம்

**வீர சாவர்க்கரின் போராட்டத்தின் வரலாறை தேசம் ஒருபோதும் மறக்காது: பிரதமர் பெருமிதம்**
...3-ம் பக்கம்

**இறுதிக்கட்டத்தை நெருங்கும் ஐ.பி.எல்: குவாலிபையர் முதல் சுற்றில் இன்று பஞ்சாப், ஆர்.சி.பி. அணிகள் மோதல்**
...6-ம் பக்கம்





● சென்னை, திருவொற்றியூரில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில் ரூ.272 கோடியே 70 லட்சம் செலவில் அமைக்கப்பட்டுள்ள புதிய சூரை மீன்பிடி துறைமுகத்தை முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைத்தார். இந்நிகழ்ச்சியில் அமைச்சர்கள் அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், பி.கே.சேகர்பாபு, கலாநிதி வீராசாமி எம்.பி., எம்.எல்.ஏ.க்கள் சுதர்சனம், காதர்பாட்சா முத்துராமலிங்கம், துரை சந்திரசேகர், மீன் வளர்ச்சி கழக தலைவர் ந.கௌதமன், மீனவர் நலத்துறை செயலாளர் என்.சுப்பையன், மீன்வளத்துறை ஆணையர் இரா.கஜலட்சுமி, மாவட்ட கலெக்டர் ரஷ்மி சித்தார்த் ஜகடே ஆகியோர் கலந்து கொண்டனர்.

### அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கில்

# எதிர்க்கட்சியினரின் மலிவான அரசியல் தவிடுபொடியானது

## தீர்ப்பை வரவேற்று முதல்வர் மு.க.ஸ்டாலின் ஆவேசம்

சென்னை, மே 29-

**அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கில் ஐந்தே மாதத்தில் நீதியை காவல்துறை பெற்று தந்துள்ளதாக முதல்வர் மு.க.ஸ்டாலின் பெருமிதம் தெரிவித்துள்ளார். மேலும், இந்த விவகாரத்தில் மலிவான அரசியல் செய்யத் துடித்த எதிர்க்கட்சியினரின் எண்ணத்தைத் தவிடுபொடியாக்கி உள்ளோம் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.**

**குற்றவாளி என தீர்ப்பு**

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைது செய்யப்பட்ட ஞானசேகரன் குற்றவாளி என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

மாணவி புகாரளித்து ஐந்து மாதங்களில் விசாரணை முடிக்கப்பட்ட நிலையில், சென்னை மகளிர் கோர்ட்டு நீதிபதி ராஜலட்சுமி தீர்ப்பு வழங்கினார். அதன்படி ஞானசேகரன் மீது சுமத்தப்பட்ட 11 குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகி உள்ளது. ஞானசேகரனுக்கான தண்டனை விவரங்கள் வருகிற ஜூன் 2-ம் தேதி அறிவிக்கப்பட்டும் என்றும் அதுவரை அவரை நீதிமன்ற காவலில் வைக்கவும் நீதிபதி ராஜலட்சுமி உத்தரவிட்டுள்ளார்.

**நீதிமன்றத்துக்கு நன்றி**

இந்த நிலையில் அநீதிக்கு எதிராக வழக்கைத் துரிதமாக நடத்தி, ஐந்தே மாதத்தில் நீதியைப் பெற்றுத் தந்துள்ளது நமது காவல்துறை என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

சென்னை மாணவிக்கு இழைக்கப்பட்ட அநீதிக்கு எதிராக வழக்கைத் துரிதமாக நடத்தி, ஐந்தே மாதத்தில் நீதியைப் பெற்றுத் தந்துள்ளது நமது காவல்துறை. விசாரணை அதிகாரிகளுக்கும் அரசு வழக்கறிஞர்களுக்கும் மாண்பமை நீதிமன்றத்துக்கும் நன்றி.

**மலிவான அரசியல்....**

காவல்துறையினரிடம் நான் தொடர்ந்து கூறுவது: "குற்றம் நடக்கக் கூடாது; நடந்தால் எந்தக் குற்றவாளியும் தப்பக் கூடாது; விசாரணையைத் துரிதமாக நடத்தி, தண்டனை பெற்றுத் தர வேண்டும். குற்றங்களின் கூடாரமாக அன்று அரசை நடத்தி, இன்று அவதூறுகளை அள்ளித் தெளித்து, மலிவான அரசியல் செய்யத் துடித்த எதிர்க்கட்சியினரின் எண்ணத்தைத் தவிடுபொடியாக்கி உள்ளோம். சட்டநீதியையும் - பெண்கள் பாதுகாப்பையும் எந்நாளும் உறுதி செய்வோம்.

இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

# தங்க நகைக்கடன் விதிமுறைகளை மறுபரிசீலனை செய்ய வேண்டும்

## மத்திய நிதியமைச்சருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் கடிதம்

சென்னை, மே 29-

**தங்க நகைக்கடன் வழங்குவதற்கான நெறிமுறைகளில் கடுமையான கட்டுப்பாடுகளை விதித்து முன்மொழியப்பட்டுள்ள இந்திய ரிசர்வ் வங்கியின் வரைவு வழிகாட்டு நெறிமுறைகளை மறுபரிசீலனை செய்யக்கோரி மத்திய நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனுக்கு தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் கடிதம் எழுதியுள்ளார். கிராமப்புற கடன் விநியோக முறைக்கு கடுமையான இடையூறுகள் ஏற்பட வாய்ப்புள்ளதாக கடிதத்தில் அவர் தெரிவித்துள்ளார்.**

அக்கடிதத்தில், விவசாயிகளின் 2 லட்சம் ரூபாய் வரையிலான பயிர்க்கடன்களுக்கு தங்க நகைகளை ஈடாக ஏற்றுக்கொள்வதைத் தடுக்கும் வகையில் இந்திய ரிசர்வ் வங்கி வெளியிட்டுள்ள வரைவு வழிகாட்டு நெறிமுறைகள் குறித்து தமிழக அரசின் கடுமையான கவலை குறித்து தெரிவிக்கவே நான் இக்கடிதத்தை எழுதுகிறேன். தங்கத்தை பிணையாகப் பெற்று வழங்கப்பெறும் கடன்கள் சரியான நேரத்தில், குறுகிய கால பயிர்க்கடன்களுக்கான முதன்மை ஆதாரமாக விளங்குகிறது.

குறிப்பாக சிறு மற்றும் குறு விவசாயிகள், குத்தகைதாரர்கள் மற்றும் பால் பண்ணை, கோழிப்பண்ணை மற்றும் மீன்வளம் போன்ற தொழில்களில் ஈடுபட்டுள்ளவர்களுக்கு இந்த வரைவு நெறிமுறைகள் நடைமுறைப் படுத்தப்பட்டால் பாதிப்படையக்கூடும். அதனால் தமிழ்நாட்டிலும் தென்னிந்தியாவின் பல பகுதிகளிலும் கிராமப்புற கடன் விநியோக முறைக்கு கடுமையான இடையூறுகள் ஏற்பட வாய்ப்புள்ளது.

பெரும்பாலும் சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு முறையான நில உரிமைகள் அல்லது சரிபார்க்கக்கூடிய வருமான ஆவணங்கள் இல்லை. அத்தகைய விவசாயிகள் தங்கள் வீட்டுத் தங்கத்தை அடகு வைத்து வங்கிக் கடன்களைப் பெறுவதற்கான ஒரு சாத்தியமான மற்றும் கண்ணியமான வழியாக நகைக்கடன் உள்ளது. தற்போது முன்மொழியப்பட்டுள்ள நெறிமுறைகளால் எளிதாகக் கடன் பெறும் வழியை நேரடியாகக் குறைத்து, கடன் வாங்குபவர்கள் பெரும்பாலானோரை முறையான கடன் வழங்கும் நிதி நிறுவனங்களை நாடுவதை குறைத்துவிடும்.

நகைக்கடன் பெறும் எளிமையான வழிமுறைகள் கட்டுப்படுத்தப்படுவதால், கிராமப்புற கடன் வாங்குபவர்கள் அதிக வட்டி விகிதங்களை வசூலிக்கும் முறைசாரா மற்றும் ஒழுங்குபடுத்தப்படாத கடன் வழங்கும் நிறுவனங்களை நோக்கிச் செல்லவேண்டிய கட்டாயம் ஏற்படலாம். இது அவர்களை சுரண்டல் நடைமுறைகளுக்கு ஆளாக்குவதுடன் கடனை அதிகரிக்கும் மற்றும் முறையான நிதி சேர்க்கையில் ஏற்பட்ட முன்னேற்றத்தை தடுக்கும்.

மேலும், கடன் வழங்குபவர்கள் மற்றும் கடன் வாங்குபவர்கள் எதிர்கொள்ளும் சவால்களாக, சிறிய அளவிலான விவசாயக் கடன்களுக்கு கடன் பெறும் திறனை ஆவணமாக மதிப்பீடு செய்யும் முறையானது கிராமப்புறச் சூழலில் செயல்படுத்த முடியாததாக இருக்க வாய்ப்புள்ளது. இது கடன் வழங்கும் நடைமுறையில் தடைகளை உருவாக்கலாம். இந்த வரைவு நெறிமுறைகள் கடன்களை தவறான வகைப்படுத்தலுக்கு வழிசெய்வதுடன், தணிக்கை தடைகளுக்கும் காரணமாக அமைந்து அதன் காரணமாக வங்கி மற்றும் கடனாளி இருதரப்பினருக்கும் பொறுப்பு அதிகரிக்கக் கூடும்.

எனவே, மேற்கூறியவற்றைக் கருத்தில் கொண்டு, இந்திய ரிசர்வ் வங்கி (தங்க பிணையத்திற்கு எதிராகக் கடன் வழங்குதல்) வழிகாட்டுதல்கள் 2025-ல் முன்மொழியப்பட்டுள்ள கட்டுப்பாடுகளை மறுபரிசீலனை செய்திட இந்திய ரிசர்வ் வங்கிக்கு அறிவுறுத்த வேண்டும். நடைமுறையில் உள்ள கிராமப்புற கடன் வழங்குதலை அங்கீகரிக்கும் விதமாக, ரூ.2 லட்சம் வரையிலான விவசாய மற்றும் விவசாயம் தொடர்புடைய கடன்களுக்கு தங்கத்தை பிணையமாக தொடர்ந்து ஏற்றுக்கொள்ள வேண்டியது அவசியம்.

கடன் கோருபவர்களின் நிதி அணுகலைப் பாதுகாக்கும் அதே வேளையில் கடன் பெறும் அளவினை மதிப்பிட ஒரு சமநிலையான ஒழுங்குமுறை மிகவும் பொருத்தமானதாக இருக்கும் என்று நான் கருதுகிறேன். எனவே, விவசாய சமூகத்துக்கும் கிராமப்புற பொருளாதாரத்துக்கும் அத்தியாவசியமான இந்த விவகாரத்தில் மத்திய நிதியமைச்சர் கவனம் செலுத்தி தீர்வுகாண வேண்டுமென்று அந்தக் கடிதத்தில் முதல்வர் கேட்டுக்கொண்டுள்ளார். இதே கருத்தை வலியுறுத்தி இந்திய ரிசர்வ் வங்கியின் கவர்னருக்கும் தமிழக முதல்வர் கடிதம் எழுதியுள்ளார்.

### அண்ணா பல்கலைக்கழக மாணவி

# வன்கொடுமை வழக்கில் ஞானசேகரன் குற்றவாளி

## சென்னை மகளிர் நீதிமன்றம் பரபரப்பு தீர்ப்பு

## தண்டனை விவரங்கள் ஜூன் 2-ல் அறிவிப்பு

சென்னை, மே 29-

**சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் கைதான ஞானசேகரன் குற்றவாளி என சென்னை மகளிர் நீதிமன்ற நீதிபதி எம்.ராஜலட்சுமி தீர்ப்பளித்துள்ளார். தண்டனை விவரம் ஜூன் 2-ம் தேதி அறிவிக்கப்படும் என்று நீதிபதி அறிவித்துள்ளார்.**

சென்னை அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த டிச.23 அன்று 19 வயதான 2-ம் ஆண்டு பொறியியல் மாணவி பாலியல் வன்கொடுமைக்குள்ளாக்கப்பட்ட சம்பவம் பெரிய அதிர்வலைகளை ஏற்படுத்தியது. இதுதொடர்பான புகாரின்பேரில் கோட்டூர்புரம் அனைத்து மகளிர் போலீஸார் பல்வேறு பிரிவுகளின்கீழ் வழக்குப்பதிவு செய்து அதேபகுதியில்



பிரியாணி கடை நடத்தி வந்த கோட்டூரைச் சேர்ந்த ஞானசேகரன் என்பவரை டிச.24 அன்று கைது செய்தனர்.

இந்த வழக்கை சி.பி.ஐ. விசாரணைக்கு மாற்றக்கோரி தொடரப்பட்ட வழக்கை விசாரித்த உயர் நீதிமன்றம், இதுதொடர்பாக பெண் ஐ.பி.எஸ். அதிகாரிகள் அடங்கிய சிறப்பு புலனாய்வுக் குழுவை அமைத்து கடந்த டிச.28 அன்று உத்தரவிட்டது. இந்நிலையில் ஞானசேகரனை குண்டர் தடுப்புச் சட்டத்தின் கீழ் சிறையில் அடைக்க சென்னை காவல் ஆணையர் கடந்த ஜன.5 அன்று உத்தரவிட்டார்.

இந்த வழக்கில் கடந்த பிப்.24 அன்று சைதாப்பேட்டை 9-வது குற்றவியல் நடுவர் நீதிமன்றத்தில் ஞானசேகரனுக்கு எதிராக 100 பக்க குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. அதன்பிறகு இந்த வழக்கு விசாரணை கடந்த மார்ச் 7-ம் தேதியன்று சென்னை மகளிர் நீதிமன்றத்துக்கு மாற்றப்பட்டது.

தனக்கு எதிராக கூறப்பட்டுள்ள குற்றச்சாட்டுகள் தவறானது என்றும், ஆதாரங்கள் இல்லாமல் தனக்கு எதிராக குற்றச்சாட்டுகளை போலீஸார் சுமத்தியுள்ளதால், இந்த வழக்கில் இருந்து தன்னை விடுவிக்க வேண்டும் எனக் கோரி ஞானசேகரன் தரப்பில் தாக்கல் செய்த மனுவை மகளிர் நீதிமன்றம் கடந்த ஏப்ரல் 8-ம் தேதியன்று தள்ளுபடி செய்தது. அன்றைய தினமே குற்றச்சாட்டுகளையும் பதிவு செய்தது. அதில் பாலியல் வன்கொடுமையில் ஈடுபடல், ஆதாரங்களை அழித்தல், கல்லூரி மாணவியை சட்டவிரோதமாக கட்டுப்பாட்டில் வைத்திருந்து மிரட்டி நிர்வாணப் படுத்துதல், புகைப்படம்

**(கடைசி பக்கம் பார்க்க)**

**5 மாதங்களில் தீர்ப்பு**

அரசியல் ரீதியாக முக்கியத்துவம் வாய்ந்த இந்த வழக்கில் 5 மாதத்தில் விசாரணை முடிந்து தீர்ப்பளிக்கப்பட்டுள்ளது. ஞானசேகரனுக்கு எதிராக மொத்தம் 35 குற்றவழக்குகள் பதியப்பட்டுள்ள நிலையில், அதில் பல வழக்குகளில் தண்டனையும், சில வழக்குகளில் விடுதலையும் பெற்றுள்ள ஞானசேகரனுக்கு எதிராக தற்போது 20-க்கும் மேற்பட்ட வழக்குகள் நிலுவையில் இருந்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

### மாநிலங்களவை தேர்தலில் போட்டியிடும்

# 3 தி.மு.க. வேட்பாளர்கள் அறிவிப்பு

## எம்.பி. ஆகிறார் ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசன்


பி.வில்சன்


ரொக்கையா மாலிக்


எஸ்.ஆர்.சிவலிங்கம்


கமல்ஹாசன்

சென்னை, மே 29

**மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடும் தி.மு.க. வேட்பாளர்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார். மக்களவைத் தேர்தலின்போது செய்த உடன்பாடு அடிப்படையில் ம.நீ.ம.வுக்கு ஒரு இடம் ஒதுக்கப்படுவதாகவும் அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி மாநிலங்களவை எம்.பி. ஆகிறார் ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசன்.**

வைகோ, அன்புமணி உள்ளிட்ட 6 தமிழக எம்.பி.க்களின் பதவிக்காலம் முடிகிறது. புதிய எம்.பி.க்களை தேர்ந்தெடுப்பதற்கான மாநிலங்களவை தேர்தல் ஜூன் 19-ம் தேதி நடக்கிறது. இந்நிலையில் தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் வெளியிட்டுள்ள அறிவிப்பில், 2025 ஜூன் 19 அன்று நடைபெறவிருக்கும் மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் தி.மு.க. சார்பில் போட்டியிடும் 4 இடங்களில், 3 இடங்களுக்கு தி.மு.க வேட்பாளர்களும், மற்றுமுள்ள ஒரு இடத்திற்கு ஏற்கெனவே செய்து கொண்ட ஒப்பந்தத்தின்படி மக்கள் நீதி மய்யத்திற்கு ஒரு இடம் ஒதுக்கப்படுகிறது.

தி.மு.க. வேட்பாளர்களாக 1. பி.வில்சன் பி.எஸ்சி, பி.எல்., 2. எஸ்.ஆர்.சிவலிங்கம், 3. ரொக்கையா மாலிக் (என்கிற) கவிஞர் சல்மா ஆகியோர் போட்டியிடுவார்கள் என்று அறிவிக்கப்படுகிறது. மாநிலங்களவை தேர்தலில் தி.மு.க. சார்பில் வழக்கறிஞர் வில்சனுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மாநிலங்களவை எம்.பி. ஆகிறார் ம.நீ.ம. தலைவர் கமல்ஹாசன். மக்களவைத் தேர்தலின்போது செய்த உடன்பாடு அடிப்படையில் ம.நீ.ம.வுக்கு ஒரு இடம் ஒதுக்கப்படுவதாக தி.மு.க. அறிவித்துள்ளது.

### 6 மாவட்டங்களில் கனமழைக்கு வாய்ப்பு:

# கோவை, நீலகிரிக்கு 2 நாட்கள் ‘ரெட் அலர்ட்’

சென்னை, மே 29-

**நீலகிரி மற்றும் கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் ஒரு சில இடங்களில் கன முதல் அதி கனமழையும், திருநெல்வேலி மாவட்டத்தின் மலைப்பகுதிகள், தேனி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், திருப்பூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஒரிரு இடங்களில் வியாழன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. ஓரிரு இடங்களில் தரைக்காற்று 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும், என்றும் தெரிவித்துள்ளது.**

இதுதொடர்பாக சென்னை வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில் கூறியிருப்பதாவது: ஒடிசா கடலோரப்பகுதிகளை ஒட்டிய வடமேற்கு வங்கக்கடல் பகுதிகளில் நிலவிய காற்றழுத்த தாழ்வுப்பகுதி, நேற்று (மே 28) காலை 5.30 மணி அளவில் ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுப்பகுதியாக வலுப்பெற்று காலை 8.30 மணி அளவில் அதே பகுதிகளில் நிலவுகிறது. இது மெதுவாக வடக்கு திசையில் நகர்ந்து, வடக்கு வங்கக்கடல் பகுதிகளில், காற்றழுத்த தாழ்வு மண்டலமாக அடுத்த 24 மணி நேரத்தில் வலுவடையக்கூடும். தென்னிந்திய பகுதிகளின் மேல் ஒரு வளிமண்டல மேலடுக்கு சுழற்சி நிலவிகிறது.

இதன் காரணமாக, இன்றும், நாளையும் தமிழகத்தில் ஒருசில இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும். ஓரிரு இடங்களில் தரைக்காற்று 40 முதல் 50 கிலோ மீட்டர் வேகத்தில் வீசக்கூடும். நீலகிரி மற்றும் கோவை மாவட்டத்தின் மலைப்பகுதிகளில் ஒருசில இடங்களில் கன முதல் அதி கனமழையும், திருநெல்வேலி மாவட்டத்தின் மலைப்பகுதிகள், தேனி, தென்காசி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கன முதல் மிக கனமழையும், திருப்பூர் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் ஓரிரு இடங்களில் கனமழையும் பெய்ய வாய்ப்புள்ளது. மே 31 முதல் ஜூன் 3-ம் தேதி வரை, தமிழகத்தில் ஓரிரு இடங்களிலும், புதுவை மற்றும் காரைக்கால் பகுதிகளிலும் லேசானது முதல் மிதமான மழை பெய்யக்கூடும், என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

**மார்க்கெட் விலை நிலவரம்**

| BSE | NSE |
|---|---|
| -239.31 | -73.75 |
| பாயின்ட் 81,312.32 | பாயின்ட் 24,752.45 |



**தங்கம்** 1 சவரன் ₹71,480 · 1 கிராம் ₹8,935



**வெள்ளி** 1 கிலோ ₹111,000 · 1 கிராம் ₹111.00

**டாலர்** ₹85.37

**பெட்ரோல்** ₹102.63 · **டீசல்** ₹94.24


# அமெரிக்காவுடன் இணைந்தால் கனடாவுக்கு அதிநவீன பாதுகாப்பு

## அதிபர் டொனால்ட் டிரம்ப் அறிவிப்பு

**வாஷிங்டன், மே 29-**

கனடா அமெரிக்காவின் ஒரு பகுதியாக மாறினால், கோல்டன் டோம் பாதுகாப்பு அமைப்பில் கனடா இலவசமாக இணையலாம் என்று அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து ட்ரூத் சமூக ஊடக தளத்தில் ட்ரம்ப் செவ்வாய்க்கிழமை வெளியிட்டுள்ள பதிவில், "எங்களின் அற்புதமான கோல்டன் டோம் பாதுகாப்பு அமைப்பில் ஓர் அங்கமாக விரும்பும் கனடாவிடம், ஒரு தனித்த சுதந்திர தேசமாக சேர விரும்பினால் 61 பில்லியன் டாலர் அதற்காக செலவாகும். ஆனால், அவர்கள் எங்களின் நேசத்துக்குரிய 51-வது மாநிலமாக மாறினால் ஒரு டாலர் கூட செலவாகாது என்று நான் தெரிவித்தேன். அவர்கள் சலுகையை பரிசீலனை செய்து வருகின்றனர்." என்று தெரிவித்துள்ளார்.



தனது தேர்தல் வெற்றிக்கு பின்பு கனடா பிரதமர் மார்க் கார்னி, மே மாதத்தின் தொடக்கத்தில் அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்பை சந்தித்தார். இந்தச் சந்திப்பின் போது இரண்டு நாட்டுத் தலைவர்களும் கோல்டன் டோம் திட்டம் பற்றிப் பேசினார்.

கடந்த வாரத்தில் நடந்த செய்தியாளர்கள் சந்திப்பில் கோல்டன் டோம் பாதுகாப்பு அமைப்பு குறித்து பேச்சுவார்த்தை நடந்து வருவதாக தெரிவித்தார். அவர் கூறுகையில், "இது கனடாவுக்கு சிறந்த யோசனையா? ஆமாம், கனடா மக்கள் பாதுகாப்பாக இருப்பது நல்லது தான். என்றாலும், கனடா விற்பனைக்கு இல்லை. ஒரு போதும் விற்பனைக்கு கிடைக்காது." என்று தெரிவித்திருந்தார். ட்ரம்ப் அமெரிக்க அதிபராக பதவி ஏற்றதில் இருந்து அமெரிக்கா - கனடா இடையேயான உறவுகள் கடினமாகி வருகின்றன. அவரின் கூடுதல் வரி எச்சரிக்கை, கனடாவை அமெரிக்காவுடன் இணைப்பது குறித்த அழுத்தம் போன்றவை இரண்டு நாடுகளுக்கு இடையேயான உறவை மோசமடையச் செய்து வருகிறது.

# 4 உக்ரைன் கிராமங்களை கைப்பற்றிய ரஷ்யப்படை

**கீவ், மே 29-**

ரஷ்ய எல்லையில் உள்ள உக்ரைனின் சுமி பிராந்தியத்தின் கவர்னர், உக்ரைனின் 4 கிராமங்களை ரஷ்ய படைகள் கைப்பற்றி உள்ளதாக தெரிவித்துள்ளார்.

முன்னதாக ரஷ்யா-உக்ரைன் இடையே 2022-ம் ஆண்டு முதல் 3 ஆண்டுகளுக்கும் மேலாக போர் நடந்து வருகிறது. போர் நிறுத்தத்தை அறிவிக்கக் கோரி அமெரிக்க ஜனாதிபதி டிரம்ப், ரஷ்யா மற்றும் உக்ரைன் அதிபர்களுடன் தனித்தனியே பேசினார். ஆனால் அதில் உடன்பாடு ஏற்படவில்லை.

இந்த நிலையில், ரஷ்ய அதிபர் புதின், தானாக பேச்சுவார்த்தைக்கு சம்மதம் தெரிவித்த நிலையில், இருநாட்டு முக்கிய பிரதிநிதிகள் கூடி, போர்க்கைதிகளை விடுவிப்பது என்று உடன்பாடு செய்தனர். அதன்படி கடந்த வெள்ளிக்கிழமை முதல் ஞாயிற்றுக்கிழமை வரை 3 நாட்கள், சிறைபிடிக்கப்பட்ட ராணுவ வீரர்கள், பொதுமக்கள் என 1,000 பேர் பரிமாறிக் கொள்ளப்பட்டனர். இருந்தபோதிலும் இதே நாட்களில் ரஷ்யா, உக்ரைன் மீதான தாக்குதலை தீவிரப்படுத்தியது. திங்கட்கிழமை இரவில் மட்டும் 355 டிரோன்களை வீசி சரமாரியாக ரஷ்யா தாக்கியது. மொத்தம் 4 நாட்களில் 900 டிரோன்கள் ஏவப்பட்டதாக உக்ரைன் கூறி உள்ளது.

இந்த நிலையில் நேற்று ரஷ்யா, தொடர் குண்டுவீச்சு தாக்குதல் நடத்தி இருப்பதுடன் எல்லையோர உக்ரைன் கிராமங்களை கைப்பற்றி இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன. போர் ஆரம்பித்த காலத்தில், உக்ரைன் படைகள், ரஷ்யாவின் குர்ஸ்க் பகுதியை கைப்பற்றியதாக அறிவித்தன.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், பேராசிரியர் தி.ராசகோபாலன் எழுதிய "கலைஞரின் பேனா" நூலினை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர் பி.கே.சேகர் பாபு, பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, இந்து சமய அறநிலையத் துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் சுகி சிவம், கற்பகம் புத்தகாலயத்தின் நல்லதம்பி ஆகியோர் கலந்து கொண்டனர்.

# அண்ணா பல்கலை. வழக்கின் தீர்ப்புக்கு ஓ.பி.எஸ். வரவேற்பு

**சென்னை, மே 29-**

அண்ணா பல்கலையில் நடந்த பாலியல் வழக்கு தீர்ப்புக்கு ஓ.பன்னீர்செல்வம் வரவேற்று பேசினார்.

அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைது செய்யப்பட்ட ஞானசேகரன் குற்றவாளி என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மாணவி புகாரளித்து ஐந்து மாதங்களில் விசாரணை முடிக்கப்பட்ட நிலையில், சென்னை மகளிர் கோர்ட்டு நீதிபதி ராஜலட்சுமி தீர்ப்பு வழங்கினார். அதன்படி ஞானசேகரன் மீது சுமத்தப்பட்ட 11 குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகி உள்ளது. ஞானசேகரனுக்கான தண்டனை விவரங்கள் வருகிற ஜூன் 2-ம் தேதி அறிவிக்கப்பட்டும் என்றும் அதுவரை அவரை நீதிமன்ற காவலில் வைக்கவும் நீதிபதி ராஜலட்சுமி உத்தரவிட்டுள்ளார்.

இந்த நிலையில் கோர்ட்டு தீர்ப்புக்கு தமிழ்நாடு முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் வரவேற்பு தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் வெளியிட்டுள்ள பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

சென்னை, அண்ணா பல்கலைக்கழகத்தில் இரண்டாம் ஆண்டு படித்து வரும் பொறியியல் மாணவி பாலியல் வன்கொடுமை செய்யப்பட்ட வழக்கில் ஞானசேகரன் மீது சுமத்தப்பட்ட 11 குற்றச்சாட்டுகள் நிரூபிக்கப்பட்டு, ஐந்தே மாதத்தில் அவர் குற்றவாளி என சென்னை மகளிர் கோர்ட்டு வழங்கியுள்ள தீர்ப்பு வரவேற்கத்தக்கது. ஐந்தே மாதத்தில் வழங்கப்பட்டுள்ள இந்தத் தீர்ப்பு நீதித் துறையின் மீதான நம்பிக்கையை பெண்களிடையே அதிகரித்துள்ளதோடு, இதன்மூலம் எதிர்காலத்தில் பாலியல் வன்கொடுமை நிகழ்வுகள் வெகுவாக குறையும் என்ற எண்ணமும் உருவாகியுள்ளது.

மேலும், குற்றவாளிக்குரிய தண்டனை விவரம் ஜூன் மாதம் இரண்டாம் தேதி அறிவிக்கப்படும் என கோர்ட்டு தெரிவித்துள்ள நிலையில், மேற்படி வழக்கில் குற்றவாளிக்கு அதிகபட்ச தண்டனையை சென்னை மகளிர் கோர்ட்டு வழங்கும் என்ற நம்பிக்கையும் பொதுமக்களிடையே ஏற்பட்டுள்ளது. இந்த முக்கியமான வழக்கில் திறம்பட செயல்பட்ட அனைத்துத் தரப்பினருக்கும் எனது பாராட்டுகள். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## ஏவப்பட்ட 30 நிமிடங்களில்

# வெடித்து சிதறிய ஸ்பேஸ்எக்ஸ் விண்கலம்


**டெக்சாஸ், மே 29-**

ஏவப்பட்ட 30 நிமிடங்களில் வெடித்து சிதறிய ஸ்பேஸ்எக்ஸ் விண்கலம்.

உலக பணக்காரர்களில் ஒருவரான எலான் மஸ்க், செவ்வாய் கோளில் மனிதர்களை குடியமர்த்தும் முயற்சியின் ஒரு பகுதியாக, அவருடைய ஸ்பேஸ்எக்ஸ் என்ற பெயரிலான வர்த்தக விண்கல நிறுவனத்தின் உதவியுடன் ஆளில்லா விண்கலங்களை விண்ணுக்கு ஏவி சோதனை செய்து வருகிறார்.

இந்நிலையில், அமெரிக்காவின் டெக்சாஸ் மாகாணத்தில் உள்ள ஸ்டார்பேஸ் ஏவுதளத்தில் இருந்து ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனத்தின் ஸ்டார்ஷிப் விண்கலம் நேற்று காலை ஏவுவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. எனினும், விண்ணில் ஏவப்பட்டு 30 நிமிடங்களில் அந்த விண்கலம் இலக்கை எட்டுவதற்கு பதிலாக வெடித்து சிதறியது. இதுபற்றி ஸ்பேஸ்எக்ஸ் நிறுவனம் வெளியிட்டு உள்ள எக்ஸ் சமூக ஊடக பதிவில், 403 அடி (123 மீட்டர்) உயரம் கொண்ட அந்த விண்கலம், கட்டுப்பாட்டை இழப்பதற்கு முன்பு, கடந்த 2 முறை தோல்வியடைந்த புள்ளியை கடந்து சென்றது. எனினும், அது வெடித்து சிதறியுள்ளது.

இதுபோன்ற பரிசோதனையில், நாம் என்ன கற்று கொள்கிறோம் என்பதிலேயே வெற்றி வருகிறது. இன்றைய பரிசோதனையானது, ஸ்டார்ஷிப்பின் நம்பக தன்மையை மேம்படுத்தும் என தெரிவிக்கப்பட்டு உள்ளது. ஏனெனில், பல்வேறு கோள்களிலும் மனிதர்களின் வாழ்க்கையை உருவாக்கும் நோக்கில் ஸ்பேஸ்எக்ஸ் செயல்பட்டு வருகிறது என தெரிவிக்கப்பட்டு உள்ளது. இந்த சமீபத்திய விண்கல ஏவுதலுக்கு முன்பு, எட்டு முறை விண்கல ஏவுதல் முயற்சி நடந்துள்ளது. இதில் 4 வெற்றிகள் கிடைத்துள்ளன. 4 முறை தோல்வி கண்டு அவை வெடித்து சிதறியுள்ளன.




## எல்லை தாண்டி

# இந்தியாவுக்குள் நுழைந்த பாக். பெண்

**மும்பை, மே 29-**

எல்லை தாண்டி பாகிஸ்தானுக்குள் நுழைந்த பெண்ணால் பரபரப்பு ஏற்பட்டது.

நாக்பூர் கபில் நகர் பகுதியை சேர்ந்தவர் சுனிதா. இவர் நர்சாக வேலை பார்த்து வந்தார். மேலும் துணி வியாபாரத்திலும் ஈடுபட்டு வந்துள்ளார். இவர் கடந்த 14-ந்தேதி திடீரென மாயமானார். விசாரணையில் சுனிதா, 13 வயது மகனுடன் காஷ்மீர் சென்றது தெரியவந்தது.

மேலும் அவர் மகனை காஷ்மீரில் தவிக்கவிட்டு இந்திய எல்லையை தாண்டி பாகிஸ்தானுக்குள் நுழைந்தது தெரியவந்தது. அவர் கார்கில், ஹன்டர்மேன் கிராமத்தில் இருந்து பாகிஸ்தானுக்குள் நுழைந்துள்ளார். சுனிதாவை பிடித்த பாகிஸ்தான் பாதுகாப்பு படையினர் அவரை விசாரணைக்கு பிறகு இந்திய அரசிடம் ஒப்படைத்து உள்ளனர். இந்திய அதிகாரிகள் அவரை அமிர்தசரஸ் போலீசில் ஒப்படைத்தனர். சுனிதா எல்லையை தாண்டும் முன் பாகிஸ்தானை சேர்ந்த ஒருவருடன் தொடர்பில் இருந்ததாக லடாக் போலீஸ் டி.ஜி.பி. எஸ்.டி. சிங் ஜம்வால் கூறியுள்ளார். இதற்கிடையே நாக்பூர் போலீசார் அமிர்தசரசில் இருந்து சுனிதாவை அழைத்து வர விரைந்துள்ளனர். அவர்கள் சுனிதா பாகிஸ்தானுக்காக உளவு வேலை எதிலும் ஈடுபட்டாரா? என்பது குறித்து விசாரணை நடத்த உள்ளனர்.

## அந்தரத்தில் நின்ற ராட்டினம்:

# தனியார் பொழுதுபோக்கு பூங்கா செயல்பட திடீர் தடை

**ஆலந்தூர், மே 29-**

சென்னை அருகே உள்ள ஈஞ்சம்பாக்கத்தில் உள்ள தனியார் பொழுதுபோக்கு பூங்கா திறப்பதற்கு போலீசார் தடை விதித்துள்ளனர்.

சென்னையை அடுத்த ஈஞ்சம்பாக்கம் பகுதியில் உள்ள தனியார் பொழுதுபோக்கு மையத்தில் ராட்சத ராட்டினம் உள்ளது. இந்த ராட்டினம் செங்குத்தாக மேலே சென்று கீழே இறங்கும் வகையில் வடிவமைக்கப்பட்டுள்ளது. நேற்று மாலை 7 மணி அளவில் சுமார் 30-க்கும் மேற்பட்ட பொதுமக்கள் அந்த ராட்டினத்தில் ஏறி இருந்தனர். ராட்டினம் சுமார் 120 அடி உயரத்துக்கு சென்ற நிலையில, தொழில்நுட்ப கோளாறு காரணமாக மேலேயே நின்று விட்டது. இதனால் 120 அடி உயரத்தில், அந்தரத்தில் தொங்கிய பொதுமக்கள் அச்சத்தில் கூச்சலிட்டனர். இதைப்பார்த்து கீழே நின்றவர்கள் அதிர்ச்சி அடைந்தனர். இதையடுத்து தொழில்நுட்ப கோளறாரை சரி செய்யும் பணியில் ஊழியர்கள் ஈடுபட்டனர். இருப்பினும் அந்தரத்தில் தொங்கியவர்களில் சிலர், நடந்த சம்பவம் குறித்து தங்களது செல்போன் மூலம் போலீசாருக்கும், தீயணைப்பு வீரர்களுக்கும் தகவல் கொடுத்தனர்.

தகவல் அறிந்ததும் நீலாங்கரை போலீசாரும், துரைப்பாக்கம், கிண்டி, நீலாங்கரை தீயணைப்பு வீரர்களும் சம்பவ இடத்துக்கு விரைந்தனர். பின்னர் ராட்சத ராட்டினத்தில் அந்தரத்தில் தொங்கிக்கொண்டு இருந்தவர்களை 'பிராண்டோ லிப்ட்' மூலமாக மீட்டனர். 3 மணி நேரத்துக்கு பின்னர் அவர்கள் கீழே வந்ததும் நிம்மதி பெருமூச்சு விட்டனர். இந்த சம்பவத்தால் அங்கு பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

இந்நிலையில் தனியார் பொழுதுபோக்கு பூங்காவை தற்காலிகமாக மூட, அதன் நிர்வாகத்திற்கு காவல்துறை அறிவுறுத்தி உள்ளது. மேலும் ராட்டின விபத்து தொடர்பாக விளக்கம் கேட்டு தனியார் பொழுதுபோக்கு மைய பொதுமேலாளருக்கு நீலாங்கரை போலீசார் நோட்டீஸ் அனுப்பி உள்ளனர்.

விளக்கம் அளித்து ஆவணங்களை சமர்ப்பித்த பின் பொழுதுபோக்கு பூங்காவை திறக்க அறிவுறுத்தப்பட்டுள்ளது. இதனிடையே மாநகராட்சி மற்றும் தொழிலாளர் நலத்துறை அதிகாரிகள் இன்று தனியார் பொழுதுபோக்கு பூங்காவில் ஆய்வு மேற்கொள்கின்றனர்.

# ஈரானில் மாயமான 3 இந்தியர்கள்..! தேடுதல் பணி தீவிரம்

**தெஹ்ரான், மே 29-**

ஈரானில் மாயமான இந்தியர்கள் மூன்று பேரை தேடும் பணி தீவிரமாக நடந்து வருகிறது என அந்நாட்டில் உள்ள இந்திய தூதரகம் தெரிவித்து உள்ளது.




பஞ்சாபின் சங்ரூர், ஹோஷியார்பூர் மற்றும் எஸ்.பி.எஸ்., நகர் ஆகிய இடங்களிலிருந்து ஈரானுக்கு இந்தியர்கள் மூன்று பேர் சென்றுள்ளனர். அங்கு மூன்று பேரும் காணாமல் போகினர். ஹுஷன்பிரீத் சிங், ஜஸ்பால் சிங், அம்ரித்பால் சிங் என்பது விசாரணையில் தெரியவந்துள்ளது. இதுகுறித்து ஈரான் நாட்டில் உள்ள இந்திய தூதரகத்துக்கு தகவல் கிடைத்தது. பின்னர் ஈரான் நாட்டு அதிகாரிகளுடன் இணைந்து இந்திய தூதரக அதிகாரிகள் தேடும் பணியில் ஈடுபட்டு உள்ளனர்.

இது குறித்து ஈரான் நாட்டில் உள்ள இந்திய தூதரகம் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது: ஈரானுக்கு வந்திருந்த இந்தியர்கள் மூன்று பேர் மாயமாகி உள்ளனர். அவர்களைக் கண்டுபிடிக்கும் பணிகள் முழு முயற்சியுடன் நடைபெற்று வருகிறது. இது தொடர்பாக அவர்களின் குடும்பத்தினருக்கு தகவல் கொடுத்துள்ளோம். நாங்கள் அவர்களுடன் தொடர்பில் இருக்கிறோம். உடனுக்குடன் அவர்களது குடும்பத்தினருக்கு தகவல் கொடுத்து வருகிறோம்.

காணாமல் போன இந்தியர்களை அவசரமாகக் கண்டுபிடித்து அவர்களின் பாதுகாப்பை உறுதி செய்ய வேண்டும் என ஈரான் நாட்டு அதிகாரிகளிடம் வலியுறுத்தியுள்ளோம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது. ஒரே நேரத்தில் இந்தியர்கள் மூன்று பேர் மாயமாகியுள்ள சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

**29-05-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** புதிய சொத்துக்கள் அமையும். நல்ல நண்பர்கள் நட்பால் சந்தோஷம் ஏற்படும். விரும்பிய பொருட்கள், விரும்பியபடி கிடைக்கும். கல்வியில் வெற்றி பெறக் கடின உழைப்பு தேவை

**ரிஷபம்:-** மனைவி மக்களுக்கு ஆரோக்கியக் குறைவு ஏற்படலாம். தடைபட்ட காரியங்கள் கண்டு தன்னம்பிக்கை இழக்காதீர்கள். முயற்சி திருவினையாக்கும் என முன்னேற முயலுங்கள்.

**மிதுனம்:-** நல்ல வாகன யோகம், உறவுகளைச் சந்திப்பதால் ஏற்படும் மனமகிழ்ச்சி ஆகியவை ஏற்படும். படுக்கை சுகங்கள் , ருசியான உணவு வகைகள் ஆகியவையும் கிடைக்கும்

**கடகம்:-** இடமாற்றம் ஏற்படலாம். தாய், சகோதரி, காதலி போன்ற பெண்களால் வீண் செலவுகள் அதிகரிக்கும். தேவையற்ற கோபத்தால் வம்பை விலைக்கு வாங்காதீர்கள்.

**சிம்மம்:-** பணவரவு வந்த வண்ணம் இருக்கும். நோய் நீங்கி சுகம் கூடும். ஆரோக்கியம் மேம்பாடு அடையும், நல்லுணவு, புத்தாடைகள், நண்பர்கள் சந்திப்பு ஆகியவை ஏற்படும்.

**கன்னி:-** தீர்த்த யாத்திரைகள் மகிழ்ச்சி தரும்.. உத்தியோக வாய்ப்புகள் தேடி வரும். விருப்பங்கள் அனைத்தும் நிறைவேறும். பிறருக்குக் கட்டளை இடும் அதிகாரம் பதவியை அலங்கரிப்பார்கள்.

**துலாம்:-** பல வழிகளிலும் பணம் வந்து குவியும். திருமண ஏற்பாடுகள் நடக்கும். வாழ்க்கையில் முன்னேற்றம் உண்டு. புகழ் ஓங்கும். தெய்வ பக்தியால் மனநிம்மதி கூடும்.

**விருச்சிகம்:-** பொருள் இழப்பை தவிர்க்க எச்சரிக்கையுடன் இருப்பது அவசியம்.. எதிர்பாராத செலவுகள், மற்றும் தேவையற்ற அவமானங்கள் ஏற்படும். வியாபாரிகளுக்கு இலாபம் கிட்டும்.

**தனுசு:-** புது புது ஆடைகள் கிடைக்கும். பணவரவு அதிகரிக்கும். பெரிய மனிதர் எனப் பெயர் எடுப்பீர்கள். அரசு சம்பந்தமான காரியங்கள் அனைத்தும் அனுகூலமாய் நடக்கும்.

**மகரம்:-** பகைவர்கள் உங்களைக் கண்டு பயந்து விலகுவர். பயணத்தால் தன லாபம் அதிகரிக்கும். விரும்பிய அனைத்தும் வீடு வந்து சேரும். புதுப் பெண்கள் சிநேகம் மகிழ்ச்சி அளிக்கும்.

**கும்பம்:-** பயணத்தின் போது பதட்டத்தைக் குறைத்தால் விபத்தை தவிர்க்கலாம். நண்பர்கள் மூலம் உதவிகள் எதிர்பார்க்க இயலாது. குழந்தைகளுக்கு சிறு உபாதைகள் எழலாம்.

**மீனம்:-** தாயின் உடல் நிலையில் சிறப்பு கவனம் தேவை. எல்லாவற்றிலும் ஒருவித பயவுணர்வு ஏற்படலாம். காரியத்தடைகள், தூக்கமின்மை ஆகியவற்றால் மனநிம்மதி குறையும்.

# விடைபெற்றது அக்னி நட்சத்திரம்

**சென்னை, மே 29-**

கடந்த 4-ந் தேதி தொடங்கிய கத்திரி வெயில் சுட்டெரிக்கும் வெப்பம் என எந்த ஆரவாரமும் இல்லாமல் வழக்கம்போல நேற்றுடன் விடைபெற்றது.

தமிழ்நாட்டில் கடந்த 4-ந் தேதி முதல் 28-ந் தேதி வரையிலான 25 நாட்களுக்கு 'அக்னி நட்சத்திரம்' என்று அழைக்கப்படும் 'கத்திரி வெயில் காலம் ஆகும். அந்த வகையில் கடந்த 4-ந் தேதி கத்திரி வெயில் தொடங்கியது. இந்த ஆண்டு வெப்ப அலை தமிழ்நாட்டில் இருக்காது. வெப்பத்தின் தாக்கமும் வழக்கத்தைவிட குறைந்தே காணப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.அதற்கேற்றாற்போல், முதல் வாரத்தில் வெப்பம் இயல்பைவிட அதிகரித்து காணப்பட்டாலும், அதனைத்தொடர்ந்து வெயிலின் தாக்கம் சற்று குறைந்தே காணப்பட்டது. இதற்கிடையில் தென்மேற்கு பருவமழையும் முன்கூட்டியே தொடங்கியதால், தமிழ்நாட்டில் சில இடங்களில் மிதமான மழையும், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களின் பல பகுதிகளில் கனமழையும் பதிவாகி வருகிறது. இதனால் கடந்த ஒரு வாரத்துக்கு மேலாக வெப்பம் தணிந்தே காணப்படுகிறது.இந்த நிலையில் கடந்த 4-ந் தேதி தொடங்கிய கத்திரி வெயில் சுட்டெரிக்கும் வெப்பம் என எந்த ஆரவாரமும் இல்லாமல் வழக்கம்போல நேற்றுடன் விடைபெற்றது.

# தீவிரவாதிகள் தாக்குதல்களுக்கு ஒருபோதும் அஞ்சமாட்டோம்

## முதல்வர் உமர் அப்துல்லா கருத்து

**ஸ்ரீநகர், மே 29-**

பஹல்காமில் தீவிரவாதிகள் நடத்தியது போன்ற கோழைத்தனமான தாக்குதல்களுக்கு நாங்கள் ஒருபோதும் அஞ்சமாட்டோம் என்று ஜம்மு காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா நேற்று தெரிவித்தார்.

மக்களிடையே நம்பிக்கையை ஏற்படுத்தும்விதமாக பாரம்பரியத்திலிருந்து விலகி பஹல்காமில் ஒரு சிறப்பு அமைச்சரவைக் கூட்டத்துக்கு முதல்வர் உமர் அப்துல்லா நேற்று தலைமை தாங்கினார்.

ஜம்மு காஷ்மீர் முதல்வராக உமர் அப்துல்லா பொறுப்பேற்றதிலிருந்து கோடைகால தலைநகர் ஸ்ரீநகர் அல்லது குளிர்கால தலைநகர் ஜம்முவுக்கு வெளியே அமைச்சரவை கூட்டம் நடத்தப்பட்டது இதுவே முதல் முறை.

இதுகுறித்து வெளியிடப்பட்ட முதல்வர் அலுவலக செய்திக்குறிப்பில், " தீவிரவாத தாக்குதல் நடத்தப்பட்ட பஹல்காமில் இன்று அமைச்சரவைக் கூட்டம் நடத்தப்பட்டது. இது, ஒரு வழக்கமான நிர்வாக பயிற்சி மட்டுமல்ல.

கோழைத்தனமான தீவிரவாத செயல்களால் நாங்கள் அச்சுறுத்தப்படவில்லை என்பதற்கான தெளிவான செய்தி. மக்களின் தைரியத்துக்கு வணக்கம் செலுத்தி பயத்தை பின்னுக்குத் தள்ளுவதை நோக்கமாக கொண்டது இந்த நடவடிக்கை. ஜம்மு-காஷ்மீர் உறுதியாகவும், வலுவாகவும், அச்சமின்றியும் நிற்கிறது " என்று தெரிவிக்கப்பட்டிருந்தது.

முதல்வர் உமர் அப்துல்லா வெளியிட்ட தனிப்பட்ட பதிவில், " உள்ளூர் மக்களுடன் ஒற்றுமையை வெளிப்படுத்த நாங்கள் பஹல்காம் வந்துள்ளோம்.

பஹல்காமுக்கு படிப்படியாக திரும்பி வரும் சுற்றுலா பயணிகளுக்கு நன்றி தெரிவிக்கவும் நாங்கள் இங்கு கூடியுள்ளோம். தீவிரவாதிகளின் கோழைத்தனமான தாக்குதல்களுக்கு நாங்கள் ஒருபோதும் அஞ்சமாட்டோம் என்று தெரிவித்துள்ளார்.

# சற்று குறைந்த தங்கம் விலை

**சென்னை, மே 29-**

தங்கம் விலை கடந்த மாதம் (ஏப்ரல்) 22-ம் தேதி புதிய உச்சத்தை தொட்டு ஒரு சவரன் ரூ.74,320-க்கு விற்பனை செய்யப்பட்டது. இதனைத்தொடர்ந்து தங்கம் விலை ஏற்ற, இறக்கத்துடன் இருந்து வந்தது. இந்த நிலையில் கடந்த 21, 22-ம் தேதிகளில் விலை அதிகரித்து, 23-ம் தேதி விலை குறைந்தது. அதேபோல், 24, 25-ம் தேதி உயர்ந்து, கடந்த 3 நாட்களுக்கு முன்பு குறைந்து காணப்பட்டது. இதன் தொடர்ச்சியாக நேற்று முன்தினம் மீண்டும் உயர்ந்தது.

கடந்த 3 நாட்களுக்கு முன் ஒரு கிராம் ரூ.8 ஆயிரத்து 950-க்கும், ஒரு பவுன் ரூ.71 ஆயிரத்து 600-க்கும் விற்பனை செய்யப்பட்டது. நேற்று முன்தினம் மாலை நேர நிலவரப்படி, கிராமுக்கு ரூ.45-ம், பவுனுக்கு ரூ.360-ம் உயர்ந்து, ஒரு கிராம் ரூ.8 ஆயிரத்து 995-க்கும், ஒரு பவுன் ரூ.71 ஆயிரத்து 960-க்கும் விற்பனை ஆனது.

இந்த நிலையில், தங்கம் விலை நேற்று (புதன்கிழமை) சற்று குறைந்து விற்பனை ஆனது. அதன்படி சென்னையில் 22 கேரட் ஆபரணத் தங்கத்தின் விலை நேற்று சவரனுக்கு ரூ.480 குறைந்து ஒரு சவரன் ரூ.71,480-க்கு விற்பனை ஆனது. தங்கம் விலை கிராமுக்கு ரூ.60 குறைந்து ஒரு கிராம் ரூ.8,935-க்கு விற்பனை ஆனது.



தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலினை சென்னை, அண்ணா அறிவாலயத்தில், எம்.பி.யும், வழக்கறிஞருமான பி.வில்சன் சந்தித்து, மாநிலங்களவை உறுப்பினருக்கான தேர்தலில் வேட்பாளராக தன்னை மீண்டும் அறிவித்ததற்காக நன்றி தெரிவித்து, வாழ்த்து பெற்றார். உடன் அமைச்சர் பி.கே.சேகர்பாபு, வழக்கறிஞர் ரிச்சர்ட்சன் வில்சன் ஆகியோர் உள்ளனர்.

# கமலின் குரல் மாநிலங்களவையில் ஓங்கி ஒலிக்கும்: துணை முதல்வர்

**சென்னை, மே 29-**

கமலின் குரல் மாநிலங்களவையிலும் இனி ஒலிக்கும் என உதயநிதி ஸ்டாலின் பேசினார்.

துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வெளியிட்டுள்ள பதிவில் கூறியிருப்பதாவது:- கழக அணி சார்பில் மாநிலங்களவைத் தேர்தலில் போட்டியிடவுள்ள மக்கள் நீதி மய்யம் கட்சியின் தலைவர் கலைஞானி கமல்ஹாசன் சாருக்கு என் அன்பு வாழ்த்துகள். இத்தேர்தலில் வென்று, தமிழ்நாட்டின் உரிமைக்காகவும், இந்திய அரசியலமைப்பை - பன்முகத்தன்மையை பாதுகாக்கவும், கமல் சாரின் குரல் மாநிலங்களைவையில் ஓங்கி ஒலிக்கப்போவதை எண்ணி மகிழ்கிறோம் என தெரிவித்துள்ளார்.

# சென்னையில் கொரோனாவுக்கு சிகிச்சை பெற்று வந்தவர் பலி

**சென்னை, மே 29-**

சென்னையில் கொரோனாவுக்கு சிகிச்சை பெற்று வந்தவர் உயிரிழந்ததால் பரபரப்பு ஏற்பட்டது.

தெற்கு ஆசிய நாடுகளில் கொரோனா வைரஸ் மீண்டும் பரவத்தொடங்கியுள்ளது. இந்தியாவிலும் வைரஸ் பாதிப்பு மெல்ல அதிகரித்து வருகிறது. அதேவேளை, வைரஸ் பாதிப்பு குறித்து பொதுமக்கள் அச்சப்படத் தேவையில்லை என்று சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது. இந்நிலையில், சென்னை மறைமலை நகர் பகுதியை சேர்ந்த மோகன் (வயது 60) என்பவருக்கு கொரோனா பாதிப்பு உறுதியான நிலையில் அவர் ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வந்தார். இவருக்கு பல்வேறு இணை நோய் பாதிப்புகள் இருந்த நிலையில் அதற்கும் சிகிச்சை பெற்று வந்துள்ளார். ஆனால், அவர் நேற்று சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

# வீர சாவர்க்கரின் போராட்டத்தின் வரலாறை தேசம் ஒருபோதும் மறக்காது: பிரதமர் மோடி

**புதுடெல்லி, மே 29-**

வீர சாவர்க்கரின் போராட்டத்தின் வரலாறை தேசம் ஒருபோதும் மறக்காது என்று பிரதமர் மோடி பேசியுள்ளார்.

சுதந்திரப் போராட்டத் தியாகிகளில் ஒருவரான வீர சாவர்க்கர் என அழைக்கப்படும் வினாயக் தாமோதர் சாவர்க்கரின் பிறந்த நாள் இன்று கொண்டாடப்பட்டு வருகிறது. இந்நிலையில், “இந்தியத் தாயின் உண்மையான மகன்” என்றும், வெல்ல முடியாத துணிச்சலின் சின்னம் என்றும் பிரதமர் நரேந்திர மோடி அவருக்கு புகழாரம் சூட்டியுள்ளார்.



இதுகுறித்து பிரதமர் மோடி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியதாவது:- கடுமையான துன்பங்களை எதிர்கொண்டபோதும் வீரர் வீர சாவர்க்கரின் அசைக்க முடியாத மனப்பான்மையும், இந்தியாவின் சுதந்திரப் போராட்டத்திற்கு அவர் ஆற்றிய பங்களிப்பும் தேசத்திற்கு உத்வேகம் அளிக்கிறது. இந்தியத் தாயின் உண்மையான மகனான வீர் சாவர்க்கருக்கு அவரது பிறந்தநாளில் அஞ்சலிகள். ஆங்கிலேய ஆட்சிக் காலத்தில் எதிர்கொண்ட மிகக் கடுமையான பல கொடுமைகள் கூட தாய்நாட்டின் மீதான அவரது பக்தியை அசைக்க முடியவில்லை. சுதந்திர இயக்கத்தில் அவரது அடங்காத துணிச்சல் மற்றும் போராட்டத்தின் வரலாறை நன்றியுள்ள தேசம் ஒருபோதும் மறக்காது. வளர்ந்த இந்தியாவை உருவாக்குவதில் அவரது தியாகமும், நாட்டிற்கான அர்ப்பணிப்பும் தொடர்ந்து வழிகாட்டியாக இருக்கும் என பதிவிட்டுள்ளார்.

## கரும்பு நிலுவைத்தொகை வழங்க உத்தரவு:

# முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்து விவசாயிகள் நன்றி

**சென்னை, மே 29-**

சர்க்கரை ஆலைகளால் கரும்பு பணம் நிலுவையின்றி முழுமையாக வழங்கிய முதல்வருக்கு விவசாயிகள் நன்றி தெரிவித்தனர்.

தமிழக அரசு வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய 5920 விவசாயிகள் பயன்பெறும் வகையில் கரும்பு நிலுவைத்தொகை ரூ.97.77 கோடி வழங்க உத்தரவிட்டு, நிலுவைத்தொகை பெற்று பயனடைந்த விவசாயிகள் முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு நன்றி தெரிவித்தனர். நிலுவைத்தொகை பெற்று பயனடைந்த திருவண்ணாமலை, தர்மபுரி, வேலூர், இராணிப்பேட்டை, நாமக்கல், சேலம், காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

தமிழ்நாட்டில் 16 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 22 தனியார், என மொத்தம் 40 சர்க்கரை ஆலைகள் உள்ளன. இவற்றுள், 2024-25 ஆம் ஆண்டு அரவைப் பருவத்தில் 12 கூட்டுறவு, 2 பொதுத்துறை, 16 தனியார் என மொத்தம் 30 சர்க்கரை ஆலைகள் அரவைப் பணி மேற்கொண்டுள்ளன. கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் 2024-25 அரவைப் பருவத்தில் 15.05.2025 வரை 18.81 இலட்சம் மெ.டன் அரவை செய்து, 8.40 சதவிகித சர்க்கரை கட்டுமானத்தில் 1.58 இலட்சம் மெ.டன் சர்க்கரை உற்பத்தி செய்துள்ளன.

அரவை மேற்கொண்ட 12 கூட்டுறவு மற்றும் 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகளில் கள்ளக்குறிச்சி-1, கள்ளக்குறிச்சி-2, சுப்பிரமணிய சிவா, திருப்பத்தூர் ஆகிய 4 கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றும் அறிஞர் அண்ணா, பெரம்பலூர் ஆகிய 2 பொதுத்துறை சர்க்கரை ஆலைகள் தாங்கள் கொள்முதல் செய்து, அரவை செய்த 10.30 லட்சம் மெ.டன் கரும்பிற்கு வழங்க வேண்டிய 329.34 கோடி ரூபாயை தங்கள் ஆலையின் சொந்த நிதியிலிருந்து கரும்பு விவசாயிகளுக்கு கரும்பு தொகையை வழங்கி உள்ளன.

கரும்பு விவசாயிகளின் நலனை பாதுகாக்கும் விதமாக, தமிழ்நாடு அரசு 5920 விவசாயிகள் பயன்பெறும் வகையில் வழிவகைக் கடனாக 97.77 கோடி ரூபாய் அனுமதித்துள்ளது.

இந்த நிதியுதவி கொண்டு விவசாயிகளின் வங்கிக் கணக்கிற்கு சர்க்கரை ஆலைகளால் கரும்பு பணம் நிலுவையின்றி முழுமையாக வழங்கி முடிக்கப்பட்டு விட்டது என தெரிவிக்கப் பட்டுள்ளது .

# பல்கலைக்கழக மாணவி வழக்கில் தீர்ப்பு - அண்ணாமலை வரவேற்பு

**சென்னை, மே 29-**

ஞானசேகரன் குற்றவாளி என கோர்ட்டு வழங்கிய தீர்ப்புக்கு அண்ணாமலை வரவேற்பு தெரிவித்துள்ளார்.

அண்ணா பல்கலை மாணவி பாலியல் வன்கொடுமை வழக்கில் கைது செய்யப்பட்ட ஞானசேகரன் குற்றவாளி என தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மாணவி புகாரளித்து ஐந்து மாதங்களில் விசாரணை முடிக்கப்பட்ட நிலையில், சென்னை மகளிர் கோர்ட்டு நீதிபதி ராஜலட்சுமி தீர்ப்பு வழங்கினார். இதன்படி ஞானசேகரன் மீது சுமத்தப்பட்ட 11 குற்றச்சாட்டுகளும் நிரூபணமாகி உள்ளதாக நீதிபதி தனது தீர்ப்பில் தெரிவித்தார். மேலும் ஞானசேகரனுக்கான தண்டனை விவரங்கள் ஜூன் 2-ம் தேதி அறிவிக்கப்படும் என்றும், தண்டனை விவரம் வெளியாகும் வரை அவரை நீதிமன்ற காவலில் வைக்க நீதிபதி ராஜலட்சுமி உத்தரவிட்டார்.

இந்நிலையில் தமிழக பா.ஜ.க. முன்னாள் தலைவர் அண்ணாமலை தனது எக்ஸ் வலைதளத்தில் கூறியிருப்பதாவது:- சென்னை அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வன்கொடுமை நடத்திய தி.மு.க. நிர்வாகி ஞானசேகரன், குற்றவாளி என்று நீதிமன்றம் தீர்ப்பளித்திருப்பது வரவேற்கத்தக்கது. பெண்களுக்கு எதிரான வன்கொடுமைகளும், பாலியல் குற்றங்களும், கடுமையாகக் கையாளப்பட வேண்டும். இது போன்ற குற்றங்கள் மீண்டும் நடக்காதபடி, நீதிமன்றம் கடுமையான தண்டனை வழங்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சென்னை உள்ளிட்ட 4 ஐகோர்ட் தலைமை நீதிபதிகள் இடமாற்றம்

## சுப்ரீம் கோர்ட்டுக்கு கொலீஜியம் பரிந்துரை

**புதுடெல்லி, மே 29-**

சென்னை உள்ளிட்ட 4 ஐகோர்ட் தலைமை நீதிபதிகள் இடமாற்றம் செய்யப்படுவதாக சுப்ரீம் கோர்ட் கொலீஜியத்துக்கு பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.



சுப்ரீம் கோர்ட் தலைமை நீதிபதி சஞ்சீவ் கண்ணா கடந்த 13-ம் தேதி ஓய்வு பெற்ற நிலையில் மூத்த நீதிபதிகளில் ஒருவரான அபய் ஓகாவும் ஓய்வு பெற்றார். இதை அடுத்து சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளின் எண்ணிக்கை 34 இல் இருந்து 31 ஆக குறைந்தது. தொடர்ந்து சுப்ரீம் கோர்ட் புதிய தலைமை நீதிபதியாக பி. ஆர்.கவாய் பதவியேற்ற நிலையில் கடந்த 26-ம் தேதி சுப்ரீம் கோர்ட் கொலிஜியம் கூடியது. தொடர்ந்து மூன்று மாநில உயர் நீதிமன்றங்களில் இருந்து மூன்று நீதிபதிகளை சுப்ரீம் கோர்ட்டிற்கு புதிய நீதிபதிகளாக நியமிக்க மத்திய அரசுக்கு பரிந்துரைத்தது. அதன்படி கர்நாடக ஐகோர்ட் தலைமை நீதிபதி அஞ்சார்யா, ராஜஸ்தான் ஐகோர்ட் தலைமை நீதிபதி விஜய்பிஷ்னு, மும்பை ஐகோர்ட் நீதிபதி சந்துருகர் ஆகியோர் சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளாக நியமிக்க பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

கொலீஜியம் இந்தியாவின் தலைமை நீதிபதி தலைமையில் செயல்படுகிறது. இந்த கொலீஜியம் சுப்ரீம் கோர்ட் மற்றும் உயர் நீதிமன்றங்களுக்கு நீதிபதிகளை நியமிக்க பரிந்துரை செய்கிறது. நீதிபதிகளின் பதவி உயர்வு, இடமாற்றம் மற்றும் பிற நிர்வாக முடிவுகளை எடுக்கிறது. இந்தநிலையில், சென்னை உள்ளிட்ட ஐகோர்ட் தலைமை நீதிபதிகள் 4 பேரை இடமாற்றம் செய்ய சுப்ரீம் கோர்ட்டிற்கு கொலீஜியம் குழு பரிந்துரை செய்துள்ளது.

இடம் மாற்றம் செய்யப்பட்ட நீதிபதிகள் விவரம் வருமாறு:- சென்னை ஐகோர்ட் தலைமை நீதிபதி ஸ்ரீராமை, ராஜஸ்தான் ஐகோர்ட் தலைமை நீதிபதியாக இடமாற்றம் செய்ய சுப்ரீம் கோர்ட்டிற்கு கொலீஜியம் குழு பரிந்துரை செய்துள்ளது. ராஜஸ்தான் ஐகோர்ட் தலைமை நீதிபதியாக உள்ள மணீந்திர மோகனை சென்னை ஐகோர்ட் தலைமை நீதிபதியாக இடமாற்றம் செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. திரிபுரா ஐகோர்ட் தலைமை நீதிபதியாக உள்ள அப்ரேஷ் குமார் சிங்கை தெலுங்கானா ஐகோர்ட் தலைமை நீதிபதியாக இடமாற்றம் செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ளது. ஜார்க்கண்ட் ஐகோர்ட் தலைமை நீதிபதியாக உள்ள ராசந்திர ராவை திரிபுரா ஐகோர்ட் தலைமை நீதிபதியாக இடமாற்றம் செய்ய பரிந்துரை செய்யப்பட்டுள்ளது.

## அண்ணா பல்கலைக்கழக வழக்கில்

# முதல்வர் மு.க.ஸ்டாலின் சொன்னதை செய்திருக்கிறார்: கனிமொழி எம்.பி.

**சென்னை, மே 29-**

அண்ணா பல்கலைக்கழக வழக்கில் முதல்வர் மு.க.ஸ்டாலின் சொன்னதை செய்திருக்கிறார் என்று தெரிவித்துள்ள தி.மு.க. எம்.பி கனிமொழி, இந்த வழக்கில் 157 நாட்களில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

தி.மு.க. கழகத் துணைப் பொதுச்செயலாளரும், பாராளுமன்றக் குழுத்தலைவருமான கனிமொழி எம்.பி வெளியிட்டுள்ள அறிக்கையில், அண்ணா பல்கலைக்கழக மாணவி பாலியல் வழக்கில் கைதான ஞானசேகரன் மீது சுமத்தப்பட்ட 12 குற்றச்சாட்டுகளில், 11 குற்றச்சாட்டுகள் நிரூபணமாகி உள்ளதாக சென்னை மகளிர் நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருக்கிறது. ஜூன் 2-ம் தேதி தண்டனை விவரங்களை அளிப்பதாக நீதிபதி அறிவித்திருக்கிறார். கடந்த டிசம்பரில் நடந்த நிகழ்வில் மிகத் துரிதமாகக் குற்றவாளியைக் கண்டுபிடித்து, குற்றப்பத்திரிகையைத் தாக்கல் செய்து, வழக்கு விசாரணையை முடித்து, குற்றவாளிக்குத் தண்டனையையும் பெற்றுக் கொடுத்திருக்கிறது தமிழகக் காவல் துறை.



இந்த வழக்கு தொடர்பாகக் கடந்த ஜனவரி 8-ம் தேதி சட்டமன்றத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசும்போது, ‘‘இந்த வழக்கின் குற்றவாளி மீது தயவுதாட்சணியம் இல்லாமல் காவல்துறை நடவடிக்கை எடுக்கும். இந்த வழக்கில் 60 நாட்களுக்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படும். விரைவு நீதிமன்றத்தில் விசாரணை நடத்தப்பட்டு, குற்றவாளிக்கு உச்சபட்சத் தண்டனை கிடைக்கும்’’ என்று சொன்னார். அதனைச் செய்து காட்டியிருக்கிறார்.

அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கில் தீர்ப்பு வெளியாவதற்கு 15 நாட்களுக்கு முன்புதான், பொள்ளாச்சி பாலியல் வழக்கில் 9 பேருக்குச் சாகும் வரை ஆயுள் தண்டனை விதிக்கப்பட்டது. அந்த வழக்கோடு அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கையும் கொஞ்சம் ஒப்பிட்டுப் பாருங்கள்.

எடப்பாடி பழனிசாமி ஆட்சியில் நடந்த பொள்ளாச்சி பாலியல் வழக்கு நாட்டையே உலுக்கியது. பொள்ளாச்சி பாலியல் குற்ற வழக்கை விசாரித்தது சி.பி.ஐ. ஆனால் அண்ணா பல்கலைக்கழக வழக்கை விசாரித்தது தமிழகக் காவல் துறை. பொள்ளாச்சி பாலியல் வழக்கில் நியாயம் கிடைக்க ஆறரை ஆண்டு ஆனது. அண்ணா பல்கலைக்கழக மாணவி வழக்கில் 157 நாளில் தீர்ப்பைப் தீர்ப்பை பெற்றுக் கொடுத்திருக்கிறோம். 2019 முதல் 2021 மே வரையில் எடப்பாடி பழனிசாமிதான் ஆட்சியில் இருந்தார். பொள்ளாச்சி பாலியல் வழக்கை அவர் நடத்திய லட்சணத்தை இந்த நாடறியும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## பேச்சுவார்த்தை தோல்வி:

# டேங்கர் லாரி உரிமையாளர்கள் 6-வது நாளாக வேலைநிறுத்தம்

**மீஞ்சூர், மே 29-**

டேங்கர் லாரி உரிமையாளர்கள் தொடர்ந்து இன்றும் 6-வது நாளாக வேலைநிறுத்தத்தில் ஈடுபடவுள்ளனர்.

மீஞ்சூர் அடுத்த அத்திப்பட்டுபுதுநகரில் பாரத் பெட்ரோலியம் முனையம் செயல்பட்டு வருகிறது. இங்கிருந்து பெட்ரோலிய பொருட்கள் தரம் பிரித்து டேங்கர் லாரிகள் மூலம் திருவள்ளூர், காஞ்சீபுரம், சென்னை உள்ளிட்ட மாவட்டங்களின் பெட்ரோல் நிலையங்களுக்கு கொண்டு செல்லப்படுகிறது. இந்த பெட்ரோலிய பொருட்கள் லாரிகளில் கொண்டு செல்வதற்காக ஒப்பந்த அடிப்படையில் லாரிகள் பயன்படுத்தப்படுகிறது.

இந்த நிலையில் கடந்த ஆண்டு வழங்கப்பட்ட ஒப்பந்த வாடகையை விட 15 சதவீதம் குறைவாக வழங்க பாரத் பெட்ரோலிய நிறுவனம் முடிவு செய்ததற்கு டேங்கர் லாரி உரிமையாளர்கள் எதிர்ப்பு தெரிவித்து கடந்த 23-ந் தேதி முதல் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டுள்ளனர். வேலை நிறுத்த போராட்டம் நடந்து வரும் நிலையில் பாரத் பெட்ரோலிய நிறுவன அதிகாரிகளுடன் டேங்கர் லாரி உரிமையாளர்கள் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். பேச்சுவார்த்தையில் எந்த முன்னேற்றமும் ஏற்படாததை தொடர்ந்து 6-வது நாளாக இன்றும் டேங்கர் லாரி டிரைவர்கள் தொடர்ந்து போராட்டத்தில் ஈடுபடவுள்ளனர்.

# அண்ணா பல்கலை., வழக்கின் தீர்ப்புக்கு இ.பி.எஸ். வரவேற்பு

**சென்னை, மே 29-**

அண்ணா பல்கலைக்கழக பாலியல் வழக்கில் நீதிமன்ற தீர்ப்புக்கு இ.பி.எஸ். வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக அ.தி.மு.க. பொதுச்செயலாளரும், எதிர்க்கட்சி தலைவருமான எடப்பாடி பழனிசாமி தெரிவித்திருப்பதாவது:- நாட்டையே உலுக்கிய அண்ணா பல்கலை. பாலியல் வழக்கில், நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது. இந்த வழக்கில் அ.தி.மு.க. தொடர்ந்து போராட்டம் நடத்தி, மாணவியின் குரலாக மக்கள் மன்றத்தில் ஒலித்து வந்த தொடர் முன்னெடுப்புகளின் ஊடாக, தன்னிடம் வழங்கப்பட்ட குற்றப்பத்திரிகை மற்றும் ஆவணங்கள் அடிப்படையில் நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்ப்பு வரவேற்கத்தக்கது.



இருப்பினும், இந்த வழக்கில் முக்கியமான கேள்விகளுக்கு இன்னும் விடை கிடைக்கவில்லை. இந்த வழக்கின் மூலக் கேள்வியான யார் அந்த சார்? என்ற கேள்வி, இன்னும் அப்படியே இருக்கிறது. வழக்கு விசாரணையின் முதற்கட்டம் முடிவதற்குள்ளேயே, ஞானசேகரன் தவிர இந்த வழக்கில் யாரும் குற்றவாளி இல்லை என்று எதற்காக ஸ்டாலின் அரசின் காவல்துறை அவசர அவசரமாக பிரஸ் மீட் கொடுக்க வேண்டும்?

யாரைக் காப்பாற்ற இந்த வேகம்? பாதி நீதியால் தப்பித்துவிடலாம் என்று எண்ணினால், அந்த எண்ணம் ஒருபோதும் ஈடேறாது. காலம் மாறும். காட்சிகள் மாறும். விரைவில் அ.தி.மு.க. ஆட்சி அமையும். அந்த சார் ‘‘யாராக இருந்தாலும்’’, கூண்டேற்றட்டப்படுவார். சார்-ஐக் காக்கும் சார்-களையும் உடன் ஏற்றி, அவர்களும் நாட்டுக்கு அடையாளம் காட்டப்படுவர். இவ்வாறு அதில் தெரிவித்துள்ளார்.

## கன்னடம் மொழி குறித்த பேச்சு:

# கமலுக்கு கர்நாடக முதல்வர் கண்டனம்

**பெங்களூரு, மே 29-**

தமிழில் இருந்து பிறந்ததுதான் கன்னடம் என்று பேசிய கமலுக்கு கர்நாடக முதல்வர் சித்தராமையா கண்டனம் தெரிவித்துள்ளார்.

மணிரத்னம் இயக்கத்தில் கமல்ஹாசன், சிலம்பரசன், திரிஷா நடித்துள்ள ‘தக் லைப்’ படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் அண்மையில் நடைபெற்றது. இதில் பேசிய கமல்ஹாசன் கன்னட நடிகர் சிவராஜ்குமார் குறித்து பேசும்போது, “ராஜ்குமாருடைய குடும்பம் அந்த ஊரில் இருக்கும் என்னுடைய குடும்பம்.

அதனால்தான் அவர் இங்கு வந்திருக்கிறார். அதனால்தான் என்னுடைய பேச்சை தொடங்கும்போது ‘உயிரே உறவே தமிழே’ என்று தொடங்கினேன். தமிழிலிருந்து பிறந்ததுதான் கன்னடம். அதை நீங்களும் ஒத்துக் கொள்வீர்கள்’’ என்று கூறியிருந்தார். இதற்கு சிவராஜ்குமாரும் தலையை ஆம் என்று அசைத்து ஆமோதித்தார்.அவரது இந்த கருத்து கன்னட அமைப்புகள் மத்தியில் கடும் எதிர்ப்பை கிளப்பியுள்ளது.

6.5 கோடி கன்னடர்களின் சுயமரியாதையை கமல் அவமதித்துவிட்டார். கமலின் பேச்சு அநாகரிகமானது, ஆணவத்தின் உச்சம். நல்லிணக்கம் ஏற்படுத்த வேண்டிய கமல் மத உணர்வுகளை புண்படுத்தினார். கன்னட மக்களிடம் கமல் நிபந்தனையற்ற மன்னிப்பு கேட்க வேண்டும் என கர்நாடக பாஜக தலைவர் விஜயேந்திரா கூறியுள்ளார். கமல்ஹாசன் கன்னடர்களை இழிவுபடுத்திவிட்டார் என கன்னட ரக்‌ஷன வேதிகே அமைப்பின் தலைவர் குற்றம்சாட்டி உள்ளார். தமிழில் இருந்து பிறந்தது கன்னடம் என்ற கமல்ஹாசனின் பேச்சுக்கு கர்நாடகாவில் எதிர்ப்பு எழுந்துள்ளது. பெங்களூருவில் கமல் நடித்த தக் லைப் பட போஸ்டர்களை கன்னட அமைப்பினர் கிழித்து எறிந்தனர்.

இந்தநிலையில், பெங்களூருவில் கர்நாடக முதல்வர் சித்தராமையா செய்தியாளர் சந்திப்பில் கூறியதாவது:- நடிகர் கமல்ஹாசனுக்கு கன்னட மொழி குறித்த வரலாறு தெரியாது. கன்னடமொழிக்கு நீண்ட வரலாறு உண்டு. அது கமலுக்கு தெரியவில்லை. வரலாறு தெரியாமல் கமல்ஹாசன் பேசுகிறார் என்றார். மேலும் கன்னட மொழி குறித்த வரலாறு தெரியாமல் கமல்ஹாசன் பேசக்கூடாது என்று கண்டனம் தெரிவித்தார்.

# மணிப்பூரில் அடுத்தடுத்து நிலநடுக்கம்

**இம்பால், மே 29-**

மணிப்பூரில் ஒரே நாளில் அடுத்தடுத்து நிலநடுக்கம் ஏற்பட்டதால் அந்த பகுதி மக்கள் அச்சம் அடைந்துள்ளனர்.

மணிப்பூரில் நேற்று அதிகாலையில் திடீர் நிலநடுக்கம் ஏற்பட்டது. அதிகாலை 1.54 மணியளவில் (இந்திய நேரப்படி) நேற்று ஏற்பட்ட முதல் நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 5.2 ஆக பதிவானதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதம் மற்றும் பாதிப்பு குறித்து எந்தவித தகவலும் வெளியாகவில்லை.

இதனையடுத்து இரண்டாவது முறையாக காலை 2.26 மணியளவில் ரிக்டரில் 2.5 அளவிலும், மூன்றாவது முறையாக காலை 10.23 மணியளவில் ரிக்டரில் 3.9 அளவிலும் பதிவாகி உள்ளதாக தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

# புதுச்சேரியில் மதுபானங்கள் விலை உயர்வு அமல்

**புதுச்சேரி, மே 29-**

புதுச்சேரியில் மதுபானங்கள் விலை உயர்வு அமலுக்கு வருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

புதுச்சேரி மாநிலத்தில் ஏராளமான மதுவகைகள் தரமானதாகவும், குறைந்த விலையிலும் கிடைக்கிறது. இதனால் பல்வேறு மாநிலங்கள் மற்றும் மாவட்டங்களில் இருந்து மதுப்பிரியர்கள் அதிக அளவில் புதுவைக்கு வந்து மது பானத்தை விரும்பி அருந்துகின்றனர்.

இதனால் புதுவை அரசின் வருவாயில் மது விற்பனை முக்கிய இடம் பிடித்துள்ளது. புதுவையில் அரசு மற்றும் தனியார் மூலம் ஏராளமான மது விற்பனை கடைகள் உள்ளன. மதுபானங்களுக்கு விற்பனை வரிக்கு பதிலாக காலால் வரி, கூடுதல் கலால்வரி, இறக்குமதி வரி விதிக்கப்படுகிறது.

இந்தநிலையில் புதுச்சேரியில் பிராந்தி, விஸ்கி, ஒயின் உள்ளிட்ட மதுபானங்கள் விலை லிட்டருக்கு ரூ.50 முதல் ரூ.325 வரை உயர்தப்பட்டுள்ளது.

பீர் வகைகள் ரூ.30 வரை விலை உயர்ந்துள்ளது. இதன்படி மதுபானங்களின் விலை உயர்வு உடனடியாக அமலுக்கு வருவதாக புதுச்சேரி கலால் துறை அறிவிப்பு வெளியிட்டுள்ளது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



மாநிலங்களவை உறுப்பினராக வைகோவுக்கு மீண்டும் வாய்ப்பு வழங்காவிட்டாலும், வரும் 2026ம் ஆண்டு சட்டமன்றத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் ம.தி.மு.க. தொடரும். பாராளுமன்றத்திற்கு உள்ளே மட்டுமல்ல, எப்போதும் மக்களின் குரலாக வைகோ ஒலிப்பார்.

- துரை வைகோ



திராவிட மாடல் அரசு பெண்களுக்கு எதிரான எந்தக் குற்றங்களையும் சகித்துக் கொள்ளாது. பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுப்பதிலும் அவர்களுக்கான விரைவான நீதியைப் பெற்று தருவதிலும் திராவிட மாடல் அரசு காட்டும் உறுதிப்பாட்டிற்கும் நடவடிக்கைகளுக்கும் ஞானசேகரன் வழக்கின் தீர்ப்பே சாட்சி.

- ஆர்.எஸ்.பாரதி



இந்தியா அமைதியாக இருக்க விரும்புகிறது. ஆனால், துரதிர்ஷ்டவசமாக எல்லையின் மறுபக்கத்தில் உள்ள எங்கள் நண்பர்கள் (பாகிஸ்தான்) அதை விரும்புவதில்லை. கிட்டத்தட்ட நான்கு தசாப்தங்களாக நாங்கள் தொடர் தாக்குதல்களைச் சந்தித்துள்ளோம். தாக்குதல்களை நாங்கள் கண்டிருக்கிறோம்.

- சசி தரூர்



கூட்டணியை பொறுத்தவரையில் சட்டமன்ற தேர்தலில் எண்ணிக்கை என்பது முக்கியமல்ல, எண்ணம்தான் முக்கியம். தமிழகம் முழுவதும் விரைவில் வேல் யாத்திரை, அண்ணாமலை நடைபயணம் போல சட்டமன்ற உறுப்பினர்களுடன் யாத்திரை மேற்கொள்ள இருக்கிறேன்.

- நயினார் நாகேந்திரன்

## நிலக்கோட்டையில்
# ஜமாபந்தியில் பொதுமக்கள் மனு மீது நடவடிக்கை எடுக்க ஆர்.டி.ஓ. உத்தரவு



**வத்தலகுண்டு, மே 29-**

திண்டுக்கல் மாவட்டம், நிலக்கோட்டை தாலுகா அலுவலகத்தில் திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் சக்திவேல் தலைமையில் நேற்று வத்தலக்குண்டு வருவாய் கிராமத்தில் உள்ள வத்தலகுண்டு, கோம்பை பட்டி, கணவாய்ப்பட்டி, விராலிப்பட்டி, சேவுகம்பட்டி, செங்கட்டாம்பட்டி உள்ளிட்ட கிராம ஊராட்சிகளுக்கு வருவாய் தீர்வாய ஜமாபந்தி முகாம் நடைபெற்றது.

இந்த ஜமாபந்தி முகாமில் ஏராளமான மனுக்கள் பட்டா மாறுதல், சாலை வசதி, வாரிசு சான்று, இரண்டு பெண் குழந்தைகள் சான்று, உள்ளிட்ட பல்வேறு பொது மக்கள் குவிந்தன. இந்த மனுக்களை பெற்ற திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் சக்திவேல் வட்டாட்சியர் மற்றும் வருவாய் ஆய்வாளர் கிராம நிர்வாக அதிகாரிகளுக்கு உரிய நடவடிக்கை எடுக்க உடனடியாக உத்தரவிட்டார்.

இந்த ஜமாபந்தி முகாமில் நிலக்கோட்டை தாசில்தார் விஜயலட்சுமி, வருவாய் ஆய்வாளர் பரிமளா, கிராம நிர்வாக அலுவலர்கள் சுமதி ஊர்காலன், நாகராஜ் ,சரண்யா நாகேந்திரன், செந்தில்நாதன்,சோபனா, மாணிக்கமுத்து மற்றும் கிராம நிர்வாக அலுவலக உதவியாளர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



மேலூர் ஸ்ரீ திரௌபதி அம்மன் கோவிலின் 41-ம் ஆண்டு பூக்குழி உற்சவ விழாவை முன்னிட்டு விழாவின் முக்கிய நிகழ்வாக பீமன் கீசன் வேடம் அணிந்து நகரின் முக்கிய வீதிகளில் பீமன், மருளாடிகள் ஊர்வலமாக வந்தனர்.

# கடலாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் சத்துணவு சமையல் உதவியாளர்களுக்கு நேர்முக தேர்வு



**கடலாடி, மே 29-**

கடலாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் சத்துணவு சமையல் உதவியாளர்களுக்கான நேர்முக தேர்வு நடைபெற்றது. கடலாடி ஊராட்சி ஒன்றிய அலுவலகத்தில் கலெக்டரின் நேர்முக உதவியாளர் (சத்துணவு பிரிவு) முத்துமாணிக்கம் கடலாடி ஊராட்சி ஒன்றிய ஆணையாளர் சங்கரபாண்டியன் தலைமையிடத்து துணை வட்டாட்சியர் சசிகலா ஆகியோர் முன்னிலையில் (மே மாதம்) 26 மற்றும் 27 -28 ஆகிய மூன்று நாட்கள் சத்துணவு சமையல் உதவியாளர்களுக்கான நேர்முக தேர்வு நடைபெற்றது. கடலாடி ஊராட்சி ஒன்றியத்தில் 21 சமையல் உதவியாளர்களுக்கான இடம் காலியாக இருந்தது.இதில் 19 காலி இடங்களுக்கு மட்டும் 516 பேர் விண்ணப்பம் அளித்திருந்தனர். காலியாக இருந்த2 இடங்களுக்கு விண்ணப்பம் அளிக்க வில்லை. இதில் 143 பேருக்கு மட்டும் நேர்முக தேர்வில் கலந்துகொள்ள அனுமதி அளிக்கப்பட்டது. 117 பேர் நேர்முக தேர்வில் கலந்துகொண்டனர்.26 பேர் கலந்து கொள்ளவில்லை. துணை வட்டார வளர்ச்சி அலுவலர் (சத்துணவு பிரிவு) ஜோதி மாணிக்கம் இளநிலை உதவியாளர் அருண்குமார் உள்ளிட்ட ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் நேர்முக தேர்வின் போது உடனிருந்தனர்

## கமுதி அருகே உள்ள புதுக்கோட்டையில்
# முத்தாலம்மன் கோவில் வைகாசி பொங்கல் விழாவில் நடந்த வடமாடு மஞ்சு விரட்டு



**கமுதி, மே 29-**

ராமநாதபுரம் மாவட்டம், கமுதி அருகே புதுக்கோட்டை கிராமத்தில் உள்ள முத்தாலம்மன், நிறைகுளத்து அய்யனார் கோவில் வைகாசி பொங்கல் விழா மற்றும் முத்துராமலிங்கத் தேவர் சிலையின் 33-வது குருபூஜை விழாவை முன்னிட்டு வடமாடு மஞ்சுவிரட்டு நேற்று நடைபெற்றது.

வடமாடு மஞ்சுவிரட்டு விழாவை முன்னிட்டு, புதுக்கோட்டை கண்மாய் பகுதியில் உள்ள மைதானத்தின் நடுவில் வடம் கட்டி ஒவ்வொரு மாடாக மைதானத்தில் கயிறு கட்டி அவிழ்க்க பட்டது.11 காளைகள் இதில் கலந்து கொண்டன. ஒவ்வொரு காளையை அடக்க 20 நிமிடங்கள் ஒதுக்க பட்டு காளைகளை அடக்க 9 வீரர்கள் அடங்கிய மாடுபிடி வீரர்கள் பங்கேற்றனர்.

இந்த வடமாடு எருது கட்டு விழாவிற்கு மதுரை, இராமநாதபுரம், விருதுநகர், சிவகங்கை, தேனி உட்பட பல்வேறு மாவட்டங்களில் இருந்து காளைகள் வந்திருந்தன. இந்த எருது கட்டு விழாவை பெண்கள்,சிறுவர்கள், முதியோர் உள்ளிட்ட 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட பார்வையாளர்கள் ஆர்வமுடன் ரசித்தனர். பிடிபடாத வெற்றி பெற்ற காளைகளின் உரிமையாளருக்கு அண்டா, குத்துவிளக்கு, ரொக்கப்பணம் வழங்கப்பட்டது. இதே போல் மாடுகளை பிடித்த வீரர்களுக்கும் இதே போல பரிசுகள் வழங்கபட்டது.

# பரமக்குடி நகராட்சி சார்பாக நாய்களுக்கு தடுப்பூசி முகாம்



**பரமக்குடி, மே 29-**

பரமக்குடி நகராட்சி சார்பில் தெருவில் திரியும் சமுதாய நாய்களுக்கான தடுப்பூசி முகம் நடைபெற்றது. இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி நகராட்சி மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை இணைந்து நடத்தும் தெருவில் வாழும் சமுதாய நாய்களுக்கான வெறி நோய் தடுப்பூசி போடும் முகம் நேற்று நடைபெற்றது.

பரமக்குடி நகராட்சி ஆணையாளர் முத்துசாமி தலைமை வகித்தார். சுகாதார அலுவலர் மதன் முன்னிலை வைத்தார். சுகாதார ஆய்வாளர் ஜெகதீஷ் வரவேற்றார். பரமக்குடி நகராட்சிக்கு உட்பட்ட பகுதிகளில் பொதுமக்களை அச்சுறுத்த வகையில் தெரியும் சமுதாய நாய்களுக்கு தடுப்பூசிகள் போடப்பட்டது. நேற்று துவங்கிய இம்முகாமில் மொத்தம் 35-க்கும் மேற்பட்ட சமுதாய நாய்களுக்கு ஊசி போடப்பட்டது.

பரமக்குடியில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உள்ள சமுதாய நாய்களுக்கு வெறிநோய் தடுப்பூசி தொடர்ந்து போடப்படும் என ஆணையாளர் தெரிவித்தார். முகாமில் சுகாதாரப் பணியாளர்கள், கால்நடை மருத்துவர்கள் மற்றும் பணியாளர்கள் கலந்து கொண்டனர்.

# விஜய் டிவி மற்றும் ஜியோ ஹாட்ஸ்டாரில் ஸ்டார்ட்அப் சிங்கம் சீசன் 2 ஆரம்பம்

**சென்னை, மே 29-**

ஸ்டார்ட்அப் உலகத்தையும், தமிழ் குடும்பங்களையும் சமமாகக் கவர்ந்த நிகழ்ச்சியான ஸ்டார்ட்அப் சிங்கம் மீண்டும் புதிய அத்தியாயத்துடன் ஆரம்பமாக உள்ளது.- இந்த முறை மேலும் பெரிதாகவும், புதுமையாகவும் இந்த நிகழ்ச்சி ஒளிபரப்பாக உள்ளது.தமிழ்நாட்டின் முதலாவது ஸ்டார்ட்அப் ரியாலிட்டி நிகழ்ச்சி ஆன இது 2025 நவம்பர் மாதத்தில் விஜய் டிவி மற்றும் ஜியோ ஹாட்ஸ்டாரில் ஒளிபரப்பாக உள்ளது. 26 எபிசோட்களில் 75 தேர்ந்தெடுக்கப்பட்ட ஸ்டார்ட்அப்புகள் தங்களது பயணத்தையும் கனவுகளையும் பரப்ப தயாராக உள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் தற்போது *www.startupsingam.com*-ல் வரவேற்கப்படுகின்றன.

முதல் சீசன் பெற்ற வெற்றிகள் ரூ.55 கோடிக்கு மேல் முதலீட்டு உறுதிகள் ஒவ்வொரு எபிசோடிலும் நேரடி முதலீட்டாளர் கலந்துரையாடல்கள் பல்துறை ஸ்டார்ட்அப்புகள் உட்பட 39 நிறுவனங்கள் தேர்வாகின.75+ முதலீட்டாளர்கள் முன்னணி வின்சர் கேபிடல்களும் ஏஞ்சல் நெட்வொர்க்குகளும் உள்ளடக்கம் தமிழகத்திலும், உலகத்தமிழ் மக்களிடையும் லட்சக்கணக்கான பார்வையாளர்களை பெற்றது. ஸ்டார்ட்அப் சிங்கம் ஒரு சாதாரண தொலைக்காட்சி நிகழ்ச்சி அல்ல; இது தொடக்க நிலை ஸ்டார்ட்அப்புகளுக்கான மூலதனம், நம்பிக்கை, மற்றும் நம்பிக்கையான அங்கீகாரம் கிடைக்கும் ஒரு இயக்கமாக மாறியுள்ளது. ஸ்டார்ட்அப் நிறுவனங்களுக்கான அழைப்பு - இப்போதே விண்ணப்பியுங்கள்! நீங்கள் கல்லூரி மாணவரா, சிறு அல்லது நடுத்தர நிறுவனத் தலைவர் இருக்கிறீர்களா, அல்லது ஒரு Tier-2 நகரில் இருந்து ஒரு வளர்ந்து வரும் ஸ்கேலப் நிறுவனம் நடத்துகிறீர்களா? உங்களிடம் ஒரு வலுவான தயாரிப்பும் வளர்ச்சி கதை இருந்தால் ஸ்டார்ட்அப் சிங்கம் உங்களைத் தேடுகிறது. : *www.startupsingam.com*விண்ணப்பிக்கலாம்.

# பயோனீயர் தனது ஆர்&டி யை பெங்களூருவில் ஆட்டோமோட்டிவ் மற்றும் மொபிலிட்டி தொழிலநுட்ப வளர்ச்சிக்கான மையம் தொடங்கபட்டுள்ளது

**சென்னை, மே 29-**

ஆட்டோமொடிவ் எலக்ட்ரானிக்ஸ் மற்றும் மொபிலிட்டி தீர்வுகளில் உலகளாவிய முன்னணி நிறுவனமான பயோனீயர் கார்ப்பரேஷனின் கிளையமைப்பான பயோனீயர் இந்தியா, இந்தியாவில் பெங்களூரில் தன் புதிய ஆராய்ச்சி மற்றும் மேம்பாட்டு (ஆர்&டி) மையத்தைத் திறந்துள்ளது இந்நிகழ்வில் வெளிநாட்டு நிர்வாக உறுப்பினர்களுடன் இணைந்து கொண்ட பயோனியர் இந்தியாவின் நிர்வாக இயக்குநர் அனிகேத் குல்கர்னி மற்றும் பயோனியர் இந்தியாவின் ஆர்&டி துணைத் தலைவர் மணீஷ் பாசின் ஆகியோர், ஒருங்கிணைந்த வன்பொருள் மற்றும் மென்பொருள் தீர்வுகளுடன் இந்திய வாகன உற்பத்தியாளர்களை ஆதரிப்பதில் தங்கள் வலுவான அர்ப்பணிப்பை வெளிப்படுத்தினர். இது நிறுவனத்தின் இயக்க அனுபவங்களை மேம்படுத்துவதற்கான நோக்கத்துடன் ஒத்துப்போகிறது.

இந்த அதிநவீன வசதி மையம் கேமரா சோதனை, எம்பெட்டெட் அமைப்புகள், மின்னணுவியல் மற்றும் மென்பொருள் சரிபார்ப்புக்கான சிறப்பு ஆய்வகங்களைக் கொண்டுள்ளது. ஃபோஸ்டர் அஜைல் மற்றும் குறுக்குசெயல்பாட்டு தயாரிப்பு மேம்பாட்டை வளர்ப்பதற்கான கூட்டு இடங்களையும் இது கொண்டுள்ளது.பயோனீயர் நிறுவனம் தன் விரிவாக்க உத்தியின் ஒரு பகுதியாக, இந்தியாவில் உள்ள பல்வேறு பொறியியல் துறைகளில் எம்பெட்டெட் மென்பொருள், கணினி பார்வை, கிளவுட் இணைப்பு, மொபைல் ஒருங்கிணைப்பு மற்றும் ஏஐ ஆகியவற்றில் திறமைசாலிகளை பணியமர்த்தி வருகிறது. வரும் மாதங்களில் இந்தியாவில் அதன் ஆர்&டி பணியாளர்களை கணிசமாக அதிகரிக்க நிறுவனம் திட்டமிட்டுள்ளது.

# டிராக்டர்மீது அரசு விரைவு பேருந்து மோதிய விபத்தில் ஒருவர் உயிரிழப்பு

**திருமங்கலம், மே 29-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் - விருதுநகர் நான்கு வழி சாலை காட்டு பத்திரகாளி கோவில் அருகே நேற்று அதிகாலை 2 மணி அளவில் டிராக்டர் ஒன்று சிவகாசி நோக்கி சென்று கொண்டிருந்தது.அப்போது திருச்சியிலிருந்து நாகர் கோவில் நோக்கி சென்ற அரசு விரைவு பேருந்து முன்னாள் சென்ற டிராக்டர் மீது பயங்கரமாக மோதியது.இதில் விருதுநகர் மாவட்டம் சிவகாசி அருகேயுள்ள திருத்தங்கலைச் சேர்ந்த ஓட்டுநர் மாடசாமி சம்பவ இடத்திலேயே உயிரிழந்தார்.மற்றொருவர் பலத்த காயமடைந்தார். அவ்வழியாக வந்த வாகன ஓட்டிகள் இது குறித்து உடனடியாக தகவல் அளித்தனர்.

அதன் பேரில் விரைந்து வந்த திருமங்கலம் போலீசார், தீயணைப்பு நிலையத்திற்கு தகவல் அளித்து பேருந்து அடியில் சிக்கிய இருவரையும் மீட்டனர்.காயம் அடைந்த பாலமுருகன் என்ற நபரை ஆம்புலன்ஸ் மூலம் திருமங்கலம் அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக அனுப்பி வைத்தனர்.போலீசார் தொடர்ந்து விசாரணை நடத்தியதில் பாலமுருகன் திருப்பூரில் இருந்து தொழில் செய்வதற்காக டிராக்டர் வாங்கி வந்ததாகவும் எதிர்பாராமல் நடந்த விபத்தில் சிக்கி மாடசாமி உயிரிழந்ததும் தெரியவந்தது.

# தமிழ்நாடு யாதவ மகாசபை தலைவர் நாட்டாமை கே.ஜெயக்குமார், கவுன்சிலர் முத்துமாரி இல்ல திருமண விழா

## முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ -பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் நேரில் வாழ்த்து



**மதுரை, மே 29-**

தமிழ்நாடு யாதவ மகாசபை தலைவர் நாட்டாமை கே.ஜெயக்குமார், கவுன்சிலர் முத்துமாரி இல்ல திருமண விழாவில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ -பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் நேரில் வாழ்த்து தெரிவித்தனர்.

இதனை தொடர்ந்து தமிழ்நாடு யாதவ மகாசபை ஒருங்கிணைந்த மதுரை மாவட்ட தலைவரும் ,அதிமுக 85 வார்டு கிழக்கு வட்ட செயலாளருமான நாட்டாமை கே.ஜெயக்குமார், கவுன்சிலர் முத்துமாரி இவர்களது மகன் பிச்சைமணி என்ற பிரதீப்பிற்க்கும் தல்லாகுளம் ஆறுமுகம் மெஸ் ரமேஷ் ,கலாராணி ஆகியோர் மகள் செந்தாமரை செல்வி இவர்களது மகள் திருமண நேற்று காலை 9 மணிக்கு ராஜா முத்தையா மன்றத்தில் நடந்தது.

இந்த திருமணத்தில் மதுரை மாநகர் மாவட்ட அதிமுக செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்லூர் கே.ராஜூ எம் எல் ஏ, பாஜக மாநில தலைவர் நயினார் நாகேந்திரன், சட்ட மன்ற எதிர் கட்சி துணை தலைவர் ஆர்.பி.உதயகுமார், புறநகர் கிழக்கு மாவட்ட செயலாளர் வி.வி.ராஜன் செல்லப்பா எம் எல் ஏ ,. யாதவ மகா சபை மாநில தலைவர் டாக்டர் நாசே ராமச்சந்திரன், ஜமீன் புலிகேசி லலிதா, மலையாண்டி, நல்லமணிகோனார், பரமசிவகோனார், சோலைமலை பிச்சை, டி ஆர் நாகராஜன், வேலு மனோகர், வில்லா புரம் ரமேஷ், , அன்னபூர்ணா தங்கராஜ், அதிமுக நிர்வாகிகள் ஜெ.ராஜா, அண்ணா துரை, குமார், எம் எஸ் பாண்டியன், மற்றும் அதிமுக கவுன்சிலர்கள், விழாவில் முன்னாள் அமைச்சர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள், மாவட்ட நிர்வாகிகள், அனைத்து அணி அமைப்பாளர்கள், பகுதி செயலாளர்கள் , தமிழ் நாடு யாதவ மகாசபை மதுரை ஒருங்கிணைந்த மாவட்ட நிர்வாகிகள் உட்பட பலரும் நேரில் மணமக்களை வாழ்த்தினர்.




மதுரை பரவை பேரூராட்சி சத்தியமூர்த்தி நகர் ஸ்ரீ ராஜகாளியம்மன் கோவில் திருவிழாவில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே. ராஜூ,ஜெயந்தி ராஜூ ஆகியோர் அம்மனைதரிசித்து பக்தர்களுக்கு அன்னதானத்தை துவக்கி வைத்தனர். உடன் பரவை பேரூராட்சி செயலாளர் பரவை சி.ராஜா,பரவை சேர்மன் கலாமீனா ராஜா மற்றும் பரவை பேரூர்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# நத்தத்தில் திடீர் சாலை மறியல்

**நத்தம், மே 29-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் - காக்காபட்டியை சேர்ந்தவர் கண்ணன்(54). இவரது மனைவி சின்னப்பொண்ணு (48). இவர் நேற்று மதியம் கோவில்பட்டி பகுதியில் உள்ள கிணற்றில் கால் தவறி விழுந்து பலியானார். தொடர்ந்து அந்த பெண்ணின் உடல் நத்தம் அரசு மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்கு வைக்கப்பட்டது. இந்நிலையில் பெண்ணின் கழுத்தில் காயங்கள் இருப்பதாக கூறி டாக்டர்கள் பிரேத பரிசோதனை செய்ய மறுத்து திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு கொண்டு செல்லுங்கள் என கூறியுள்ளனர்.

இதனால் ஆத்திரமடைந்த அவரது உறவினர்கள் நத்தம் அரசு மருத்துவமனை முன்பு திடீர் சாலை மறியலில் ஈடுபட்டனர். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற போலீஸ்-சப்-இன்ஸ்பெக்டர் கிருஷ்ணகுமார் உள்ளிட்ட போலீசார்கள் மறியலில் ஈடுபட்டவர்களிடம் பேச்சுவார்த்தை நடத்தினர். நத்தத்தில் பிரேத பரிசோதனை செய்யப்படும் என போலீசார் கூறியதையடுத்து மறியலில் ஈடுபட்டவர்கள் கலைந்து சென்றனர்.இதனால் நத்தம்- திண்டுக்கல் சாலையில் சிறிது நேரம் போக்குவரத்து பாதிக்கப்பட்டது.



அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமியின் 71-வது பிறந்த நாளை முன்னிட்டு திருத்தணியில் முருகன் கோவிலில் 2026- ல் அ.தி.மு.க. ஆட்சி அமைய வேண்டியும், எடப்பாடி பழனிசாமி நீடூழி வாழவேண்டியும் மாநில அ.தி.மு.க. மருத்துவரணி இணை செயலாளர் டாக்டர் சரவணன் தங்கத்தேர் இழுத்து வழிபட்டார். இதில் நிர்வாகிகள் காயத்ரிரகுராம், சக்திசரவணன், பைக்கார செழியன், ராமசுப்பு, சுந்தர், ரஞ்சித்முகமது உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# நத்தத்தில் தொழிலாளி மயங்கி விழுந்து உயிரிழப்பு

**நத்தம், மே 29-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே எர்ரமநாயக்கன்பட்டியை சேர்ந்தவர் பாப்புச்சாமி(52).கூலித்தொழிலாளி. இவர் நேற்று முன்தினம் மாமரத்துபட்டியை சேர்ந்த ரமேஷ்குமார் (48) என்பவருடன் பைக்கில் சிவகங்கைக்கு வேலைக்கு சென்று விட்டு மீண்டும் மாலையில் ஊருக்கு திரும்பி கொண்டிருந்தார். அப்போது நத்தத்தில் யூனியன் அலுவலகம் அருகே டீ குடிப்பதற்காக பைக்கில் இருந்து கீழே இறங்கியுள்ளார்.அப்போது திடீரென மயங்கி கீழே விழுந்து உயிரிழந்தார்.தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற நத்தம் போலீசார் இறந்தவரின் பிரேதத்தை கைபற்றி நத்தம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர்.மேலும் இச்சம்பவம் குறித்து நத்தம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தினர்.

மழைத்துளி
மண்ணின்
உயிர்துளி



உலக பட்டினி தினத்தை முன்னிட்டு தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் விஜயின் ஆணைக்கிணங்க பொதுசெயலாளர் ஆனந்த் ஆலோசனைப்படி தமிழக வெற்றிக் கழகத்தின் சார்பில் திருப்பரங்குன்றம் சட்டமன்றத் தொகுதி திருநகர் மருதுபண்டியன் தலைமையில் மதுரை புறநகர் மாவட்ட இளைஞரணி நிர்வாகி ஷேக் முகமது நஜீர் ஏற்பாட்டில் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. இதில் மதன், நவின், பாத்திமா பீவி,கணேஷ், வில்லாபுரம் கார்த்தி, கௌதம், ஹரிஹரன் நந்தகுமார், அஸ்வின், பிரவீன், விஷ்ணு நிரஞ்சன், ஆரோக்கிய தீபக், லோகேஷ், பிரதீப், விக்கி, சந்துரு, சங்கித், கார்த்தி, அழகர், சஞ்சய், கதிரேசன், யாசின் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டனர்.

# ஆயுஷ் அடிப்படையிலான மதிப்புமிக்க மருத்துவ பயணத்தில் இந்தியாவின் தலைமையை ஒன்றாக வலுப்படுத்துவோம்

## மத்திய இணை அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ்

**சென்னை, மே 29-**

சென்னையில் இன்று நடைபெற்ற மதிப்புமிக்க ஆயுஷ் மருத்துவ பயணம் குறித்த தென் பிராந்திய உச்சி மாநாடு, நாட்டை முழுமையான மற்றும் ஒருங்கிணைந்த சுகாதார பராமரிப்புக்கான உலகளாவிய மையமாக நாட்டை நிறுவ வேண்டும் என்ற பிரதமர் நரேந்திர மோடியின் தொலைநோக்கு பார்வையை நிறைவேற்றுவதற்கான ஒரு குறிப்பிடத்தக்க படியை குறிக்கிறது. மதிப்புமிக்க ஆயுஷ் மருத்துவ பயணம் - நல்வாழ்வை ஊக்குவித்தல், உலகளாவிய உறவுகளை வலுப்படுத்துதல்' என்ற கருப்பொருளின் கீழ், இயற்கை, தடுப்பு மற்றும் நோயாளிகளை மையமாக கொண்ட சுகாதார தீர்வுகளுக்கான அதிகரித்து வரும் உலகளாவிய தேவையை பூர்த்தி செய்வதில் இந்தியாவின் விரிவடைந் துவரும் பங்கை இந்த உச்சி மாநாடு எடுத்துக் காட்டுகிறது. கேரளாவில் பஞ்சகர்மா மையங்கள், தமிழ்நாடு மற்றும் கர்நாடகாவில் சித்தா மற்றும் இயற்கை மருத்துவ நிறுவனங்கள் ஆகியவற்றின் வளமான பாரம்பரியத்துடன், ஆந்திரா, தெலுங்கானா மற்றும் புதுச்சேரியில் வளர்ந்து வரும் ஆராய்ச்சி மற்றும் நல்வாழ்வு உள்கட்டமைப்புடன், நாடு முழுவதும் முழுமையான பராமரிப்புக்கு தென்னிந்தியா, ஒரு முன்மாதிரியாக நிற்கிறது.

இதில் கலந்துகொண்ட மத்திய ஆயுஷ் அமைச்சகத்தின் (தனிப்பொறுப்பு) இணை அமைச்சர் பிரதாப்ராவ் ஜாதவ் பேசுகையில், இந்தியாவின் பாரம்பரிய முறைகளான ஆயுர்வேதம், சித்தா, யோகா மற்றும் இயற்கை மருத்துவம், யுனானி, சோவா ரிக்பா மற்றும் ஹோமியோபதி ஆகியவற்றின் முக்கியத்துவத்தை வலியுறுத்தினார். இது தொற்று நோய்க்கு பிந்தைய உலகில் பாதுகாப்பான, அறிவியல் ரீதியாக ஆதரிக்கப்பட்ட மற்றும் நிலையான சுகாதார அணுகுமுறைகளை அதிக அளவில் மதிக்கிறது. ஆயுஷ் அடிப்படையிலான மதிப்புமிக்க மருத்துவ பயணத்தில் இந்தியாவின் தலைமையை வலுப்படுத்தி, உலகளாவிய சுகாதாரம் மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு பங்களிக்கும் வகையில், கலாச்சார ரீதியாக வேரூன்றிய மற்றும் உலகளவில் பொருத்தமான நல்வாழ்வு மாதிரிகளை உருவாக்குமாறு அனைத்து மாநிலங்களையும் அவர் வலியுறுத்தி பேசினார்.

# பாம்பன், தூத்துக்குடி துறைமுகங்களில் 3-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றம்

**ராமேசுவரம், மே 29-**

பாம்பன், தூத்துக்குடி துறைமுகங்களில் 3-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டது.

வங்கக்கடலில் நிலவி வந்த குறைந்த காற்றழுத்த தாழ்வு பகுதி, ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வு பகுதியாக வலுப்பெற்றது. அடுத்த 24 மணி நேரத்தில் வடக்கு திசையில் மெதுவாக நகர்ந்து, காற்றழுத்த தாழ்வு மண்டலமாக வலுவடையக் கூடும்.

இதுதவிர தென் இந்திய பகுதிகளின் மேல் வளிமண்டல மேலடுக்கு சுழற்சி ஒன்றும் நிலவுகிறது. இதன் காரணங்களால் தமிழ்நாட்டில் சில இடங்களில் மழை நீடிக்கும் என்றும், மேற்கு தொடர்ச்சி மலை மாவட்டங்களில் கனமழை தொடரும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலையில் பாம்பன், தூத்துக்குடி துறைமுகங்களில் 3-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்ற வானிலை ஆய்வு மையம் அறிவுறுத்தி உள்ளது.

மன்னார் வளைகுடா, கொமாரின் பகுதி, அதை ஒட்டிய தமிழக கடற்கரையில் மணிக்கு 40 முதல் 50 கி.மீ. வேகத்தில் காற்று வீசக் கூடும். சில சமயங்களில் மணிக்கு 60 கி.மீ. வேகத்தில் காற்று வீசக்கூடும் என்பதால் 3-ம் எண் புயல் எச்சரிக்கை கூண்டு ஏற்றப்பட்டுள்ளது.

# சர்வதேச ஒலிம்பியாட் தேர்வில் சென்னை மாணவர்கள் சாதனை

**சென்னை, மே 29-**

நடப்பாண்டுக்கான ஒலிம்பியாட் தேர்வில் சென்னையைச் சேர்ந்த மூன்று மாணவர்கள் முதலிடத்தைப் பிடித்துள்ளனர். பீஸ் ஆன் கிரீன் எர்த் பப்ளிக் பள்ளியைச் சேர்ந்த எட்டாம் வகுப்பு மாணவி சின்மயி எஸ், சர்வதேச பொது அறிவு ஒலிம்பியாட் போட்டியில் இரண்டாம் இடத்தைப் பிடித்து, வெள்ளிப் பதக்கம் மற்றும் தகுதிச் சான்றிதழைப் பெற்றார். பீஸ் ஆன் கிரீன் எர்த் பப்ளிக் பள்ளியைச் சேர்ந்த நான்காம் வகுப்பு மாணவி டி. ஹஸ்னா ருக்ஷன், சர்வதேச பொது அறிவு ஒலிம்பியாட் போட்டியில் வெள்ளிப் பதக்கம் மற்றும் தகுதிச் சான்றிதழைப் பெற்று இரண்டாம் இடத்தைப் பிடித்தார். பிர்லா ஓபன் மைண்ட்ஸ் சர்வதேச பள்ளியைச் சேர்ந்த நான்காம் வகுப்பு மாணவி அம்பிகா மம்கெய்ன், சர்வதேச பொது அறிவு ஒலிம்பியாட் போட்டியில் மூன்றாம் இடத்தைப் பிடித்து, வெண்கலப் பதக்கம் மற்றும் தகுதிச் சான்றிதழைப் பெற்றார்.

இந்த ஆண்டு SOF ஒலிம்பியாட் போட்டியில் சென்னையைச் சேர்ந்த 28050 க்கும் மேற்பட்ட மாணவர்கள் உட்பட 72 நாடுகளில் இருந்து சுமார் மில்லியன் கணக்கான மாணவர்கள் பங்கேற்றனர். பி.வி. பவனின் ராஜாஜி வித்யாஷ்ரம், பத்மா சேஷாத்ரி பால பவன் சீனியர் செகண்டரி பள்ளி, லாலாஜி மெமோரியல் ஒமேகா இன்டர்நேஷனல் பள்ளி, சென்னை பப்ளிக் பள்ளி ஆகிய பள்ளிகளைச் சேர்ந்த மாணவர்கள் அதிக அளவில் பங்கேற்றனர்.

ஒலிம்பியாட் அறக்கட்டளை சார்பில் நடப்பு கல்வியாண்டில் சர்வதேச ஒலிம்பியாட் வெற்றியாளர்கள் மற்றும் ஆசிரியர்களை அங்கீகரிக்கும் வகையில், டெல்லியில் உள்ள டாக்டர் அம்பேத்கர் சர்வதேச மையத்தில் பாராட்டு விழா நடைபெற்றது. மொத்தம் 750 மாணவர்கள் மற்றும் ஆசிரியர்கள் விழாவில் கலந்து கொண்டனர். இந்த நிகழ்வில் தலைமை விருந்தினராக உச்ச நீதிமன்ற நீதிபதி மாண்புமிகு நீதிபதி ஸ்ரீ ஜே.கே. மகேஸ்வரி கலந்து கொண்டார்.

Printed Published and Owned
by S.Manimaran,
Printed at Manimaran
Printers at 9, Dindigul
Main Road, vilangudi,
Madurai - 625 018.
Phone: 0452- 2668165,
0452- 2668185,
E-Mail: maduraiedi@thinaboomi.com
RNI Regn. No.61494 /94

# காலத்தால் அழியாத வடிவமைப்பு மற்றும் லண்டனின் கலாச்சாரம்..!

**சென்னை, மே 29-**

பைகள் மற்றும் ஆபரணங்கள் துறையில் மூன்று தசாப்தங்களுக்கும் மேலான நிபுணத்துவத்துடன் தனித்து நிற்கும் பேக்ஸோன் லைஃப்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிடெட் நிறுவனமானது இன்றைய பெண்களுக்கான ஒரு சமகால ஆடம்பர கைப்பை பிரம்மாண்டமாக லண்டன் அறிமுகப்படுத்துகிறது. புதிய பிராண்ட் ஆனது, நவீன உலகளாவிய வடிவமைப்புகளை கைவினைஞர் பாரம்பரியத்துடன் சரியாகக் கலந்து, சிந்தனைமிக்க கைவினைத்திறன் மற்றும் தனித்துவத்தைக் கொண்டாடும் முதல் கைப்பைத் தொகுப்பை அறிமுகப்படுத்துகிறது.

"சந்தை தொடர்ந்து வளர்ச்சியடைந்து வருவதால், நாங்கள் பெரும்பாலும் யாரும் கவனிக்காத ஒரு வெற்று இடத்துக்குள் நுழைகிறோம் பெரும்பாலான கைப்பைகள் முதன்மையாக வேலை ஆடைகள் மற்றும் பயன்பாட்டு சார்ந்த வடிவமைப்பில் கவனம் செலுத்துகின்றன. அறிக்கை துண்டுகள் பொருள் மற்றும் தாக்கத்தின் தருணங்களுக்காக வடிவமைக்கப்பட்டுள்ளன, இன்றைய புத்திசாலித்தனமான பெண்ணுக்கு சிந்தனைமிக்க, நன்கு வடிவமைக்கப்பட்ட மற்றும் நீடித்த தோற்றத்தை ஏற்படுத்தும் ஆடம்பரத்தை வழங்குகின்றன. பாரம்பரியத்தை புதுமையுடன் இணைக்கும் மற்றும் பெண்கள் தங்கள் உண்மையானதை வெளிப்படுத்த அதிகாரம் அளிக்கும் இந்த தனித்துவமான சலுகையை நாங்கள் பெருமையுடன் சேர்ப்பதால், இந்த வெளியீடு எங்களுக்கு ஒரு அற்புதமான புதிய அத்தியாயத்தைக் குறிக்கிறது", என்று பாக்ஸோன் லைஃப்ஸ்டைல்ஸ் பிரைவேட் லிமிடெட்டின் டிஜிட்டல் & கம்யூனிகேஷன்ஸ் தலைவர் திரு. நிஷாந்த் பக்லிவால் கூறுகிறார்.

# விஷம் குடித்து மூதாட்டி பலி

**நத்தம், மே 29-**

நத்தம் அருகே எல்.வலையபட்டியை சேர்ந்தவர் நாச்சம்மாள்(59). இவரது கணவரும், மகனும் சில மாதங்களுக்கு முன்பு இறந்து விட்டனர். இதனால் மன உளைச்சலில் இருந்து வந்த நாச்சம்மாள் கடந்த 26-ம் தேதி வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் விஷத்தை குடித்து தற்கொலை செய்து கொண்டார். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற நத்தம் போலீசார் இறந்த மூதாட்டியின் பிரேதத்தை கைபற்றி நத்தம் அரசு மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் இச்சம்பவம் குறித்து போலீஸ்-சப்-இன்ஸ்பெக்டர் தர்மர் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகிறார்.



மேலூர் சந்தைப்பேட்டை வ.உ.சி நகரில் உள்ள வீரகாளியம்மன் கோவில் மஹா கும்பாபிஷேக விழா சிறப்பாக நேற்று நடைபெற்றது. நிகழ்ச்சி ஏற்பாட்டினை வ.உ.சி. நகர் நிர்வாகஸ்தர்கள், இளைஞர்கள், பொதுமக்கள் ஆகியோர் ஏற்பாடு செய்தனர்.

## காணவில்லை

நான் கீழ்காணும் முகவரியில் வசித்து வருகிறேன்.நான் கடந்த 31.03.1987 தேதியில் பரமக்குடி சார் பதிவகம் 1.1106/1987 என்ற எண்ணாக பதிவு செய்யப்பட்ட கிரைய ஆவணத்தின் மூலம் எனக்கு சொந்தமான பதிவு செய்யப்பட்ட அசல் ஆவணமானது எனது வசம் இருந்து வந்தது. மேற்படி அசல் ஆவணத்தை ஒரு பையில் வைத்து கடந்த 28.01.2025 தேதியில் காலை 8.00 மணியளவில் மேற்படி சொத்தை எனது வாரிசு தாரர்களுக்கு செட்டில்மெண்ட் ஆவணமாக எழுதி வைக்க வேண்டுமென்று எடுத்து சென்று கள்ளியடியேந்தல் கிராம பேருந்து நிலையத்தில் பேருந்துக்காக காத்திருந்தபோது மேற்படி 1.1106/1987 அசல் ஆவணம் தவறி தொலைந்துவிட்டது. மேற்படி ஆவணத்தை கண்டெடுத்தவர்கள் கீழ்காணும் எனது முகவரிக்கு தகவல் தெரிவிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ராஜமாணிக்கம், த/பெ.பெரியசாமித்தேவர்,
1/26, கிழக்குத்தெரு, கள்ளியடியேந்தல்
பி.சிறகிக்கோட்டை அஞ்சல், பரமக்குடி வட்டம்
இராமநாதபுரம் மாவட்டம். செல் : 9976523842

உயர்திரு. பழனி முதன்மை சார்பு நீதிபதி நீதிமன்றம்
அவர்கள் சமூகம்
I.A.No. 2 /2025
I.P.No.12 /2021

N.ஜெயபால், மனுதாரர் / மனுவாதி

எதிர்

திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், மிடாப்பாடி கிராமம், வன்னியர் வலசு, தண்ணீர் கிணற்றுத் தோட்டத்தில் வசிக்கும் கருப்புச்சாமிக்கவுண்டர் மகன் ஈஸ்வரன்
5ம் எதிர்மனுவாதி / 5ம் எதிர்மனுவாதி

5ம் எதிர்மனுவாதிக்கு அறிவிப்பு

மேற்படி IP மனுவில் கட்சி சேர்க்க கோரிய மனு I.A.No.2/2025ல் நெம்பராகி மேற்படி மனு வருகின்ற 24-06-2025 ம் தேதி வாய்தா போடப்பட்டுள்ளது. ஆகவே மேற்படி வாய்தா தேதியன்று காலை 10-30 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் தாங்கள் நேரிலோ அல்லது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராக வேண்டியது. தவறும் பட்சம் மேற்படி கட்சிசேர்க்க கோரும் I.A.No.2/2025 ல் ஒருதலை பட்ச உத்திரவு பகரப்படும் என்பதை அறியவும்.

// நீதிமன்ற உத்திரவுப்படி//
N.K.செல்வக்குமார் B.Com.,B.L.,
அட்வகேட்,
MS No.291/2009
மடத்துக்குளம்,
செல் : 9865944302

மாண்புமிகு உட்கோட்ட நடுவர் நீதிமன்றம் மற்றும் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம்.
திருமங்கலம்.
ந.க.எண் :2130/2025/ஆ2

சுகன்யா, த/பெ : துரைப்பாண்டி
119,லட்சுமணண் நகர் முதல் தெரு, செங்குளம் கிழக்கு , சோழவந்தான் ரோடு, திருமங்கலம் -625706, மதுரை மாவட்டம்.
------------ மனுதாரர்

--- எதிர்----

உயர்த்திரு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள்,
வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் ,மதுரை மாவட்டம்.
------------ எதிர்மனுதாரர்

அறிவிப்பு

மேற்படி மனுதாரராகிய நான் , நான் (05-06-1993)-ம் தேதி அன்று ரோஜாத் தோட்டம், திருமங்கலம் , மதுரை மாவட்டத்தில் உள்ள எனது பெற்றோர் வீட்டில் வைத்து பிறந்ததை பதிவு செய்து உத்தரவிட வேண்டி திருமங்கலம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனுதாக்கல் செய்துள்ளேன். அம்மனு மீதான விசாரணைக்கான வாய்தா வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், திருமங்கலம் முன்பாக நடைபெறுகிறது . இதில் யாருக்கேனும் ஆட்சேபனை இருப்பின் இந்த அறிவிப்பு வெளியிடப்பட்ட 30 தினங்களுக்குள் காலை 11.00 மணிக்கு மேற்படி கனம் உட்கோட்ட நடுவர் முன்பு ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக் கொள்ளலாம்.

மனுதாரர்
சுகன்யா,
திருமங்கலம்

மாண்புமிகு முதன்மை மாவட்ட நீதிமன்றம், மதுரை.
I.A.No: 1199 / 2023 in
A.S.No: / 2022

வீனா அலினி ஜெனட்,
D/o.D.A.ஜேம்ஸ், W/o.மஹபூப் அலி,
C-11-10, இந்திரா நகர், லக்னோ,
உத்தரபிரதேசம்.
---- மனுதாரர் / வாதி

--- எதிரிடை ---

P.ஆறுமுகம், S/o.வேளாங்கன்னி,
D/o.திருமதி.அல்போன்சா,
க.எண்.12-8-14A, கோட்டை மேடு தெரு, சோழவந்தான்,
வாடிப்பட்டி தாலுகா,
மதுரை மாவட்டம்.
--- எதிர்மனுதாரர்/பிரதிவாதி

அறிவிப்பு

மேற்படி மனுதாரர் /வாதி தாக்கல் செய்துள்ள Sec.5-Rule 151 CPC மனுவில் மேற்படி எதிர்மனுதாரர்/ பிரதிவாதி ஆகிய தாங்கள் ஆஜராக 06.06.2025-ம் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது. இதில் தங்களுக்கு ஏதேனும் ஆட்சேபணையிருந்தால் மேற்படி வாய்தா தேதியன்று காலை 10.00 மணிக்கு சமூகம் நீதிமன்றத்தில் தாங்கள் நேரிலோ அல்லது தங்களது வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி தங்களது ஆட்சேபணையை தெரிவித்துக்கொள்ள வேண்டியது. தவறினால் ஒருதலைபட்சமாக தீர்மானிக்கப்படும் என இதன் மூலம் அறிவிக்கலாயிற்று.

R.சங்கர்,M.A.,B.L.,
A.ஆறுமுகம்,B.A.,B.L.,
T.சுகன்யா,B.A.,B.L.,
வழக்கறிஞர்கள், மதுரை.

சிவகங்கை சப் கோர்ட்
O.S. No.4/2020
E.P. No.92/2024

சின்னையா
த/பெ.வெள்ளைச்சாமி
கல்லங்காலப்பட்டி
சிங்கம்புணரி வட்டம்
சிவகங்கை மாவட்டம்
......... மனுதார்/வாதி

எதிர்

நாச்சம்மாள், த/பெ.பிரமன்
கல்லங்காலப்பட்டி
சிங்கம்புணரி வட்டம்
சிவகங்கை மாவட்டம்
......... எதிர்மனுதார்/பிரதிவாதி

அறிவிப்பு

இந்த நம்பரில் மனுதார்/வாதி தாக்கல் செய்த நிறைவேற்று மனுவின் எதிர்மனுதார்/பிரதிவாதி ஆஜராக 10.06.2025ந் தேதி வாய்தா ஏற்பட்டுள்ளது எனவே தாங்கள் அன்று காலை 10.00 மணிக்கு ஷை நீதிமன்றத்தில் நேரில் ஆஜராகி தங்களின் ஆட்சேபனையை தெரிவித்துக் கொள்ள வேண்டியது தவறும் பட்சத்தில் தங்கள் மீது ஒருதலைப் பட்சமாக வழக்கு தீர்மானிக்கப்படும் என்பதை இதன் மூலம் அறியவும்.

எம்.அண்ணாமலை பி.ஏ.பி.எல்
அட்வகேட்டுகள்/சிவகங்கை.

## வாள்வச்சகோஷ்டம் முதல் நிலை பேரூராட்சி
கன்னியாகுமரி மாவட்டம்
TURIP 2025-2026

ந.க.எண்.83/2025/அ1 ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு நாள்: 26.05.2025

கன்னியாகுமரி மாவட்டம், வாள்வச்சகோஷ்டம் முதல் நிலை பேரூராட்சியில் TURIP 2025-26 திட்டத்தின் கீழ் ரூ. 89.00 இலட்சம் மதிப்பீட்டில் இரவிபுதூர்கடை ஜங்ஷன் முதல் சந்தை வழி மஞ்சாடி செல்லும் சாலை காங்கிரீட்தளம் அமைத்தல். பெருங்குளம் முதல் நடையன்திருத்தி சாலை காங்கிரீட்தளம் அமைத்தல். பெரியதறவிளை முதல் ஆலத்துறை ஜங்ஷன் சாலை காங்கிரீட்தளம் அமைத்தல். மானான்கண்ணி முதல் குழிவிளை சாலை காங்கிரீட்தளம் அமைத்தல் வேலைக்கு 29.05.2025 வியாழக்கிழமை பிற்பகல் 3.00 மணிக்கு நடைபெற இருந்த டெண்டரானது நிர்வாக காரணங்களால் 17.06.2025 செவ்வாய்கிழமை அன்று ஒத்திவைக்கப்பட்டுள்ளது. மேற்படி டெண்டரானது 17.06.2025 அன்று செவ்வாய்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை இப்பேரூராட்சி செயல் அலுவலர் அவர்களால் இ-டெண்டரிங் முறையில் ஒப்பந்தப்புள்ளி வரவேற்கப்படுகின்றது. ஒப்பந்தப்புள்ளி படிவம் வேண்டுவோர் 17.06.2025–ம் தேதி செவ்வாய்கிழமை பிற்பகல் 3.00 மணி வரை https://tntenders.gov.in, என்ற இணையதளம் மூலம் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம். இதர விவரங்களை பேரூராட்சி அலுவலகத்தில் வேலை நாட்களில் தெரிந்து கொள்ளலாம்.

செயல் அலுவலர்
வாள்வச்சகோஷ்டம் முதல்நிலை பேரூராட்சி.
கன்னியாகுமரி மாவட்டம்.

செ.ம.தொ.இ / 2642 / ஒப்பந்தப்புள்ளி / 2025

# ராஜபாளையம் பி.ஏ.சி. ராமசாமி ராஜா தொழில்நுட்பக்கல்லூரி ஆண்டு விழா



**ராஜபாளையம், மே 29-**

ராஜபாளையம் பி.ஏ.சி. இராமசாமி ராஜா தொழில் நுட்பக் கல்லூரியில் 1975-ம் ஆண்டு படித்து முடித்த முன்னாள் மாணவர்கள் தாங்கள் கல்வி பயின்று 50 ஆண்டுகள் நிறைவடைந்ததை முன்னிட்டு அதனை பொன்விழா ஆண்டாக கல்லூரியில் வைத்து சிறப்பாக கொண்டாடினார்கள். நாடு முழுவதும் இருந்து 65 முன்னாள் மாணவர்கள் தங்களது குடும்பத்துடன் கலந்து கொண்டனர். விழாவிற்கு கல்லூரி தாளாளர் என்.கே. ஸ்ரீகண்டன் ராஜா தலைமை தாங்கி வாழ்த்துரை வழங்கினார்.

ராம்கோ கல்வி குழுமத்தின் முதன்மை செயல் அதிகாரி கிரிதரன், கல்லூரி முதல்வர்(பொ) டாக்டர் கார்த்திகேயன், முன்னாள் முதல்வர் டாக்டர் சீனிவாசன் மற்றும் முன்னாள் மாணவர் சங்க தலைவர் பி. சந்திரசேகர் ராஜா வாழ்த்துரை வழங்கினார்கள். 50 ஆண்டுகளுக்கு முன் தங்களுக்கு பாடம் நடத்திய ஆசிரியர்கள் விழாவில் கலந்து கொண்டு மாணவர்களை வாழ்த்தி பேசினார்கள். விழாவில் ஆசிரியர்கள் கவுரவப் படுத்தப்பட்டனர்.

முன்னாள் மாணவர்கள் தாங்கள் மலரும் நினைவுகளை பகிர்ந்து கொண்டனர். கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது. விழாவிற்கான ஏற்பாடுகளை விழா ஒருங்கிணைப்பாளர்கள் கந்தசாமி மற்றும் பெரியசாமி செய்து இருந்தனர்.

## வத்திராயிருப்பு வட்டத்தில்

# உங்களைத்தேடி உங்கள் ஊரில் திட்டம்: கலெக்டர் நேரில் ஆய்வு



**விருதுநகர், மே 29-**

விருதுநகர் மாவட்டத்தில், மாவட்ட கலெக்டர், அரசு அலுவலர்கள் ஒவ்வொரு மாதமும் ஒரு நாள் வட்டம் அளவில் தங்கி, கள ஆய்வில் ஈடுபட்டு, அரசு அலுவலகங்களை ஆய்வு செய்து, மக்களின் குறைகளைக் கேட்டறிந்து, அரசின் அனைத்து நலத் திட்டங்களும், சேவைகளும், தங்கு தடையின்றி மக்களைச் சென்று அடைவதை உறுதி செய்து வருகின்றனர்.

அதன்படி, விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு வட்டத்தில் "உங்களைத் தேடி உங்கள் ஊரில்" என்ற புதிய திட்டம் முகாமானது இன்று 28-ம் தேதி காலை 9 மணி முதல் மறுநாள் 29-ம் தேதி வரை காலை 9 மணி வரை நடைபெற்று வருகிறது. இந்த முகாமின் முதல் நாளான இன்று, மாவட்ட கலெக்டர், பல்வேறு அரசுத்துறை அலுவலர்கள் அரசின் திட்டங்கள், செயல்பாடுகளை விரைவுபடுத்தவும் மற்றும் வழங்கப்படும் சேவைகளின் தரத்தை மேம்படுத்தவும் கள ஆய்வு மேற்கொண்டு வருகின்றனர். அதன்படி, வத்திராயிருப்பு ஊராட்சி ஒன்றியம், கோட்டையூர் ஊராட்சியில் வருவாய் ஆய்வாளர் அலுவலகத்தினை பார்வையிட்டு, அங்குள்ள பதிவேடுகள் மற்றும் கோப்புகளை மாவட்ட கலெக்டர் ஆய்வு செய்தார்.

மேலும், மகாராஜபுரம் ஊராட்சி தானிப்பாறை லிங்கம் கோவில் அருகில் புதிதாக பாலம் கட்டப்படவுள்ள இடத்தினை மாவட்ட கலெக்டர் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். பின்னர், இலவச வீட்டு மனை பட்டா 6 பயனாளிகளுக்கும், நத்தம் பட்டா மாறுதல் 31 பயனாளிகளுக்கும், சமூக பாதுகாப்பு திட்டம் உதவித் தொகை 9 பயனாளிகளுக்கும், புதிய குடும்ப மின்னணு அட்டை 40 பயனாளிகளுக்கும், பிறப்பு சான்று பதிவு 4 பயனாளிகளுக்கும் என மொத்தம் 90 பயனாளிகளுக்கு நலத் திட்ட உதவிகளை மாவட்ட கலெக்டர் வழங்கினார்.

மேலும், அனைத்து ஊராட்சிகளில் மேற்கொள்ள வேண்டிய குடிநீர், சுகாதாரம் மற்றும் சாலைப் பணிகள், அரசின் திட்டங்கள் மற்றும் சேவைகள் உரிய பயனாளிகளை சென்றடைவதை உறுதி செய்வது குறித்து அனைத்து அரசு அலுவலர்களுடனான ஆலோசனைக் கூட்டம் மாவட்ட கலெக்டர் ஜெயசீலன், தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில், சிவகாசி சார் ஆட்சியர் ப்ரியா ரவிச்சந்திரன், மாவட்ட காவல் கண்காணிப்பாளர் தகண்ணன், மாவட்ட வருவாய் அலுவலர் ராஜேந்திரன், தனித்துணை ஆட்சியர் காளிமுத்து, வட்டாட்சியர், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் உட்பட பல்வேறு துறை அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

## காணவில்லை

கடந்த 15.05.2025ந் தேதி கீழமங்களம் கிராத்திலிருந்து ஒக்கூர் அருகே ஜெராக்ஸ் எடுக்க வரும்பேது கைபையில் இருந்து அசல் ஆவண எண்.1514/2010, மதகுபட்டி சார்பதிவாளர் அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் தொலைந்துவிட்டது. மேற்படி அசல் ஆவணத்தினை யாரேனும் கண்டெடுத்தால் கீழ்கண்ட முகவரியில் ஒப்படைக்குமாறு கேட்டுக்கொள்கிறேன்.

ராமக்கிருஷ்ணன்
180, காளையார்மங்களம்
காளையார்மங்களம் போஸ்ட்
சிவகங்கை
செல் எண்.8012403507

தமிழ்நாடு அரசு
## பொதுப்பணித்துறை
கட்டடம் (க&ப) வட்டம் திருச்சி-1.

மின்னணு ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு எண் : 05 க.பொ/க (க & ப) வட்டம். / திருச்சி /2025-2026/ நாள் : 27.05.2025
இனவிலை முறை
ஒப்பந்தவகை : ஒட்டுமொத்தம்

தமிழ்நாடு ஆளுநருக்காகவும் அவர் சார்பாகவும் கண்காணிப்புப்பொறியாளர், பொதுப்பணித்துறை, கட்டடம் (க&ப) வட்டம் திருச்சி-1 அவர்களால் பொதுப்பணித்துறையில் தகுந்த வகுப்பில் பதிவு செய்துள்ள ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கீழ்காணும் பணிக்கான மின்னணு ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.

| வ. எண் | பணியின் பெயர் | பணியின் தோராய மதிப்பு தொகை (ரூபாய் இலட்சத்தில்) | முன்வைப்புத் தொகை | ஒப்பந்த காலம் | பணி செய்ய தகுதியான ஒப்பந்ததாரர் வகுப்பு |
|---|---|---|---|---|---|
| 1. | அரியலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் அரசு மாவட்ட தலைமை மருத்துவமனையில் [illegible] | ரூ. 88.30 | ரூ. 54,200/- | 7 மாதங்கள் | வகுப்பு IV மற்றும் அதற்கு மேல் |

[illegible]

கண்காணிப்புப் பொறியாளர் பொது,
கட்டடம் (க & ப) வட்டம் திருச்சி-1.

தமிழ்நாடு அரசு
## அந்தியூர் சிறப்புநிலை பேரூராட்சி
ஈரோடு மாவட்டம் – பேரூராட்சிகள் நிர்வாகம்
மூலதன மானிய நிதி (CGF) 2025-2026
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண். 296/2025 நாள்: 29.05.2025

1. முழுமையான விவரங்களுக்கு https://tntenders.gov.in [illegible]
2. ஈரோடு மாவட்டம், அந்தியூர் பேரூராட்சி [illegible]

| வ. எண். | வேலையின் பெயர் | மதிப்பீடு தொகை ரூ. இலட்சத்தில் | முன்வைப்புத் தொகை ரூ. (1%) |
|---|---|---|---|
| 1 | அந்தியூர் பேரூராட்சிக்குட்பட்ட சர்வே எண். 1619/5–ல் [illegible] | 368.00 | ரூ.3,68,000/- |

3. [illegible] 29.05.2025 [illegible] 17.06.2025 [illegible]
4. [illegible] 17.06.2025 [illegible]

[illegible]
அந்தியூர் சிறப்புநிலை பேரூராட்சி, ஈரோடு மாவட்டம்.

தமிழ்நாடு அரசு - பொதுப்பணித்துறை
கண்காணிப்புப் பொறியாளர் அலுவலகம், பொது, மருத்துவ கட்டடங்கள் வட்டம், சென்னை-5

[illegible]

கன்னியாகுமரி மாவட்டம்
## களியக்காவிளை தேர்வு நிலை பேரூராட்சி
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு

ந.க.எண்.145/2025/அ1 தேதி: 26.05.2025

[illegible]

பணியின் பெயர்: குன்னுவிளை, ஆர்.சி.தெரு கைதக்குழி சாலை சிமெண்ட் காங்கிரீட் தளம் அமைத்தல்.

| | | | |
|---|---|---|---|
| ஒப்பந்த மதிப்பு (ரூ. இலட்சத்தில்) : 125.00 | | முன் வைப்புத் தொகை (ரூ.) : 125000 | |
| ஒப்பந்தப்புள்ளி தகுதி : வகுப்பு IV | | பணி முடிக்க வேண்டிய காலம் : 3 மாதங்கள் | |
| 1 | [illegible] | 26.05.2025 | |
| 2 | [illegible] | 30.05.2025 | [illegible] |
| 3 | [illegible] | 17.06.2025 | [illegible] |
| 4 | [illegible] | 18.06.2025 | [illegible] |
| 5 | [illegible] | 20.06.2025 | [illegible] |

[illegible]

களியக்காவிளை தேர்வு நிலை பேரூராட்சி, கன்னியாகுமரி மாவட்டம்

செ.ம.தொ.இ / 2647 / ஒப்பந்தப்புள்ளி / 2025

### இறுதிக்கட்டத்தில் ஐ.பி.எல்:

# குவாலிபையர் முதல் சுற்றில் இன்று பஞ்சாப், ஆர்.சி.பி. அணிகள் மோதல்



**புதுடெல்லி, மே 29-**

ஐபிஎல் 2025: குவாலிபையர் 1 சுற்றுக்கான இன்று நடைபெறும் முதல் போட்டியில் பஞ்சாப், ஆர்.சி.பி. அணிகள் மோதுகிறது.

**தகுதி பெற்ற அணிகள்...**

நடப்பு ஐ.பி.எல். தொடரில் லீக் சுற்று ஆட்டங்கள் முடிவடைந்தன. லீக் போட்டிகளின் முடிவில் பிளே ஆப் சுற்றுக்கு பஞ்சாப், பெங்களூரு, குஜராத், மும்பை ஆகிய அணிகள் தகுதி பெற்றன.

**வெளியேறிய அணிகள்...**

சென்னை, ராஜஸ்தான், ஐதராபாத், கொல்கத்தா, லக்னோ, டெல்லி ஆகிய அணிகள் தொடரில் இருந்து வெளியேறின.

**முதலிடத்தில் பஞ்சாப்**

இந்நிலையில், புள்ளிப் பட்டியலில் முதலிடம் பிடித்த பஞ்சாப், 2வது இடம் பிடித்த ஆர்சிபி அணியுடன் குவாலிபையர் 1 சுற்றில் இன்று மோதுகிறது. நாளை நடைபெறும் எலிமினேட்டர் சுற்றில் குஜராத், மும்பை அணிகள் மோதவுள்ளன.

**பைனலுக்கு தகுதி ...**

இன்று நடைபெறும் போட்டியில் வெற்றி பெறும் அணி நேரடியாக பைனலுக்கு தகுதி பெறும். இதில் தோற்கும் அணியும் மும்பை குஜராத் அணிகள் மோதும் போட்டியில் வெற்றி பெறும் அணியுடன் மோதும். அதில் வெற்றி பெறும் பைனலுக்கு தகுதி பெறும்

இந்த குவாலிபையர் 1 மற்றும் எலிமினேட்டர் போட்டிகள் பஞ்சாப்பின் முல்லன்பூரில் நடைபெறுகிறது. குவாலிபையர்2 சுற்று மற்றும் இறுதிப்போட்டி அகமதாபாத்தில் நடைபெறுகிறது.

### ஆசிய தடகள தொடர் ஓட்டத்தில் இந்தியாவுக்கு தங்கம்:

# மும்முறை தாண்டுதலில் தமிழக வீரர் வெள்ளிப்பதக்கம் வென்று அசத்தல்



**சியோல், மே 29-**

கலப்பு 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் இந்திய அணி சார்பாக சந்தோஷ் குமார், ரூபால், விஷால், சுபா ஆகியோர் கலந்து கொண்டனர். இவர்கள் பந்தய தூரத்தை 3 நிமிடங்கள் 18.12 வினாடிகளில் கடந்து தங்கப் பதக்கத்தை வென்றனர்.

**9 தமிழக வீரர்கள்**

26-வது ஆசிய தடகள சாம்பியன்ஷிப் போட்டி தென்கொரியாவின் குமி நகரில் நேற்று முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. 43 நாடுகளை சேர்ந்த 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீரர், வீராங்கனைகள் பங்கேற்கிறார்கள். இதில் 59 பேர் கொண்ட இந்திய அணியில் 9 தமிழக வீரர்களும் அடங்கும்.

**தங்கப்பதக்கம்**

இந்நிலையில் இன்று நடைபெற்ற கலப்பு 400 மீட்டர் தொடர் ஓட்டத்தில் இந்திய அணி தங்கப்பதக்கம் வென்றுள்ளது. இந்திய அணி சார்பாக சந்தோஷ் குமார், ரூபால், விஷால், சுபா ஆகியோர் கலந்து கொண்டனர். இவர்கள் பந்தய தூரத்தை 3 நிமிடங்கள் 18.12 வினாடிகளில் கடந்து தங்கப் பதக்கத்தை வென்றனர்.

சீன அணி 3 நிமிடம் 20.52 வினாடிகளில் கடந்து வெள்ளிப் பதக்கத்தையும், இலங்கை அணி 3 நிமிடம் 21.95 வினாடிகளில் கடந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றது.

**தமிழக வீரர்**

நேற்று நடந்த 10 ஆயிரம் மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் இந்தியாவின் குல்வீர் சிங் தங்கப்பதக்கமும் 20 கி.மீட்டர் நடைப்பந்தய போட்டியில் செர்வின் வெண்கலப்பதக்கமும் வென்றனர். இந்நிலையில் இன்று நடைபெற்ற மும்முறை தாண்டுதல் விளையாட்டில் தமிழ்நாட்டைச் சேர்ந்த பிரவீன் சித்திரவேல் வெள்ளிப் பதக்கம் வென்று அசத்தியுள்ளார்.

**தங்கப்பதக்கம்**

ஆசிய தடகள சாம்பியன்ஷிப் கலப்பு தொடர் ஓட்ட பந்தயத்தில் இந்தியா தங்கப் பதக்கம் வென்றுள்ளது.

**குவியும் வாழ்த்துகள்**

ஆசிய தடகளத்தில் இந்தியாவுக்கு வெண்கலம் வென்ற தமிழக வீரருக்கு குவியும் வாழ்த்துகள். இந்நிலையில், கலப்பு தொடர் ஓட்ட பந்தயத்தில் இந்திய அணி தங்கப்பதக்கத்தை வென்றுள்ளது. இந்திய அணி வீரர்கள் ரூபால், சந்தோஷ்குமார் தமிழரசன், விஷால், சுபா வெங்கடேசன் ஆகியோர் இந்த் பதக்கத்தை பெற்றுத் தந்துள்ளனர்.

**3.18 நிமிடங்களில் ...**

பந்தய தூரத்தை 3.18 நிமிடங்களில் கடந்து தங்கத்தை தட்டிச் சென்றுள்ளனர். வெள்ளி பதக்கம் சீனாவுக்கு கிடைத்துள்ளது. பந்தய தூரத்தை சீன போட்டியாளர்கள் 3.20 நிமிடங்களில் கடந்தனர். இந்த போட்டியில் இலங்கைக்கு வெண்கலம் கிடைத்தது.

**பிரவீன் சித்திரவேல் ...**

தடகள போட்டியின் மும்முறை தாண்டுதல் போட்டியில் தமிழக வீரர் பிரவீன் சித்திரவேல் வெள்ளிப்பதக்கம் வென்றுள்ளார். மும்முறை தாண்டுதலில் அவர் 16.90 மீட்டர் தாண்டினார். சீனாவின் ஜூஹூ யாமிங் 17.06மீட்டர் தாண்டி தங்கப்பதக்கத்தை தட்டிச் சென்றுள்ளார்.

நடப்பு சாம்பியன் அப்துல்லா அபுபக்கர் 16.72மீ தாண்டி 4வது இடத்தையே பிடித்தார். கொரியாவின் ஜியு மிங் யு, 16.82 மீட்டர் தாண்டி வெண்கலம் வென்றார்.

# ஒரே போட்டியில் 3 வரலாற்று சாதனைகளை படைத்த கோலி



**லக்னோ, மே 29-**

லக்னோ அணிக்கு எதிரான போட்டியில் கோலி 30 பந்துகளில் 54 ரன்கள் அடித்தார். பெங்களூரு அணி புள்ளிப்பட்டியலில் 2 ஆம் இடம் பிடித்தது.

**கடைசி லீக் ...**

ஐ.பி.எல். தொடரின் கடைசி லீக் போட்டி லக்னோவில் நடைபெற்றது. இதில் ஆர்சிபி, லக்னோ அணிகள் பலப்பரீட்சை நடத்தின. டாஸ் வென்ற ஆர்சிபி அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.

**ரிஷப் பண்ட் சதம்**

அதன்படி, முதலில் பேட்டிங் செய்த லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 227 ரன்கள் குவித்தது. சிறப்பாக ஆடிய ரிஷப் பண்ட் சதமடித்து 118 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இதையடுத்து, 228 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஆர்சிபி அணி 18.4 ஓவரில் 230 ரன்களை எடுத்து அபார வெற்றி பெற்றது.

**அதிக அரைசதம் ...**

இப்போட்டியில் சிறப்பாக விளையாடிய கோலி 30 பந்துகளில் 54 ரன்கள் அடித்தார். இதன் மூலம் ஐபிஎல் வரலாற்றில் அதிக அரைசதம் அடித்த வீரர்களின் பட்டியலில் வார்னரை பின்னுக்கு தள்ளி முதலிடம் பிடித்தார். வார்னர் 62 அரைசதங்கள் நடித்துள்ள நிலையில் கோலி 63 அரைசதங்களை அடித்துள்ளார்.

**முதல் வீரர் ...**

மேலும் டி20 கிரிக்கெட்டில் ஒரே அணிக்காக 9000 ரன்களை கடந்த முதல் வீரர், ஆண்கள் டி20 கிரிக்கெட்டில் ஒரே அணிக்காக அதிக ரன்கள் எடுத்தவர்கள் என்ற சாதனையையும் விராட் கோலி படைத்துள்ளார்.

**டி20-யில் ஒரே அணிக்காக அதிக ரன்கள்:**

1) 9030 - விராட் கோலி (பெங்களூரு).
2) 6060 - ரோகித் சர்மா (மும்பை).
3) 5934 - ஜேம்ஸ் வின்ஸ் (ஹாம்ப்ஷயர்).
4) 5528 - சுரேஷ் ரெய்னா (சென்னை).
5) 5314 - எம்.எஸ். தோனி (சென்னை).

**ஒரு சீசனில் 600+ ரன்கள்:**

1) 5 - கோலி (2013, 2016, 2023, 2024, 2025).
2) 4 - கே.எல். ராகுல் (2018, 2020, 2021, 2022).
3) 3 - கிறிஸ் கெய்ல் (2011, 2012, 2013).
4) 3 - டேவிட் வார்னர் (2016, 2017, 2019).

# ம.நீ.ம. மாநிலங்களவை உறுப்பினர் வேட்பாளராக கமல்ஹாசன் தேர்வு

### செயற்குழு கூட்டத்தில் தீர்மானம்



**சென்னை, மே 29-**

வரும் ஜூன் மாதம் நடைபெற இருக்கும் மாநிலங்களவைத் தேர்தலுக்கான மக்கள் நீதி மய்யம் கட்சியின் வேட்பாளராக அக்கட்சித் தலைவர் கமல்ஹாசனை தேர்வு செய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது. மக்கள் நீதி மய்யம் கட்சியின், நிர்வாகக்குழு செயற்குழு கூட்டம் நேற்று (மே 28) நடைபெற்றது. அதில் கீழ்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. அவை வருமாறு: 2024ம் ஆண்டு பாராளுமன்ற பொதுத்தேர்தலின் போது திராவிட முன்னேற்றக் கழகத்துடன் ஏற்படுத்தப்பட்ட உடன்படிக்கையின் அடிப்படையில் மக்கள் நீதி மய்யம் கட்சிக்கு 2025-ம் ஆண்டு நடைபெறவுள்ள பாராளுமன்ற மாநிலங்களவை தேர்தலில் ஒரு இடம் ஒதுக்கப்படும் என முடிவு செய்யப்பட்டது. அதன் அடிப்படையில், வருகிற ஜூன் 19-ம் தேதி நடைபெற இருக்கும் 6 தமிழக பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர்களுக்கான தேர்தலில், மக்கள் நீதி மய்யம் கட்சியின் வேட்பாளராக, கமல்ஹாசனை மக்கள் நீதி மய்யம் கட்சியின் நிர்வாகக் குழு, செயற்குழு ஏகமனதாக முடிவு செய்து அறிவிக்கிறது. மாநிலங்களவை தேர்தலில் மக்கள் நீதி மய்யம் கட்சியின் வேட்பாளரான கமல்ஹாசனுக்கு தங்களது மேலான ஆதரவை நல்கும்படி திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையிலான கூட்டணிக் கட்சிகளை மக்கள் நீதி மய்யம் கட்சியின் நிர்வாகக் குழு, செயற்குழு கேட்டுக்கொள்கிறது. இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

# பீகாரில் இருவர் சுட்டுக்கொலை

**பாட்னா, மே 29-**

பீகார் மாநிலம் சரண் மாவட்டத்தில் அடையாளம் தெரியாத மர்மநபர்கள் நடத்திய துப்பாக்கிச்சூட்டில் இருவர் கொல்லப்பட்டனர்.

பீகாரின் சரண் மாவட்டத்தில் இருவர் பைக்கில் வந்த மர்ம நபர்களால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.இந்த சம்பவம் பழைய பிஎஸ்என்எல் அலுவலகப் பகுதிக்கு அருகில் உள்ள முபாசில் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு நடந்தது. அடையாளம் தெரியாத இருவர் பைக்கில் வந்த மர்ம நபர்களால் துப்பாக்கிச்சூடு நடத்தப்பட்டதாக, முபாசில் காவல் நிலையத்திற்கு தகவல் அளிக்கப்பட்டது.

# புதிய சாதனை படைத்த ஆர்.சி.பி

ஐ.பி.எல். தொடரின் கடைசி லீக் போட்டி லக்னோவில் நடைபெற்றது. இதில் ஆர்சிபி, லக்னோ அணிகள் பலப்பரீட்சை நடத்தின. டாஸ் வென்ற ஆர்சிபி அணி பந்துவீச்சை தேர்வு செய்தது.அதன்படி, முதலில் பேட்டிங் செய்த லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 227 ரன்கள் குவித்தது. சிறப்பாக ஆடிய ரிஷப் பண்ட் சதமடித்து 118 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார்.

இதையடுத்து, 228 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஆர்சிபி அணி 18.4 ஓவரில் 230 ரன்களை எடுத்து அபார வெற்றி பெற்றது. இதன்மூலம் புள்ளிப்பட்டியலில் 2வது இடம்பிடித்து குவாலிபையர் 1 சுற்றுக்கு பெங்களூரு அணி முன்னேறியது. இந்த போட்டியின் வெற்றியின் மூலம் ஐபிஎல் வரலாற்றிலேயே முதல் முறையாக ஒரு தொடரின் தனது அனைத்து போட்டியிலும் வெற்றி பெற்ற அணி என்ற வரலாற்று சாதனையை பெங்களூரு அணி படைத்தது. பெங்களூரு அணி மொத்தமுள்ள 14 போட்டிகளில், அதன் 7 அவே போட்டிகளிலும் வெற்றி பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

# லக்ஷயாசென் காயம்



ஆண்களுக்கான முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் லக்ஷயா சென், தைவானை சேர்ந்த லின்னும் மோதினர். இந்த ஆட்டத்தில் முதல் செட்டை லக்ஷ்யா கைப் பற்றினார். சிங்கப்பூர் ஓபன் சர்வதேச பேட்மிண்டன் போட்டி சிங்கப்பூர் உள்விளையாட்டு அரங்கில் நேற்று முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது.

இதில் இன்று நடைபெற்ற ஆண்களுக்கான முதல் சுற்று ஆட்டம் ஒன்றில் இந்தியாவின் லக்ஷயா சென் மற்றும் தைவானை சேர்ந்த லின்னும் மோதினர். இந்த ஆட்டத்தில் முதல் செட்டை லக்ஷ்யா கைப்பற்றினார். 2-வது செட்டை லின் கைப்பற்றினார். வெற்றியாளரை தீர்மானிக்கும் கடைசி செட் விளையாடி கொண்டிருக்கும் போது லக்ஷயா காயம் காரணமாக பாதிலேயே வெளியேறினார்.

# ரிஷப்பண்ட் மகிழ்ச்சி

இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கு முன்பு பேட்டிங்கில் நல்ல நிலைக்கு திரும்பியது மகிழ்ச்சி அளிக்கிறது. நான் ஒரு பெரிய இன்னிங்ஸ் விளையாட வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தேன். ஐ.பி.எல். வரலாற்றில் அதிக (ரூ.27 கோடி ) தொகைக்கு ஏலத்தில் எடுக்கப்பட்ட ரிஷப்பண்ட் தனது மோசமான பேட்டிங்கால் கடும் விமர்சனத்துக்கு உள்ளாகி உள்ளார். நேற்றைய கடைசி லீக்கில் பெங்களூரு அணிக்கு எதிராக அவர் சதம் அடித்தார்.

ரிஷப்பண்ட் 61 பந்தில் 118 ரன் (11 பவுண்டரி, 8 சிக்சர்) எடுத்தார். இங்கிலாந்து டெஸ்ட் தொடருக்கு முன்பு பேட்டிங்கில் நல்ல நிலைக்கு திரும்பியது மகிழ்ச்சி அளிக்கிறது. சில நாட்களுக்கு ஓய்வு எடுக்க போகிறேன். கிரிக்கெட்டை பற்றி யோசிக்க வேண்டாம். இங்கிலாந்து டெஸ்ட் தொடர் வரப் போகிறது. அதற்காக நல்ல மனநிலையில் தயாராகி வருகிறேன்.

# எனது குரு தினேஷ் கார்த்திக்

ஐபி.எல். தொடரின் கடைசி லீக் போட்டி லக்னோவில் நடைபெற்றது. இதில் முதலில் பேட்டிங் செய்த லக்னோ சூப்பர் ஜெயண்ட்ஸ் அணி நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 3 விக்கெட்டுக்கு 227 ரன்கள் குவித்தது. சிறப்பாக ஆடிய ரிஷப் பண்ட் சதமடித்து 118 ரன்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தார். இதையடுத்து, 228 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஆர்சிபி அணி 18.4 ஓவரில் 230 ரன்களை எடுத்து அபார வெற்றி பெற்றது. இதன்மூலம் புள்ளிப்பட்டியலில் 2வது இடம்பிடித்து குவாலிபையர் 1 சுற்றுக்கு பெங்களூரு அணி முன்னேறியது.

ஜித்தேஷ் சர்மா 33 பந்தில் 85 ரன்கள் குவித்து ஆட்டநாயகன் விருதை வென்றார். ஆட்டநாயகன் விருதை வென்ற பின்பு பேசிய ஜித்தேஷ் சர்மா, "விராட் கோலி ஆட்டமிழந்ததும், கடைசி வரை நின்று விளையாட வேண்டும் என்பதுதான் மனதில் தோன்றியது. எனது குரு, வழிகாட்டி தினேஷ் கார்த்திக் அண்ணா அதைதான் என்னிடம் தொடர்ந்து கூறுவார். 'உன்னால் முடியும். எந்த ஒரு சூழலாக இருந்தாலும் ஆட்டத்தை முடித்துக் கொடுக்கும் சக்தி உன்னிடம் உள்ளது' என தினேஷ் கார்த்திக் என்னை ஊக்கப்படுத்தி வந்தார். அவரால் தான் இது சாத்தியமானது" என்று உருக்கமாக தெரிவித்தார்.



**முதல்வர் மு.க. ஸ்டாலினை நேற்று தலைமைச் செயலகத்தில், கூட்டுறவு மற்றும் பொதுத்துறை சர்க்கரை ஆலைகளுக்கு கரும்பு வழங்கிய 5920 விவசாயிகள் பயன்பெறும் வகையில் கரும்பு நிலுவைத் தொகை 97.77 கோடி ரூபாய் உடனடியாக விவசாயிகளுக்கு வழங்க உத்தரவிட்டு, நிலுவைத்தொகை பெற்று பயனடைந்த தி.மலை, தர்மபுரி, வேலூர், இராணிப்பேட்டை, நாமக்கல், சேலம், காஞ்சிபுரம், திருவள்ளூர், விழுப்புரம், கள்ளக்குறிச்சி, கடலூர் ஆகிய மாவட்டங்களைச் சேர்ந்த விவசாயிகள் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.**

### கிருஷ்ணகிரி அ.தி.மு.க. எம்.எல்.ஏ.

# வெற்றியை எதிர்த்து தொடரப்பட்ட தேர்தல் வழக்கு: ஐகோர்ட் தள்ளுபடி

**சென்னை, மே 29-**

கிருஷ்ணகிரி சட்டமன்ற தொகுதி அ.தி.மு.க. எம்.எல்.ஏ. அசோக்குமார் வெற்றி பெற்றதை எதிர்த்து தி.மு.க. வேட்பாளர் செங்குட்டுவன் தாக்கல் செய்த தேர்தல் வழக்கை தள்ளுபடி செய்து சென்னை உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்துள்ளது.

கடந்த 2021-ம் ஆண்டு சட்டமன்ற தேர்தலில் கிருஷ்ணகிரி தொகுதியில் அ.தி.மு.க. சார்பில் போட்டியிட்ட அசோக்குமார், 794 வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றார். அவரது வெற்றியை செல்லாது என அறிவிக்கக் கோரி அந்தத் தொகுதியின் திமுக வேட்பாளர் செங்குட்டுவன், சென்னை உயர் நீதிமன்றத்தில் தேர்தல் வழக்கு தாக்கல் செய்திருந்தார். அந்த மனுவில், "வாக்காளர்களுக்கு பணம் கொடுத்தும், அரசு இயந்திரத்தை தனது பிரச்சாரத்துக்கு பயன்படுத்தியும் அசோக் குமார் தேர்தலில் வெற்றி பெற்றுள்ளார்.

வேட்புமனுவில் சொத்துக்கள் குறித்த விவரங்களை மறைத்துள்ளார். தேர்தல் ஆணையம் நிர்ணயித்துள்ள வரம்பை மீறி செலவிட்டுள்ளார். தபால் வாக்குகள் காரணமின்றி நிராகரிக்கப்பட்டுள்ளது. வாக்கு எண்ணிக்கை முறையாக நடக்கவில்லை," எனக் குற்றம்சாட்டியிருந்தார்.

இந்த தேர்தல் வழக்கில் கூறப்பட்டிருந்த குற்றச்சாட்டுகள் தவறானவை என அ.தி.மு.க. எம்.எல்.ஏ. அசோக்குமார் தரப்பில் மறுக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் வாக்கு எண்ணிக்கையின் போது நிராகரிக்கப்பட்ட 605 தபால் வாக்குகளையும் மறு எண்ணிக்கை செய்ய வேண்டும் என்று திமுக வேட்பாளர் செங்குட்டுவன் மனு தாக்கல் செய்திருந்தார்.

இந்த வழக்கை விசாரித்த நீதிபதி பி.டிஆஷா, குறைந்த வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளதால், நிராகரிக்கப்பட்ட தபால் வாக்குகளை சரிபார்த்து மறு வாக்குஎண்ணிக்கை நடத்த உத்தரவிட்டிருந்தார். அதன்படி, மறு எண்ணிக்கை முடித்து தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையின் அடிப்படையில், திமுக வேட்பாளர் செங்குட்டுவன் தாக்கல் செய்த தேர்தல் வழக்கை தள்ளுபடி செய்து நீதிபதி உத்தரவிட்டார்.

# 'ஆபரேஷன் சிந்தூர்' தாக்குதலில் பாக்.கின் 72 ராணுவ நிலைகள் அழிப்பு

### இந்திய எல்லை பாதுகாப்புப்படை தகவல்

**பஹல்காம், மே 29-**

பாகிஸ்தானின் 72 ராணுவ நிலைகள் அழிக்கப்பட்டதாக இந்தியா எல்லை பாதுகாப்புப்படை தெரிவித்துள்ளது.

பஹல்காம் தாக்குதலை தொடர்ந்து பாகிஸ்தான் ராணுவ நிலைகள் மீது இந்தியாவின் முப்படைகள் கடந்த 7-ந் தேதி முதல் 10-ந் தேதி வரை தாக்குதல் நடத்தின. இதனால் ஜம்மு காஷ்மீர் எல்லைப் பகுதிகளில் இந்தியா, பாகிஸ்தான் ராணுவங்களுக்கு இடையே மிகக் கடுமையான சண்டை நடைபெற்றது. ஆபரேஷன் சிந்தூர் என்ற பெயரில் இந்திய ராணுவம் அதிதீவிர தாக்குதல்களை நடத்தியது.

இதுகுறித்து ஜம்மு பிராந்திய பி.எஸ்.எப். ஐ.ஜி. சுஷாங்க் ஆனந்த் ஜம்முவில் நிருபர்களிடம் கூறியதாவது:-

பாகிஸ்தான் ராணுவத்துக்கு எதிரான தாக்குதலின்போது அதிநவீன ஆயுதங்களை பயன்படுத்தினோம். குறிப்பாக பி.எஸ்.எப். வீரர்கள் வித்வன்ஸக் துப்பாக்கிகளை பயன்படுத்தினர். இதன்மூலம் 1,800 கி.மீ. தொலைவு இலக்குகளை துல்லியமாக குறிவைத்து சுட முடியும். தானியங்கி ராக்கெட் லாஞ்சர் மூலம் சக்திவாய்ந்த குண்டுகள் வீசப்பட்டன. இதன்மூலம் 2,100 தொலைவு வரையிலான இலக்குகளை மிகத் துல்லியமாக தாக்கி அழித்தோம். மேலும் 2.7 எம்எம் விமான எதிர்ப்பு துப்பாக்கிகளையும் பயன்படுத்தினோம். இந்த துப்பாக்கிகள் மூலம் பாகிஸ்தான் ராணுவ டாங்கிகள் மற்றும் டிரோன்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன. இந்த துப்பாக்கிகள் மூலம் ஒரு நிமிடத்தில் 600 முதல் 1000 குண்டுகளை சுட முடியும். ஆபரேஷன் சிந்தூர் ராணுவ நடவடிக்கையின் போது பாகிஸ்தானின் 72 ராணுவ நிலைகள் முழுமையாக தகர்க்கப்பட்டன. மறைந்த எல்லை பாதுகாப்பு படை வீரர்களின் பெயரை, எல்லையில் உள்ள இரண்டு நிலைகளுக்கு சூட்ட முடிவு செய்துள்ளோம். சம்பா பகுதியில் ஒரு நிலைக்கு 'சிந்தூர்' என பெயர் சூட்டப்படவுள்ளது. இவ்வாறு அவர் கூறினார்.

### குஜராத், பஞ்சாப் உள்ளிட்ட

# 4 மாநிலங்களில் இன்று பாதுகாப்பு ஒத்திகை

**புதுடில்லி, மே 29-**

பாகிஸ்தான் எல்லையை ஒட்டி அமைந்துள்ள குஜராத், பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் ஜம்மு காஷ்மீர் மாநிலங்களில் இன்று பாதுகாப்பு ஒத்திகை நடைபெற உள்ளது.

காஷ்மீரில் பஹல்காம் பகுதியில் பாக்., பயங்கரவாதிகள் நடத்திய தாக்குதலில் 26 பேர் சுட்டுக் கொல்லப்பட்டனர். இந்த சம்பவம் இந்தியாவை கடும் கோபத்தில் ஆழ்த்தியது. இதனைத் தொடர்ந்து 'ஆபரேஷன் சிந்தூர்' என்ற பெயரில் பாகிஸ்தான் மற்றும் ஆக்கிரமிப்பு காஷ்மீரில் செயல்படும் பயங்கரவாத முகாம்கள் மீது இந்திய ராணுவம் தாக்குதல் நடத்தியது.இதற்கு முன்னோட்டமாக கடந்த 7 ம் தேதி நாடு முழுவதும் பாதுகாப்பு ஒத்திகை நடந்தது. அப்போது விமான தாக்குதல் தொடர்பான சைரன் ஒலி எழுப்புதல் சரியாக வேலை செய்கிறதா என சரிபார்க்க வேண்டும்.

போர் ஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும் என்பது பற்றி பொது மக்கள் மற்றும் மாணவர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டது. 1971 ல் பாகிஸ்தானுக்கு எதிரான போரின் போது அளிக்கப்பட்ட பயிற்சிக்கு பிறகு 7 ம் தேதி தான் ஒத்திகை நடந்தது. ஆபரேஷன் சிந்தூர்' நடவடிக்கை மூலம் பாகிஸ்தானுக்கு எதிராக எடுக்கப்பட்ட நடவடிக்கை நிறுத்தப்பட்டாலும், இருநாட்டு உறவில் இன்னும் விரிசல் உள்ளது. தாக்குதல் காலத்தில் பாகிஸ்தான் எல்லையை ஒட்டிய இந்திய மாநிலங்களான குஜராத், பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் ஜம்மு காஷ்மீர் மாநிலங்களில் மக்கள் வசிக்கும் இடங்களை குறிவைத்து பாகிஸ்தான் ட்ரோன்களை வீசியது. இதனை இந்திய ராணுவம் முறியடித்தது.

இந்நிலையில், குஜராத், பஞ்சாப், ராஜஸ்தான் மற்றும் ஜம்மு காஷ்மீர் மாநிலங்களில் இன்று ( மே29) மாலை பாதுகாப்பு ஒத்திகை நடைபெற உள்ளது. கட்டுப்பாட்டு அறையின் செயல்பாடுகள் மற்றும் விமான தாக்குதல் தொடர்பான சைரன் ஒலி சரியாக செயல்படுகிறதா? தீயணைப்புத்துறை, மீட்புப்படையினர் மற்றும் ஆபத்துகாலங்களில் மக்களை மீட்பதற்கான திட்டங்கள் அனைத்தும் தயார் நிலையில் உள்ளதா? என்பதை ஆய்வு செய்வதற்காக இந்த ஒத்திகை நடைபெற உள்ளது. இதனையடுத்து மக்கள் அனைவரும் விழிப்புடன் இருக்கும்படி அறிவுறுத்தப்பட்டு உள்ளது.

# கர்நாடக பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் இருவர் கட்சியில் இருந்து நீக்கம்

**பெங்களூரு, மே 29-**

கர்நாடகாவின் உத்தர கன்னடா மாவட்டம் எல்லாபுரா சட்டப்பேரவை தொகுதியின் பா.ஜ.க. எம்.எல்.ஏ. சிவராம் ஹெப்பார் கட்சி மேலிடத்தையும், மாநில தலைவர் விஜயேந்திராவையும் கடந்த சில ஆண்டுகளாக கடுமையாக விமர்சித்தார். இதனால் அவர் தனது பழைய கட்சியான காங்கிரஸுக்கே திரும்ப போவதாகவும் தகவல் வெளியானது.

இதேபோல பெங்களூருவில் உள்ள யஷ்வந்த்பூர் தொகுதியில் எம்.எல்.ஏ. எஸ்.டி. சோமசேகரும் பா.ஜ.க. மாநில தலைமையுடன் மோதலில் ஈடுபட்டார். கர்நாடக பா.ஜ.க. எடியூரப்பாவின் குடும்ப சொத்தாக மாறிவிட்டது என அவர் விமர்சித்தார். இதனால் மாநில தலைவர் விஜயேந்திரா, இருவர் மீதும் நடவடிக்கை எடுக்குமாறு பா.ஜ.க. மேலிடத்துக்கு புகார் அளித்தார்.

இதுகுறித்து பா.ஜ.க.வின் மத்திய ஒழுங்கு நடவடிக்கை குழுவின் செயலாளர் ஓம் பதாக் கூறும்போது, "கர்நாடக பா.ஜ.க. எம்.எல்.ஏ.க்கள் சிவராம் ஹெப்பார், எஸ்.டி.சோமசேகர் ஆகிய இருவரும் கட்சியின் விதிமுறைகளை மீறி செயல்பட்டதால் 6 ஆண்டுகள் பா.ஜ.க.வில் இருந்து இடைநீக்கம் செய்யப்படுகிறார்கள்" என அறிவித்துள்ளார். பா.ஜ.க.வின் இந்த முடிவுக்கு இருவரும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர். கர்நாடக காங்கிரஸ் தலைவரும் துணை முதல்வருமான டி.கே.சிவகுமாரும் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். பா.ஜ.க.வில் இருந்து நீக்கப்பட்ட சிவராம் ஹெப்பார், எஸ்.டி.சோமசேகர் ஆகிய இருவரும் விரைவில் காங்கிரஸில் இணையப் போவதாக தகவல் வெளியாகி உள்ளது. இருவரும் கடந்த 2018-ம் ஆண்டு காங்கிரஸில் இருந்து பா.ஜ.க.வில் இணைந்தவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# சினிமா CINI செய்திகள்

## வனிதா விஜயகுமார் இயக்கும் 'மிஸஸ் & மிஸ்டர்'



வனிதா பிலிம் புரொடக்ஷன்ஸ் நிறுவனம் தயாரித்திருக்கும் மிஸஸ் & மிஸ்டர் (Mrs & Mr) திரைப்படத்தில் ராபர்ட், வனிதா விஜயகுமார், ஸ்ரீமன், ஷகீலா, கணேஷ், ஆர்த்தி கணேஷ், பவர் ஸ்டார் சீனிவாசன், செஃப் தாமு, கும்தாஜ் மற்றும் பலர் நடித்துள்ளனர்.

டி. ராஜபாண்டி - விஷ்ணு ராமகிருஷ்ணன் - டி.ஜி. கபில் இணைந்து ஒளிப்பதிவு செய்திருக்கும் இந்த திரைப்படத்திற்கு ஸ்ரீகாந்த் தேவா இசையமைத்திருக்கிறார்.

ஜூனில் வெளியாகும் இந்த திரைப்படத்தின் இசை மற்றும் முன்னோட்ட வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது.

இதில் நடிகர் அன்பு மயில்சாமி, நடிகை ஃபாத்திமா பாபு, கணேஷ், பவர் ஸ்டார் சீனிவாசன், அம்பிகா, உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். விழாவில் இயக்குநர் வனிதா விஜயகுமார் பேசுகையில், '' சமூக வலைதளங்களில் என்னை பற்றிய விமர்சனங்களை படிப்பேன். ஆனால் கண்டு கொள்ள மாட்டேன். இந்தப் படத்தில் ஷகிலா பேசுவது போல் ஒரு டயலாக் இருக்கும். 'ஒரு பொண்ணு கர்ப்பமாக இருக்கும் போது அம்மாவை விட புருஷன் கூட இருக்கணும் ' என பேசுவார். இது என்னுடைய வாழ்க்கையில் அனுபவித்த விஷயம்.

ஜோவிகாவின் தயாரிப்பில் நான் ஒரு திரைப்படத்தை இயக்குவேன் என்று நினைத்து கூட பார்த்ததில்லை. ஜோவிகா கதாநாயகியாக அறிமுகமாகிறார். அவர் இரண்டு படங்களில் நடிப்பதற்கான ஒப்பந்தங்களில் கையெழுத்திட்டு இருக்கிறார். தெலுங்கில் சூப்பர் ஹிட் படங்களை தயாரித்த சுமந்த் ஆர்ட் புரொடக்ஷன்ஸ் நிறுவனம் சார்பில் தயாரிப்பாளர் எம் எஸ் ராஜூ ஜோவிகாவை அறிமுகப்படுத்துகிறார். அந்தப் படத்திற்கான படப்பிடிப்பு ஜூன் மாதம் முதல் தொடங்குகிறது. வனிதாவின் குழந்தை யார் என்பதை ஜூன் மாதத்தில் திரையரங்குகளில் வருகை தந்து தெரிந்து கொள்ளுங்கள்,'' என்றார்.

## 'வேம்பு' - விமர்சனம்



கோல்டன் சுரேஷ் மற்றும் விஜயலட்சுமி தயாரிப்பில் மஞ்சள் சினிமாஸ் சார்பில் அறிமுக இயக்குநர் ஜஸ்டின் பிரபு இயக்கத்தில் ஹரிகிருஷ்ணன், ஷீலா , மாரிமுத்து, , ஜானகி ஆகியோர் நடிப்பில் வெளியாகி இருக்கும் திரைப்படம் 'வேம்பு' கிருஷ்ணகிரி மாவட்டம் அருகே உள்ள கிராமத்தில் வாழும் நாயகன் ஹரிகிருஷ்ணன் புகைப்பட கலைஞராக ஸ்டுடியோ கடை ஒன்றை நடத்தி வருகிறார். இவரது மாமன் மகள் நாயகி ஷீலா சிலம்பம் மீது ஆர்வம் கொண்ட ஷீலா அதை நன்கு கற்றுக் கொள்கிறார். சிலம்பம் போட்டியில் தேசிய அளவில் கலந்து கொண்டு சாதனை படைக்க வேண்டும் என்ற லட்சியத்தோடு இருக்கிறார். இந்நிலையில் ஹரிகிருஷ்ணனுக்கும் , ஷீலாவிற்கு திருமணம் நடக்கிறது. இந்நிலையில் விபத்து ஒன்றில் ஹரிகிருஷ்ணனுக்கு கண் பார்வை பறிபோகிறது. இதனால் ஷீலா குடும்ப பொறுப்பை ஏற்கிறார் . இறுதியில் நாயகி ஷீலா சிலம்ப போட்டியில் கலந்து கொண்டு தேசிய அளவில் சாதனை படைத்தாரா?

விபத்தினால் ஹரிகிருஷ்ணனுக்கு பறி போன கண் பார்வை மீண்டும் கிடைத்ததா? இல்லையா? என்பதை சொல்லும் படம்தான் 'வேம்பு'. புகைப்பட கலைஞராக நடித்திருக்கும் நாயகன் ஹரிகிருஷ்ணன் இயல்பான நடிப்பில் கதாபாத்திரத்துடன் இணைந்து சிறப்பான நடிப்பை வெளிபடுத்தியுள்ளார் .கிராமத்து பெண்ணாக நடித்திருக்கும் நாயகி ஷீலா துணிச்சலான கதாபாத்திரத்தில் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார். சிலம்பம் சுற்றுவது, கற்று கொடுப்பது ,கண் பார்வையற்ற கணவனை பாசமாக பார்த்து கொள்வது என கதைகேற்றபடி சிறப்பாக நடித்துள்ளார் . அம்மாவாக வரும் ஜானகி , எம்.எல்.ஏவாக வரும் மாரிமுத்து, என மற்ற வேடங்களில் நடித்த அனைவரும் கதைக்கு ஏற்ற தேர்வாக இருக்கிறார்கள். தற்காப்புக் கலையுடன் சேர்ந்து பெண்களுக்கு கல்வியின் முக்கியத்துவத்தை அடிப்படையாக வைத்து திரைப்படத்தை உருவாக்கியிருக்கிறார் இயக்குனர் ஜஸ்டின் பிரபு. இந்தப் படம் சர்வதேச திரைப்பட விழாக்களில் திரையிடப்பட்டுப் பாராட்டுதலைப் பெற்றுள்ளது.

## சான்று பெற்ற விதைகளை பயன்படுத்தினால் மகசூல் பெறலாம்: கலெக்டர் அறிவுறுத்தல்

**ராமநாதபுரம், மே 29-**

ராமநாதபுரம் மாவட்டத்தில் சான்று பெற்ற விதைகளை பயன்படுத்தினால் அதிக மகசூல் பெறலாம் என விவசாயிகளுக்கு வேளாண் துறை அதிகாரி ஆலோசனை தெரிவித்துள்ளார்.

ராமநாதபுரம் மாவட்டத்தில் கடந்த நான்கு ஆண்டுகளில் ராமநாதபுரம் விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்புத் துறையினால் அரசு உற்பத்தியாளர்களால் நெல், சிறுதானியங்கள், பயறு வகைகள் மற்றும் எண்ணெய் வித்துப் பயிர்களில் 2583.57 எக்டர் அளவிற்கு விதைப்பண்ணைகள் பதிவு செய்யப்பட்டு 2857.14 மெ.டன் விதைகள் சான்றளிப்பு செய்யப்பட்டு ஆதார நிலை மற்றும் சான்று நிலை விதைகளாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டுள்ளது. விவசாயிகள் அனைவரும் சான்று பெற்ற விதைகளை பயன்படுத்துவதன் மூலம் அதிக மகசூல் பெறுவதோடு மட்டுமல்லாமல் சான்று பெற்ற விதைகளை உற்பத்தி செய்வதன் மூலம் அதிக வருமானம் ஈட்ட முடியும். உயிர்ம சான்றளிப்பு மூலம் தேசிய உயிர்ம உற்பத்தி திட்டம் மற்றும் பங்கேற்பு உத்திரவாத திட்டம் மூலம் உயிர்ம சான்றிதழ் வழங்குவதில் 2021-22ம்ஆண்டு 979 எக்டர், 2022-23ம் ஆண்ட 992 எக்டர், 2023-24ம் ஆண்டு 2095 எக்டர் மற்றும் 2024-25ம் ஆண்டு 1781 எக்டர் பரப்பளவில் உயிர்ம வேளாண்மை செய்யும் உயிர்ம விவசாயிகளுக்கு உயிர்மச் சான்றிதழ் வழங்கப்பட்டுள்ளது.

2024-25 ஆண்டில் 3 வருடங்கள் உயிர்ம விவசாயம் செய்த விவசாயிகளுக்கு ஊக்கத் தொகையாக ரூ.5 ஆயிரம் வழங்கப்பட்டுள்ளது.

மேலும் உயிர்ம விவசாயிகளின் விளைபொருட்களுக்கு கட்டணமில்லா எஞ்சிய நச்சு பூச்சிக் கொல்லி பரிசோதனை செய்யப்பட்டு வருகிறது- இதன் மூலம் உற்பத்தி செலவை குறைத்து, அதிக வருவாய் ஈட்டி வருகின்றனர். உயிர்ம சான்று விண்ணப்பிக்கும் குழுக்களுக்கு பாராம்பரிய வேளாண் வளர்ச்சித் திட்டத்தின் மூலம் இலவசமாக பதிவு மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே புதிதாக விதைப் பண்ணை அமைத்து விதை உற்பத்தி செய்ய விரும்பும் விவசாயிகள் மற்றும் விதை சுத்திகரிப்பு நிலையம் தொடங்க விருப்பம் உள்ளவர்கள் ராமநாதபுரம் அரசு மருத்துவக் கல்லூரி ஆஸ்பத்திரி எதிரில் உள்ள உழவர் மைய கட்டிடம் முதல் தளத்தில் இயங்கும் விதைச்சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் அலுவலகத்தை அணுகி பயனடையலாம். இந்த தகவலை ராமநாதபுரம் விதைச் சான்றளிப்பு மற்றும் உயிர்மச் சான்றளிப்பு உதவி இயக்குநர் சி.சிவகாமி தெரிவித்தார்.

## தேசிய அளவிலான கராத்தே போட்டியில் சாதனை படைத்த மாணவர்களுக்கு உற்சாக வரவேற்பு



**திருமங்கலம், மே 29-**

கோவாவில் நடைபெற்ற தேசிய அளவிலான கராத்தே போட்டியில் தங்கம், வெள்ளி உள்ளிட்ட 25 பதக்கங்களுக்கு மேல் வென்று சாதனை படைத்த திருமங்கலம் பகுதி மாணவ, மாணவியருக்கு ரயில் நிலையத்தில் உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது.

உலக பாரம்பரிய சோட்டோகான் கராத்தே சம்மேளனத்தின் சார்பில் கோவா மாநிலம் மட்கான் மனோகர் பாரிக்கர் இன்டோர் ஸ்டேடியத்தில் 23 வது தேசிய அளவிலான கராத்தே போட்டிகள் நடைபெற்றது. இதில் இந்தியா முழுவதிலும் பல்வேறு மாநிலங்களைச் சேர்ந்த 300-க்கும் மேற்பட்ட மாணவ, மாணவிகள் ஆர்வமுடன் கலந்து கொண்டனர். இந்த போட்டியில் தமிழகம் சார்பில் 25 பேர் பங்கு பெற்றனர். இதில் தமிழகத்தின் சார்பில் மதுரை மாவட்டம் திருமங்கலத்தை சேர்ந்த உலக பாரம்பரிய சோட்டா கான் கராத்தே சம்மேளனத்தின் தமிழ்நாடு பயிற்சியாளர்கள் பொன்னுச்சாமி (எ) கராத்தே ராஜா மற்றும் இயக்குனர் திருப்பதி ஆகியோர் தலைமையில் திருமங்கலம் சென்டோபுஷி அகாடமி மாணவ, மாணவிகள் கலந்து கொண்டனர். 7 வயது முதல் 18 வயது வரையிலான மாணவர்களுக்கு தனித்தனியாக போட்டிகள் நடைபெற்றது. தனி கட்டா பிரிவு,தனி குமிட்டே பிரிவு உள்ளிட்ட பல்வேறு பிரிவுகளில் களமிறங்கி போட்டியிட்ட திருமங்கலத்தை சேர்ந்த சென்டோபுஷி மார்ஷியல் ஆர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் அகாடமியின் மாணவர்கள் 5 தங்கம், 5 வெள்ளி,15 வெண்கலம் உட்பட 25 பதக்கங்களை வென்று சாதனை படைத்தனர்.

சென்டோபுஷி அகாடமியை சேர்ந்த ஜெய்ஷாஸ்ரீ என்ற மாணவி தொடர்ந்து மூன்று ஆண்டுகளாக தேசிய அளவிலான கராத்தே போட்டியில் தங்கப் பதக்கம் வென்று சாதித்து தங்கப்பதக்கத்தை தன்னிடம் தக்க வைத்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.இதனிடையே தேசிய அளவிலான கராத்தே போட்டியில் வெற்றி பெற்று சாதனை படைத்த மாணவ, மாணவிகள் மைசூர்-தூத்துக்குடி எக்ஸ்பிரஸ் ரயில் மூலம் நேற்று காலை திருமங்கலம் ரயில் நிலையத்திற்கு வருகை தந்தனர்.அப்போது பதக்கங்களை வென்ற மாணவ மாணவிகளுக்கு அவர்களது குடும்பத்தினர் மற்றும் நண்பர்கள் சார்பில் பொன்னாடை போர்த்தி உற்சாக வரவேற்பு அளிக்கப்பட்டது. அத்துடன் பதக்கம் வென்றிட பயிற்சியளித்த சென்டோபுஷி மார்ஷியல் ஆர்ட்ஸ் ஸ்போர்ட்ஸ் அகாடமி நிறுவனர் பொன்னுச்சாமி (எ) கராத்தே ராஜா, இயக்குனர் திருப்பதி ஆகியோருக்கு பாராட்டு தெரிவிக்கப்பட்டது.இந்த தேசிய அளவிலான போட்டியில் வெற்றி பெற்ற மாணவ, மாணவியர் அனைவரும் விரைவில் நடைபெறவுள்ள சர்வதேச அளவிலான கராத்தே போட்டியில் பங்கேற்க உள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது.

## மற்ற படங்களுக்கும் இசையமைப்பேன்: விஜய் ஆண்டனி



விஜய் ஆண்டனி பிலிம் கார்ப்பரேஷன் சார்பில் மீரா விஜய் ஆண்டனி தயாரித்துள்ள படம் 'மார்கன்'. இதில் விஜய் ஆண்டனி கதாநாயகனாக நடித்துள்ளார். பல படங்களுக்கு எடிட்டிங் செய்துள்ள முன்னணி எடிட்டர் லியோ ஜான் பால் இந்தப் படத்தை இயக்கியுள்ளார்.

இதில் விஜய் ஆண்டனியின் சகோதரர் அஜய் திஷான் முக்கிய வில்லனாக அறிமுகமாகிறார். மேலும் சமுத்திரக்கனி, மகாநதி சங்கர், பிரித்திகா, வினோத் சாகர், பிரிகிதா, அர்ச்சனா, கனிமொழி உட்பட பலர் நடித்துள்ளனர். படத்தின் இசையையும் விஜய் ஆண்டனியே மேற்கொண்டுள்ளார்.

சஸ்பென்ஸ் திரில்லராக உருவாகியுள்ள இப்படம் வரும் ஜூன் மாதம் 27 ஆம் தேதி வெளியாக உள்ளது. இந்த நிலையில் படத்தின் இசை மற்றும் ட்ரெய்லர் வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. இந்த விழாவில் சிறப்பு விருந்தினர்களாக இயக்குநர்கள் சசி, நலன் குமாரசாமி, ரவிக்குமார், மிலிந்த் ராவ், சி .வி. குமார், உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். இந்த விழாவில் விஜய் ஆண்டனி பேசுகையில், நான் வரிசையாக படங்களில் நடிப்பதும், படத்தை தயாரிப்பதும் மகிழ்ச்சியாக இருக்கிறது. பணம் அதிகமாக வைத்துக் கொண்டு படத்தை எடுக்கவில்லை. கடன் வாங்கி படத்தை எடுத்து வருகிறோம். ஒழுங்காக வட்டி கட்டுவதால் எப்பொழுது கேட்டாலும் பணம் கொடுக்கிறார்கள்..

தொடர்ந்து படங்களில் நடிப்பது, தயாரிப்பது என பிஸியாக இருந்ததால் இசையில் கவனம் செலுத்த முடியவில்லை. இனிவரும் காலங்களில் நிறைய படங்களுக்கு இசையமைக்க முடிவு செய்துள்ளேன். என்னுடைய படங்களை தவிர்த்து பிற நடிகர்களின் படங்களுக்கும் இசையமைக்க உள்ளேன். இந்த ஆண்டு மட்டும் எனது இசையில் நான்கு படங்கள் ரிலீஸ் ஆகும்.

ஒவ்வொரு படங்களின் புரோமோஷனுக்கு வரும் போது அந்த படத்தில் நான் எந்த கேரக்டரில் நடிக்கிறேனோ அந்த கெட்டப்பில் வருகிறேன். இதற்கு காரணம் அந்த படம் குறித்த ஆர்வம் மக்களிடம் ஏற்படும் என்பதற்காக தான். இந்த படத்தில் தீக்காயங்கள் ஏற்பட்ட முகத்துடன் நடித்திருக்கிறேன் அதனால் அந்த தோற்றத்தில் வந்துள்ளேன். வரும் ஜூன் 27ஆம் தேதி படம் வெளியாகிறது. ரசிகர்களுக்கு நல்ல சஸ்பென்ஸ் திரில்லர் படமாக இது நிச்சயமாக அமையும்.'' என்றார்.

## பிரபு மற்றும் வெற்றி இணையும் ராஜபுத்திரன்




கிரசென்ட் சினி கிரியேஷன்ஸ் சார்பில் கே. எம் .சபி தயாரிக்க, இளைய திலகம் பிரபுவும் வெற்றியும் தந்தை மகனாக நடிக்க, நாயகியாக கிருஷ்ண பிரியா நடிக்கும் படம் ராஜபுத்திரன் . கோமல் குமார், மன்சூர் அலிகான், இமான் அண்ணாச்சி, ஆர். வி .உதயகுமார் ஆகியோர் நடிப்பில் உருவாகியுள்ள படம் 'ராஜ புத்திரன். ஆலிவர் டெனி ஒளிப்பதிவு செய்துள்ளார் . மவுஃபுல் ராஜா இசையமைத்ததுள்ளார். பாடல்களை வைரமுத்து மற்றும் மோகன் ராஜன் எழுதியுள்ளனர். மே மாதம் 30 ஆம் தேதி வெளியாக இருக்கும் இப்படத்தின் இசை மற்றும் டிரைலர் வெளியீட்டு விழா சமீபத்தில் நடைபெற்றது. விழாவில் படக்குழுவினருடன் கலைப்புலி எஸ். தாணு உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். படம் பற்றி பேசிய இயக்குனர் மகா கந்தன், சின்னத்தம்பி படத்தில் பிரபு நடித்த கதாபாத்திரம் போல் ராஜபுத்திரன் படத்தில் அவரது கதாபாத்திரம் இருக்கும், அனைத்து தரப்பினருக்கும் குறிப்பாக பெண்களுக்கு இப்படம் பிடிக்கும் விதமாக அமைந்திருக்கிறது என்றார்.

இது முழுக்க ஒரு குடும்பப்படமாகவே உருவாகி இருக்கிறது அத்துடன் காதலும் இருக்கிறது என்றார். பின்னர் இளைய திலகம் பிரபு பேசும்போது..''இதுவரை நான் 74 புதுமுக இயக்குனர்களை அறிமுகப்படுத்தி இருக்கேன் . இந்தப் படமும் அதில் ஒன்று. இந்தப் படத்தில் நிறைய இளைஞர்களுடன் பணியாற்றினேன். எல்லோரும் அற்புதமான நடிகர்கள்; நல்ல டெக்னீசியன்கள்.. இந்தப் படத்தில் அண்ணன் டி.ராஜேந்தர் பாடிய எனர்ஜியான பாடல் ஒன்றுக்கு நான் ஆடி இருக்கிறேன். ஆரம்பத்தில் நான் ஆட விரும்பவில்லை. ஆனால் வற்புறுத்தி ஆட வைத்து விட்டார்கள் என்றார்.

## சத்யராஜ் - காளி வெங்கட் கூட்டணியில் 'மெட்ராஸ் மேட்னி'




மெட்ராஸ் மோஷன் பிக்சர்ஸ் புரொடக்ஷன்ஸ் நிறுவனம் தயாரிப்பில், இயக்குநர் கார்த்திகேயன் மணி இயக்கத்தில், சத்யராஜ், காளி வெங்கட் நடிப்பில், மிடில் கிளாஸ் வாழக்கையை பிரதிபலிக்கும், அழகான டிராமாவாக உருவாகியுள்ள திரைப்படம் 'மெட்ராஸ் மேட்னி' வரும் ஜூன் 6 ஆம் தேதி உலகமெங்கும் திரையரங்குகளில் வெளியாகவுள்ள நிலையில், இப்படத்தின் பத்திரிக்கையாளர் சந்திப்பு படக்குழுவினர் கலந்துகொள்ள, பத்திரிக்கை ஊடக நண்பர்கள் முன்னிலையில் சமீபத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வினில் ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் தயாரிப்பாளர் எஸ் ஆர் பிரபு பேசியதாவது...

எல்லாருக்கும் வணக்கம். மெட் ராஸ் மேட்னி படத்தை ட்ரீம் வாரியர் பிக்சர்ஸ் நிறுவனத்தின் மூலமா வெளியிடுவதில் மிக்க மகிழ்ச்சி. இன்றைக்கு மொத்த இந்திய சினிமாவும் ஒரு முக்கியமான ஒரு காலகட்டத்தில இருக்குன்னு நினைக்கிறேன்.

சினிமாவின் மார்க்கெட் முழுக்க மாறியிருக்கு, கடைசி ஒரு வருடத்தில் என்ன படம் செய்வது என்பதில் எல்லோரிடமும் குழப்பம் இருக்கிறது, ஆனால் மக்கள் இன்னும் தியேட்டருக்கு நிறைய வந்து படம் பார்க்கறாங்க. நல்ல படங்களை சப்போர்ட் பண்றாங்க. எல்லாரும் ஒரு படம் ஆரம்பிக்கிறப்போ, இந்த படம் மிகப்பெரிய வெற்றி பெறணும். நமக்கு ஒரு அங்கீகாரம் கிடைக்கணும். நம்முடைய கனவு நிறைவேறணும். நிறைய பணம் சம்பாதிக்கணும். பேர சம்பாதிக்கணும் இந்த மாதிரி நிறைய ஒவ்வொருத்தருக்கும் ஒவ்வொரு மாதிரியான விஷயத்தோட ரொம்ப பாசிட்டிவாதான் ஆரம்பிக்கிறோம். ஆனால் ஆரம்பிக்கிற எல்லா படங்களும் அதே மாதிரியான அவுட்புட்டோட வந்து முழுமை பெறுவது இல்ல. மெட்ராஸ் மேட்னி படத்தைப் பொறுத்தவரை, ஒரு மிடில் கிளாஸ் லைஃபை, ரொம்ப எதார்த்தமா அதே நேரத்துல ரசிக்கும்படியா இந்தப்படத்தில் சொல்லியிருக்கிறார்கள். ஒவ்வொரு கேரக்டர்ஸும் நம்ம வாழ்க்கையில நம்ம பார்த்த கேரக்டர்ஸ திரும்பி பார்க்கிற மாதிரி இருந்தது. ஒரு மிடில் கிளாஸ் லைஃப் மேட்னி ஷோவா பாக்குற மாதிரியான ஒரு அனுபவம் தான் இந்தப்படம் என்று பேசினார்.

## ஒட்டன்சத்திரம் காந்தி நகரில் இலவச வீட்டு மனை பட்டா வழங்க ஆய்வு



**ஒட்டன்சத்திரம், மே 29-**

திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் நகராட்சிக்குட்பட்ட 16 வது வார்டு காந்திநகர் விஸ்வநாதநகர்,வினோபா நகர் பகுதியில் உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கள் துறை அமைச்சர் அர. சக்கரபாணி ஆலோசனையின் பேரில் சர்வே எண்142 ல் உள்ள இலவச வீட்டு மனை பட்டா வழங்குவதற்காக வருவாய்த் துறையினர் ஆய்வு செய்தனர். இந்த ஆய்வின் போது துணை வட்டாசியர்முருகேஷ், வருவாய் ஆய்வாளர் பூர்ணிமா, கிராம நிர்வாக அலுவலர் பாபு, கிராம உதவியாளர்கள் விஜய பாஸ்கரன், பைசல் முகமது, நகர்மன்ற உறுப்பினர் பழனிச்சாமி, தி.மு.க. நிர்வாகிகள் சரவணன், பிரபு உள்ளிட்ட வருவாய் ஆய்வாளர் உடன் இருந்தனர்.

## நத்தம் பகவதி அம்மன் கோவில் திருவிழா



**நத்தம்,மே 29-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அசோக் நகரிலுள்ள பகவதி அம்மன் கோவிலில் வைகாசி திருவிழா நடந்தது.இதையொட்டி கடந்த 16-ம் தேதி காலை கணபதி ஹோமம் நடத்தப்பட்டு முகூர்த்தக்கால் ஊன்றப்பட்டது. பின்னர் 19-ம் தேதி கோவிலில் கொடியேற்றப்பட்டு அம்மனுக்கு சிறப்பு அபிஷேகம், அலங்காரம், தீபாராதனைகள் நடந்தன.தொடர்ந்து நத்தம் சந்தனக் கருப்பு கோவிலிலிருந்து கன்னிமார் தீர்த்தம் கொண்டு வரப்பட்டு காப்பு கட்டுதல் நிகழ்ச்சி நடந்தது.தொடர்ந்து 23-ம் தேதி மதியம் அன்னதானமும், மாலையில் 108 திருவிளக்கு பூஜை நடந்தது.

பின்னர் நேற்று முன்தினம் பக்தர்கள் மாவிளக்கு, அக்னி சட்டி, பால்குடம், சந்தனகுடம் எடுத்து வந்து தங்களது நேர்த்திக்கடன்களை செலுத்தினர். தொடர்ந்து அம்மனுக்கு சிறப்பு பூஜைகள் நடந்தன. பின்னர் முளைப்பாரி ஊர்வலம் நடந்தது. தொடர்ந்து அன்றிரவு அம்மன் மின் ரதத்தில் நகர் வலம் வந்தது. இதில் சுற்றுவட்டாரங்களில் இருந்து ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு அம்மனை தரிசனம் செய்தனர். விழாவிற்கான ஏற்பாடுகளை அசோக் நகர் பொதுமக்கள், விழாக் குழுவினர் செய்திருந்தனர்.




● சென்னை திருவொற்றியூரில் நேற்று நடைபெற்ற அரசு விழாவில் தமிழ்நாடு மாநில தலைமை மீன்வள கூட்டுறவு இணையத்தின் மூலம் மகளிர் கூட்டு குழுக்களுக்கு கடன் வழங்கும் "அலைகள்" திட்டத்தை தொடங்கி வைத்து பயனாளிகளுக்கு கடன் உதவித்தொகைகளை முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.

# தமிழக மீனவர்களின் வாழ்வாதாரத்தை காக்க கச்சத்தீவை மீட்புதான் ஒரே வழி

## திருவொற்றியூரில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேச்சு

சென்னை, மே 29-

தமிழக மீனவர்களின் இன்னல்களை போக்க அவர்களின் வாழ்வாதாரத்தை காக்க கச்சதீவை மீட்புதான் ஒரே வழி என்று திருவொற்றியூரில் புதிய மீன்பிடி துறைமுகத்தை திறந்து வைத்து முதல்வர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னை காசிமேடு மீன்பிடித் துறைமுகத்தில் நெரிசல் அதிகமானதையடுத்து கில்நெட் வலை மூலம் பிடிக்கப்படும் சூரை வகை மீன்பிடிக்கும் விசைப் படகுகளைக் கையாள்வதற்கான பிரத்யேக மீன்பிடித்துறைமுகம் திருவொற்றியூரில் ரூ.272 கோடியில் அமைக்கப்பட்டுள்ளது. இதன் திறப்பு விழா நேற்று காலை 10.30 மணிக்கு நடைபெற்றது.

முதல்வர் மு.க.ஸ்டாலின் புதிய மீன்பிடித் துறைமுகத்தைத் திறந்து வைத்து, 2,000 மீனவர்களுக்கு ரூ. 242 கோடியில் கடன், பாக் நீரிணைப்பு மீனவர்களுக்கான சிறப்பு வாழ்வாதாரத் திட்டம் உள்ளிட்ட பல்வேறு நலத் திட்ட உதவிகளை வழங்கினார்.

மேலும் ராமநாதபுரம் தங்கச்சிமடம், ரோச்மா நகர் மீனவ கிராமங்களில் மீன் இறங்கு தளங்களுக்கு அடிக்கல் நாட்டப்பட்டது. தொடர்ந்து புதிய திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டியும், மக்களுக்கு நலத்திட்ட உதவிகளையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார். சூரை மீன்பிடித் துறைமுகம் திறப்பு விழாவில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பேசியதாவது:-

விசைப்படகு மீனவர்களின் வாழ்வாதாரத்தை காக்க வழங்கும் தொகை ரூ. 8 லட்சமாக உயர்த்தப்படும். புதிய மற்றும் மேம்படுத்தப்பட்ட மீன்பிடித்துறைமுகங்கள் அமைக்கும் பணி நடைபெறுகிறது.

நாம் எடுத்த நடவடிக்கைகளால் இதுவரை 1,154 மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டு மீட்கப்பட்டனர். அரசு மீன் பண்ணைகளை மேம்படுத்த ரூ. 46 கோடி நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. மீன்பிடி தடைக்கால நிவாரண தொகை ரூ.5000-லிருந்து ரூ.8000 ஆக உயர்த்தப்பட்டுள்ளது. 1 லட்சத்து 20 ஆயிரம் மீனவர்களுக்கு ரூ.1528 கோடி கடன் வழங்கப்பட்டுள்ளது.

தமிழக மீனவர்களின் படகுகளை மீட்பதற்கான அரசியல் நடவடிக்கைகளை எடுத்து வருகிறோம். படகுகள் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களுக்கு அரசு சார்பில் நிதியுதவி வழங்கப்படுகிறது. மீனவர்களுக்கான அதிக திட்டங்களை செய்த ஒரே மாநிலம் தமிழ்நாடு. மீனவர்களுக்காக இன்னும் பல திட்டங்களை செயல்படுத்த தயாராக இருக்கிறோம்.

இலங்கையால் சிறைபிடிக்கப்பட்ட மீனவர்களை விடுவிக்க பிரதமர் மோடி, வெளியுறவுத்துறை மந்திரிக்கு இதுவரை 76 கடிதங்களை எழுதியுள்ளேன்.

தொடர் வலியுறுத்தல் காரணமாக மீனவர்கள் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். எஞ்சியுள்ள 23 மீனவர்களையும் மீட்க நடவடிக்கை எடுத்து வருகிறோம். தமிழக மீனவர்களின் இன்னல்களை போக்க கச்சத்தீவை மீட்பதே ஒரே வழி. கச்சத்தீவை மீட்க சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றினோம்.

தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமையை நிலைநாட்ட நடவடிக்கை எடுத்து வருகிறோம். அதனால்தான் கச்சத்தீவை மீட்க சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவோற்றியுள்ளோம் என்றார்.



● சென்னை தலைமைச்செயலகத்தில் துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலினை அகில இந்திய கால்பந்து கூட்டமைப்பின் தலைவர் கல்யாண் சௌபே மற்றும் துணைத்தலைவர் என்.எ.ஹரிஸ் ஆகியோர் சந்தித்து தமிழ்நாட்டில் கால்பந்து விளையாட்டினை இளைஞர்களிடம் அதிக அளவில் கொண்டு செல்வது குறித்து கலந்துரையாடினர். இதில் கூடுதல் தலைமைச்செயலாளர் அதுல்யமிஸ்ரா, செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச்செயலாளர் பிரதீப்யாதவ் உடனிருந்தனர்.



● சென்னை நகராட்சி நிர்வாக இயக்குநர் அலுவலக கூட்டரங்கில் நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் கே.என்.நேரு தலைமையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறையில் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தின் மூலம் செயல்படுத்தப்பட்டு வரும் வளர்ச்சித்திட்ட பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் முதன்மைச்செயலாளர் தா.கார்த்திகேயன், மேலாண்மை இயக்குநர் கிரண்குராலா, இயக்குநர் எஸ்.சிவராசு, இயக்குநர் ஆனந்த்மோகன் ஆகியோர் கலந்து கொண்டனர்.




● சென்னை கிண்டி அண்ணா பல்கலைக்கழக வளாகத்தில் நடைபெற்ற நிகழ்ச்சியில் உயர்கல்வித்துறை அமைச்சர் கோவி.செழியன் முன்னிலையில் அண்ணா பல்கலைக்கழகம் மற்றும் Auto Desk நிறுவனத்திற்குமிடையே புரிந்துணர்வு ஒப்பந்தம் கையெழுத்தானது. இந்நிகழ்ச்சியில் உயர்கல்வித்துறை செயலாளர் சி.சமயமூர்த்தி, ஆணையர் எ.சுந்தரவல்லி, ஆணையர் ஜெ.இன்னசென்ட் திவ்யா, மாநில உயர்கல்வி மன்ற துணைத்தலைவர் எம்.பி.விஜயகுமார், அண்ணா பல்கலைக்கழக பதிவாளர் ஜே.பிரகாஷ், இயக்குநர் கான்வே கோ மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



● சென்னை அண்ணா அறிவாலயத்தில் நேற்று முதல்வர் மு.க.ஸ்டாலினை பாராளுமன்ற உறுப்பினரும், மூத்த வழக்கறிஞருமான பி.வில்சன், சேலம் கிழக்கு மாவட்ட செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், ரொக்கையா மாலிக் (எ) கவிஞர் சல்மா ஆகியோர் சந்தித்து மாநிலங்களவை உறுப்பினருக்கான தேர்தலில் வேட்பாளராக அறிவித்ததற்காக நன்றி தெரிவித்து வாழ்த்து பெற்றனர். உடன் சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன், அமைப்புச்செயலாளர் ஆர்.எஸ். பாரதி, செய்தி தொடர்பு தலைவர் டி.கே.எஸ்.இளங்கோவன் ஆகியோர் உள்ளனர்.

### மாநிலங்களவை எம்.பி. வேட்பாளர்கள் யார்?

# அ.தி.மு.க. நிர்வாகிகளுடன் இ.பி.எஸ். இன்று ஆலோசனை

**சென்னை, மே 29-**

அ.தி.மு.க. சார்பில் போட்டியிடவுள்ள மாநிலங்களவை எம்.பி. வேட்பாளர்கள் யார்? என்பது குறித்து கட்சியின் நிர்வாகிகளுடன் பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி இன்று முக்கிய ஆலோசனை நடத்துகிறார்.



தமிழகத்தைச் சேர்ந்த 6 மாநிலங்களவை எம்.பி-க்களின் பதவிக்காலம் வரும் ஜூலை மாதத்துடன் நிறைவடையும் நிலையில், காலியாகும் அந்த ஆறு இடங்களுக்கு தேர்தலை அறிவித்திருக்கிறது இந்திய தேர்தல் ஆணையம். அதன்படி, வரும் ஜூன் 19-ம் தேதி தேர்தல் நடைபெறவுள்ளது. தி.மு.க தரப்பில், வழக்கறிஞர் வில்சன், சேலம் கிழக்கு மாவட்டச் செயலாளர் எஸ்.ஆர்.சிவலிங்கம், கவிஞர் சல்மா ஆகியோர் வேட்பாளராக அறிவிக்கப்பட்டுள்ளனர். தி.மு.க கூட்டணியில் இடம் பெற்றுள்ள மக்கள் நீதி மய்யத்திற்கு ஒரு சீட்டை ஒதுக்கப்பட்டுள்ளது..

இதற்கிடையே மாநிலங்களவை எம்.பி தேர்தலுக்கான வேலைகளில் தி.மு.க தரப்பு மும்முரம் காட்டி வரும் நிலையில், இன்றும், நாளையும் (மே 29,30-ல்) நிர்வாகிகள் கூட்டத்தைக் கூட்டி விவாதிக்கவிருக்கிறார் அ.தி.மு.க பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி. இன்று நடைபெறும் கூட்டத்தில் எடப்பாடி பழனிசாமி, மாநிலங்களவை எம்.பி. தேர்தலுக்கான வேட்பாளர்கள் குறித்து ஆலோசிக்கவிருக்கிறார். "ஜூன் 2-ம் தேதி வேட்புமனு தாக்கல் தொடங்கவிருப்பதால், இந்தக் கூட்டத்தின் முடிவில் வேட்பாளர் பட்டியல் வெளியாகலாம் என தகவல் வெளியாகியுள்ளது.

# வன்கொடுமை வழக்கில்...(1-ம் பக்க தொடர்ச்சி)

(1-ம் பக்க தொடர்ச்சி)

எடுத்து வெளியிடல் போன்ற பாலியல் குற்றங்களுக்காக தகவல் தொழில்நுட்பச் சட்டம், பெண்களுக்கு எதிரான வன்கொடுமை தடுப்புச் சட்டம் மற்றும் பிஎன்எஸ் சட்டத்தின் 12 பிரிவுகளின்கீழ் குற்றச்சாட்டு பதிவு செய்யப்பட்டது.

அதன்பிறகு இந்த வழக்கில் மகளிர் நீதிமன்றத்தில் நீதிபதி எம்.ராஜலட்சுமி முன்பாக கடந்த ஏப்.23 அன்று சாட்சி விசாரணை தொடங்கியது. தினந்தோறும் என்ற அடிப்படையில் நடத்தப்பட்ட இந்த விசாரணையில் காவல்துறை தரப்பில் 29 பேர் சாட்சியம் அளித்தனர். ஞானசேகரன் மீதான குற்றச்சாட்டுகளை நிரூபிக்கும் வகையில் அரசு தரப்பில் 75 சான்று ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டன.

இந்த வழக்கின், அனைத்து சாட்சி விசாரணை மற்றும் குறுக்கு விசாரணைகளும் நிறைவடைந்த பின்னர் கடந்த மே 20 முதல் மே 23 வரை இரு தரப்பிலும் 3 நாட்களில் தங்களது இறுதி வாதங்களை நிறைவு செய்தனர். காவல்துறை தரப்பில் ஆஜரான வழக்கறிஞர் எம்.பி. மேரி ஜெயந்தி, குற்றம்சாட்டப்பட்ட ஞானசேகரனுக்கு எதிரான அனைத்து குற்றச்சாட்டுகளும் ஆதாரப்பூர்வமாக நிரூபிக்கபட்டுள்ளதாகவும் அறிவியல் ரீதியான வலுவான ஆதாரங்கள் உள்ளதாகவும் கூறியதுடன் அதிகபட்ச தண்டனை வழங்க வேண்டும் என வாதிட்டார்.

இருதரப்பு வாதங்களும் நிறைவடைந்த நிலையில், இந்த வழக்கில் மே 28-ம் தேதி (நேற்று) தீர்ப்பு வழங்கப்படும் என சென்னை மகளிர் நீதிமன்ற நீதிபதி எம்.ராஜலட்சுமி ஏற்கெனவே அறிவித்திருந்தார். அதன்படி நேற்று காலை 10.30 மணிக்கு இந்த வழக்கில் ஞானசேகரன் குற்றவாளி என்று நீதிபதி தீர்ப்பளித்தார்.

தண்டனை விவரம் ஜூன் 2-ம் தேதி அறிவிக்கப்படும் என்று நீதிபதி அறிவித்துள்ளார். இந்த வழக்கில் ஞானசேகரன் மீது 11 பிரிவுகளின் கீழ் குற்றஞ்சாட்டப்பட்டது. அத்தனை குற்றச்சாட்டுகளும் நிரூபணமானதாக அறிவித்த நீதிபதி, ஞானசேகரன் குற்றவாளி எனத் தீர்ப்பு வழங்கியுள்ளார்.

இதற்கிடையில், தண்டனை விவரம் குறித்து ஞானசேகரனிடம் நீதிபதி கேட்டபோது, தனக்கு வயதான தாய் இருப்பதாகவும், தனது தொழிலுக்கு நஷ்டம் ஏற்படும் என்பதாலும், குறைந்தபட்ச தண்டனை வழங்க வேண்டுமென குற்றவாளி ஞானசேகரன் நீதிபதியிடம் கண்ணீர் மல்க கோரிக்கை விடுத்துள்ளார்.

ஆனால், அரசுத் தரப்பில் ஞானசேகரனுக்கு உச்சபட்ச தண்டனை வழங்க வேண்டும் என்று வலியுறுத்தப்பட்டுள்ளது.

### நெல், பருப்பு, உளுந்து உள்ளிட்ட

# 14 பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை மேலும் உயர்வு

புதுடெல்லி, மே 29-

நெல் உள்பட 14 பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை உயர்த்தி வழங்க மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளது. அதன்படி 2025-26-ம் ஆண்டுக்கான நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை குவிண்டாலுக்கு ரூ.69 அதிகரித்து ரூ.2,369 ஆக மத்திய அரசு உயர்த்தியுள்ளது.

டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடி தலைமையில் நடைபெற்ற பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவைக் குழு கூட்டத்தில் இந்த முடிவு எடுக்கப்பட்டுள்ளது. இது குறித்து செய்தியாளர்களிடம் தெரிவித்த மத்திய தகவல் மற்றும் ஒளிபரப்பு அமைச்சர் அஸ்வினி வைஷ்ணவ், "2025-26-ம் ஆண்டுக்கான காரீஃப் பருவத்திற்கான நெல்லுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலை 3 சதவீதம் உயர்த்தப்பட்டுள்ளது.

இதன்படி, பொதுவான மற்றும் ஏ தர ரகங்களுக்கான ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.69 அதிகரித்துள்ளது. பொதுவான ரகங்களுக்கான ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.2,369 ஆகவும், ஏ தர ரகங்களுக்கான ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.2,389 ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது.

பருப்பு வகைகளில், துவரம் பருப்பின் ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.450 உயர்த்தப்பட்டு, ரூ.8,000 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. உளுந்தின் குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.400 உயர்த்தப்பட்டுள்ளது. இதன்மூலம், ஒரு குவிண்டால் உளுந்தின் விலை ரூ.7,800 ஆக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. பாசிப்பயறு குறைந்தபட்ச ஆதரவு விலை குவிண்டாலுக்கு ரூ.86 அதிகரிக்கப்பட்டு, ரூ.8768 ஆக விலை உயர்த்தப்பட்டுள்ளது. விவசாயிகளின் விளைபொருட்களுக்கு லாபகரமான விலையை உறுதி செய்வதற்காக, 2025-26-ம் ஆண்டுக்கான காரீஃப் பயிர்களுக்கான குறைந்தபட்ச ஆதரவு விலையை அரசாங்கம் அதிகரித்துள்ளது.

2025-26-ம் ஆண்டுக்கான காரீஃப் பயிர்களுக்கான ஆதரவு விலையில் ஏற்பட்டுள்ள இந்த அதிகரிப்பு, 2018-19-ம் ஆண்டுக்கான மத்திய பட்ஜெட்டில், அகில இந்திய சராசரி உற்பத்தி செலவை விட குறைந்தது 1.5 மடங்கு குறைந்த பட்ச ஆதரவு விலையை நிர்ணயிப்பதற்கான அறிவிப்புக்கு ஏற்ப அமைந்துள்ளது என்று தெரிவித்துள்ளார்.



● தமிழ்நாடு யாதவ மகாசபை தலைவர் நாட்டாமை கே.ஜெயக்குமார், கவுன்சிலர் முத்துமாரி இல்லத்திருமண விழாவில் முன்னாள் அமைச்சர் செல்லூர் கே.ராஜூ, பா.ஜ.க. தலைவர் நயினார் நாகேந்திரன் ஆகியோர் நேரில் கலந்து கொண்டு வாழ்த்து தெரிவித்தனர். அருகில் மணமக்கள் வீட்டார் மற்றும் பிரமுகர்கள் உள்ளனர்.